உ
திருச்சிற்றம்பலம்.

திருச்செங்கோட்டுத்

திருப்பணிமாலை.

இஃது
திருச்செங்கோடு
விவேகதிவாகரன் பத்திராதிபரான
அஷ்டாவதானம்

முத்துசாமிக்கோனால்

பழய பிரதிகளைக்கொண்டு பரிசோதித்தும்,
புதிய செய்யுட்களியற்றிச்சேர்த்தும்,

கோக்கராயன்பேட்டை மிட்டா ஜமீன்தார்
ஸ்ரீமான்
N. தண்டிகைவேல கவுண்டரவர்கள்
பொருளுதவிகொண்டு

சேலம்
சுந்தரவதனி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1913.

பரிதாபி-ஷு தைமீ	விலை அணா 8

உ

திருச்சிற்றம்பலம்.

திருச்செங்கோட்டுத்

திருப்பணிமாலை.

இஃது

திருச்செங்கோடு

விவேகதிவாகரன் யத்திராதிபரான

அஷ்டாவதானம்

முத்துசாமிக்கோனாரால்

பழய பிரதிகளைக்கொண்டு பரிசோதித்தும்,

புதிய செய்யுட்களியற்றிச்சேர்த்தும்,

கோக்கராயன்பேட்டை மிட்டா ஜமீன்தார்

ஸ்ரீமான்

N. தண்டிகைவேல கவுண்டரவர்கள்

பொருளுதவிகொண்டு

சேலம்

சுந்தரவதனி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

பரிதாபி௵ தை௴ விலை அணா 8

உ

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை என்பது சைவசித்தாந்தப் பொருளுண்மை தோன்ற, அம்மையும் அப்பரும் ஒரு திருமேனிகொண்டு எழுந்தருளியிராநின்ற தலமும், திருக்கொடிமாடச் செங்குன்றூர் என ஆளுடைய பிள்ளையார் முதலிய சமயாசாரியர்களாற் புகழ்ந்தோதப்பெற்ற க்ஷேத்திரமுமாகியதிருச்செங்கோட்டிலுள்ள திருக்கோயில், திருக்கோபுரம், மண்டபம், வாகனம், நந்தவனம், வாவி, கூவம், மடம், சத்திரம், ஈசுரருக்கும், குருமார் ஆதியர்க்கும் புரிந்த பணிவிடை முதலிய புண்ணியங்கள், இன்னகாலத்து, இன்ன இன்னரால் இவ்வண்ணஞ் செய்யப்பெற்றன என்பதைத் தமிழ்ச்செய்யுளில் அமைத்துப் பாடப்பெற்றதொரு நூலாகும். இதுபோன்ற திருப்பணிமாலைகள் சிறந்த ஆலயங்களுக்கெல்லாம் பெரியோர்களால் இயற்றப்பட்டுள்ளன என்கிறார்கள். இத்திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை பெரும்பான்மை விருத்தங்களாலுஞ், சிறுபான்மை,வெண்பா, கட்டளைக்கலித்துறை கட்டளைக்கலிப்பாக்களாலும் அமைக்கப்பெற்றது இம்மாலையை ஆக்கியோன் எழுகரைநாட்டு நம்பி என்னும் விருது நாமம்பூண்ட சதாசிவ பண்டிதர் என (இந்நூல் 11-220-ஆம் செய்யுட்கள்) கூறுகின்றன; எனினும் இந்நூலுட் சில செய்யுட்கள் சிறந்துஞ், சில சிறப்பின்றியுங் காணப்படுவதால் பல காலத்துப் பலராற் பாடப்பட்டிருக்கலாமெனக் கருதலாம்.

விஜய நகர ராயர்கள் துரைத்தனம், மதுரைத் துரைத்தனம், மைசூரார் துரைத்தனம், இதுபோல இவ்விடத்துப் பிரபலமடைந்திருந்த வேறு சில சிற்றரசர்களினத்தையுங்கருதி பகுத்த தொகுதிகளாக இந்நூல் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற நூல் பூர்விக திருப்பணிகளின் விவரமாத்திரமே அல்லாது அவ்வச்

சிவபுண்ணியங்களை நடத்திக் கீர்த்திபெற்ற தருமசீலர் பலர் சரித்திரங்களையும், இராஜாங்கம் அடிக்கடி மாறுதலடைய அவ்வப்பொழுது நேர்ந்த கஷ்ட சௌக்கியங்களையும், நாட்டைக் கைக்கொண்ட மன்னர்களின் கொள்கைகளையும்*. தாங்கள், தாங்கள், அருமையாகப் படைத்த பொருள்களைச் செலவிட்டுச் செய்யும் புண்ணியப்பணிகளைத் தங்களுக்கென்று கொள்ளாது அரசனுக்காமாறு அவ்வேந்தன் பெயரால் பிரதிஷ்டித்த இராஜ விசுவாசிகளின் அரிய பெரிய செய்கைகளையும் §, தனக்கென்றுள்ள பொருளை அந்தியகாலத்தில் மனைவி மக்களுக்கே வைக்காது சிவபணிக்குதவும் வைராக்கிய பக்திமான்களின் மனத்திட்பத்தையும்¶, சமயக் கல்வி கற்பித்து பரீக்ஷைபார்த்து மணங்களிகூறும் அபிமானிகளின் ஔதாரிய குணத்தையும் †, விளக்கிக்காட்ட வல்லதாயிருத்தலால். சரித்திராசிரியர்களுக்கும் உதவியாக இருக்குமென இந்நூலைப் போற்றிவைத்தல் வேண்டுமென்று எண்ணினேன் எழுதுவோரால் நேர்ந்த பிசகுகளை நீக்கி சுத்தபாடமாக எழுதிவைத்தல் நலமென்று சுமார் 20வருஷங்களாகத் தேடியும், பிரதி உள்ளவர்கள் இந்நாள்வரைக்கொடுத்தார்களில்லை; ஆனால் திருச்செங்கோடு ஸ்ரீ நாககிரி பண்டிதர் பிரதி·1. குமரமங்கலம் மகா-ா-ா-ஸ்ரீ ஆறுமுக உபாத்தியாயர் பிரதி ஒன்று ஆக இரண்டு பிரதிகள் கிடைத்தன. முன்னையதில் இடையே சில செய்யுட்களில்லை. பின்னையதிற் கடையிற் சில பாட்டுகளில்லை. இத்தகைய பிரதிகளை வைத்துக்கொண்டு ஆராய்ச்சிசெய்து பதிப்பிக்கலாயிற்று. இந்நூலுட் சில இடத்துக் குறிப்பிடுஞ் சகாப்தவருஷங்கள் சரியாக இருக்கவில்லை என்பது கவனித்தற்பாலது. எழுதுவோரால் நேரவும் கூடும். பிரதிகாணாது திருத்தல்முறையன்றென விடுத்தேன் என்க.

சமீப காலத்துநடந்த திருப்பணிகளையும் பிரசுரிக்கவேண்டுமென்று சில புத்திமான்கள் தூண்டினார்கள். அவர்களில் முக்கியமாக எனது அருமை நண்பர் ஸ்ரீநாககிரிபண்டிதரவர்கள் வற்புறுத்

---

* இந்நூல் பாட்டு 132–139–263–264. § 90–91–196–198–315
¶ 381–385 † 253.

தினார்கள். இவ்வெண்ணம் சிறிது எனக்கு யிருந்தமையால், செய்துள்ள திருப்பணியை நம்பத்தரும் ஆதாரம் காட்டினவைகளுக்கு மாத்திரம் கட்டளைக்கலித்துறையாகச்செய்து, இந்நூலின் முன்போக்கை யனுசரித்து, இங்கிலீஷ் துரைத்தனமென மருடமிட்டு, மாட்சிமிகுந்த ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்கள் டில்லியில் நடத்திய மருடதாரண வைபவக்காட்சியன்று, இத் திருச்செங்கோட்டில் என்னால் எழுதிப்படிக்கலான 9-விருத்தங்களையும் இத்துடனிணைத்துப் பதிப்பிக்கலானேன். இம்முயற்சியிலுள்ள குற்றங்குறைகளை ஆன்றோர் எனக்கறிவிப்பினும், நல்ல பிரதிகளையுடையவர்கள் அவற்றை யனுப்பினும் அடுத்தபதிப்பில் திருத்திப் பிரசுரிப்பதோடு அன்னோர்பால் என்றும் நன்றி யறிந்தவனுமாவேன்.

ஆனரரி மாஜிஸ்திரேட்டும், கொக்கராயன்பேட்டை மிட்டா ஜமீன்தாருமான ஸ்ரீமான் N. தண்டிகைவேல கவுண்டரவர்கள், இந்நூலைப் பதிப்பித்ததற்குப் பொருளுதவி செய்தார்கள்.

ஏட்டுப்பிரதியிலிருந்து காகிதத்திலெழுதும் பொழுது உடனிருந்து உபகரித்தவர் திருச்செங்கோடு லோகல் போர்டு பாடசாலை உதவி போதகர் மகா-ள-ஸ்ரீ அர்த்தநாரி பிள்ளை.

இங்ஙனம் பெருஞ் சிவ புண்ணியங்களை நடத்திய தர்மவான்களுடைய திருப்பணி விவரங்களைத் தமிழுலக மறியுமாறு வெளியிடுந் திருப்பணியை எனக்களித்த ஸ்ரீ அர்த்தநாரீசுரப்பெருமானின் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன். சுபம்.

பரிதாபி௵ மார்கழி௴ 17-உ, 12—12—1912.

இங்ஙனம்,
தி. அ. முத்துசாமிக்கோனார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருச்செங்கோட்டுத்,

திருப்பணிமாலை.

பாயிரம்.

விநாயகர் துதி.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

பூமேவு மொருகோடு செவியிரண்டு திருக்கருணைபொழிகண் மூன்று, மாமேவு நாலுமறை முகபடாவைங் கரக்களிற்றை வணக் கஞ் செய்வாம், தேமேவு மரவகிரி யரனடியார் புரிதவமுஞ் சிறப் புங் காணக், கோமேவு திருப்பணிமா லையைத் தமிழாற் பாட வரங்கொடுக்க வென்றே.

வாழ்த்து.

கலிவிருத்தம்.

ஆழி வெற்பு மகிலமு நீடுக
வாழி வேத மறைமநு நீதியு
மேழி மன்னுவி பூதிமெய்ஞ் ஞானநீ
டூழி யூழி யுலகெங்கு மோங்கவே. (2)

மெய்வி யாப சமயம் விளங்குக
பொய் வியாப சமயம் புறம்புக
சைவ ஞானமுந் தானமு நீடுக
தெய்வ மாமறை யோருஞ் சிறக்கவே. (3)

துதியும் அவையடக்கமும்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

புண்டரிகன் றிருமாலுங் கொற்றவையுந் தடவரவும் பூசையேத்தும், மண்டலமெண் பணிமலையார்க் கன்பர்செயுந் திருப்பணியாமாலை பாடகீ; கொண்டலெனக்க விவாணி தாஞரி கணபதியார் குற்றந் தீர்க்கத், தண்டமிழோர் பிழைபொறுக்கச் சண்முகஞ ரெனைக்காக்கத்தக்க தாமால். (4)

சீர்பயிலு மரவகிரி யுமைபாகர் தமக்கடியார்செய்து போற்று மேர்பயிலுந் திருப்பணிமா லையைப்பாடும் படிதமியே னிசைந்த நேர்மை, கார்பயிலுங் கடலேழு முலகேழுந் தலமேழுங் கரத்தில் வாங்கிப், பார்பயிலு மோரெறும்பு நுகர்வனென வுரைக்குமந்தப் படிய தாமால். (5)

வேறு.

பெற்றதாய் தந்தை யுற்றூர் பிள்ளையின் மழலை வாக்கைக்
குற்றமென் றிகழா ரின்பங் கொடுத்துள மகிழ்ந்தே கேட்பர்
சொற்றவ ஞகவேநான் சொன்னபா மாலை தன்னை
நற்றவர் மகிழ்ச்சியாகி நன்றென நவிலுவாரே. (6)

அருட்பணி யான கோதை யர்த்தநா ரீசர் பூசைத்
திருப்பணி செய்து ஞானச் சிந்தைபெற்றவர்க்குத் தோன்றும்
பொருப்பணி கனக மீது பூமிசை மாதர் மீது
விருப்பணி வோரு மிந்நூல் மெய்ப்பொரு ளறிந்தி டாரே (7)

வாசமு நீறு மேறு மதுமலர்த் தும்பை யம்பொற்
றாசொடு சரும மேறுந் தொன்னட மிருடி யாட்டம்
போசனங் கடுவு மேறும் புகழ்பெறு கோதை வாழும்
ஈசருக் குரைத்த நூலொ டென்சொலு மேற லாமே (8)

நூற்பயன்.

திருப்பணி மாலை தன்னைத் திறம்பெற நடத்தி னோர்கள்
விருப்பணி முனிவ ராவர் விண்ணவர்க் கிறைவ ராவர்
பொருப்பணி மாலு மாவர் புண்டரீ கத்த னவர்
கருப்பணி மதனு மாவர் கந்தனு மாவ ரன்றே. (9)

தீதறு தமிழ்சேர் கோதைத் திருப்பணி மாலை தன்னை
ஓதினர் தாமு மின்ன முரையென வுரைத்த பேரும்
மாதொரு பாகர் தம்மை வழுத்தினோர் பதமும் பெற்று
பூதலம் புரப்பர் பின்னும் புரந்தர ராவ ரன்றே. (10)

ஆக்கியோன்.

அண்டர்பணி பணிமலையா னதிசைவ மறையவர்கோ னலம்பாயன், மண்டலமெண் ணெழுகரை நாட்டுநம்பி யெனுநாம வரிசை யாளன், தண்டமிழைத் தெரிந்துணர்ந்த சதாசிவபண்டிதகருணை தழைத்த மேகம், தெண்டிரையி னமுதெனவே திருப்பணிமா லைப்பனுவல் செப்பி னனே. (11)

ஸ்ரீ அர்த்தநாரீசுரர் ரூபத்தியானம்.

ஆசிரிய விருத்தம்.

பொங்கரவ கிரிமீது தேவதீர்த் தத்திற் பொருந்துபங்கய மலர்மிசைப், பொற்பாட கப்பாத நூபுரங் கிண்கிணி புலம்புகுஞ் சிதபாதமும், வெங்கய முரித்தவுடையுங்கனகவாடையும் மேவு பணி யொட்டியானமும், மேலான தனபார முத்தரிக முபவீத மின்மணியு மக்கவடமும், அங்கையுர கங்கதையு மாரகேயூரமும் மணிகடப சரிபவளமும், அழகான தரிசனமு மங்கலிய நாகபட மருணகுண்டல குழைகளும், திங்களணி வேணியுங் கொங்களக பாரமுந் தீயிரவி யிந்துவிழியுஞ், செவ்வாயு முறுவலொடு நாசிகாபரணமுஞ் சிந்தையிலிருத்தல்புரிவாம். (12)

நாகாசல வேலர்துதி.

வேறு.

குஞ்சிமுடிச்சிகை மகரகுண்டலமு நகைமுகமுங் குளிர்ந்த நோக்குஞ், தஞ்சமெனவேலெடுத்த திருக்கரமுங் குக்குடங்கை தரித்தசீரும், மஞ்சணிறத்துகிலுடையு மணியணி பொற்பதக்க முத்து மாலைமார்பும், செஞ்சரணத் திருவழகுந் திசழுரவா சலக் குகனைச் சிந்தைசெய்வாம். (13)

தலவாசதேய்வங்கள் துதி.

வேறு.

சீரணியுநாரி கணபதியை யழகானையைத் திருவட்டவைங் கையோனைச், செங்கைவடிவேலனைக் கைலாசநாதனைத் தேவிபரிமள வல்லியைக், காரணிகொற்றவையை வயிரவனையையனைக் கருணை பொழியழகம்மனைக், கடினவீரேசுரனை நல்லயனை மலையடிக் கந்தனை விநாயகர்களைத், தாரணிதொழுந்திருச் செங்கோடை முருகனைச் சங்கரியிடப்பாகனைத், தவமிகும் பஞ்சலிங்கேசரை மகேசரைச் சைவரைக் கவிவாணரை, யேரணியு மாதிகேசவனை மலைகாவலரை யெந்தைபரிவாரமாரை, யெழிலான குரவோரை யுரவோரை யனைவோரை யிணையடி யிறைஞ்சல்புரிவாம். (14)

பன்னகமிரண்டு மிருமேருவெனவே கண பணங்களை விரித்தமுடிமேல், பாலகரை வந்தியர்க்குதவுசிலையும் பஞ்ச பாண்டவரிருந்த குகையுந், தன்னிகரிலாத மோகினிகஜமும் மாலயச் சைலோத கந்தருநிழல், தலமருவு காளிவரையுங் குகையனேகமுஞ் சஞ்சீவி மூலிவகையும், நன்னெறிபுரிந்த சிவயோகிகளிடங்களும் ஞானமுனிவோர்சாரலும், நற்றேனுடைந்தவரையுஞ் சிகர கோபுரமு நாகேசர் வேலர்பதியுந், தென்னுலவு நாககிரி காமம்மமதன்பூசை செய்தபெரியோரடிகளுந், திக்காயிரஞ்சுனை விசேட தீர்த்தங்களிவை சிந்தையிலிருத்தல் புரிவாம். (15)

வாழ்த்து.

திருவாழ்க கலைவாழ்க கௌரிவாழ்க
தினந்தினமு மண்மடந்தை சிறந்துவாழ்க
குருவாழ்க பணிமலையுங் குகனும்வாழ்க
கோதையுமைபாகர் திருக்கோயில்வாழ்க
தருவாருமரசர் கபணிக்கர்வாழ்க
தானமுடன் குரவோருந் தழைத்துவாழ்க
மருவாருமகம்படிமைத் தளியுளோரும்
வாய்த்தசெங்குந்தருமே வாழ்க வாழ்க. (16)

சீர்வாழ்க முனிவாழ்க தேவர்வாழ்க
திருமாலு மலரயனுஞ் சிறந்துவாழ்க
பார்வாழ்க மலைவாழ்க பரவைவாழ்க
பதினலுபுவன மண்டம்பலவும் வாழ்க
ஊர்வாழ்க வெழுகரைநன் னடும்வாழ்க
உயர்ந்திடு பூந்துறை நாட்டுக்குரியோர்வாழ்க
ஏர்வாழ்க திருப்பணிசெய் திடுவோர் வாழ்க
எல்லவருந்தழைத்தேறி யினிதுவாழ்க. (17)

பாயிரமுற்றிற்று.

பூந்துறை நாடு.

பொன்னடு புகழ்நாடு பொன்னியு முத்தாகதியும் பொருந்துநாடு,
மின்னடை வுடனடுஞ் சங்கரனருமையுடனே மேவுநாடு,
தென்னடுவடநாடு குடநாடு குணநாடெண் டிசையும் போற்றும்,
தொன்னடு வடிவேலர் மலடிகட்கு மகவருள்பூந் துறைநன்னடே

ஏரணியுஞ்சேரகிரிதனை மகவானணையைவிட் டெடுத்த நாடு
சீரணியுமறப்பளியி னம்மையுட னரனடனஞ் செய்தநாடு

நீரணியும் நண்ணுவினங்கமது மலராகி நிறைந்தநாடு
காரணிகர்கோதையுமையொருபாகர்காக்குமெழு கரைநன்னாடே.

செந்திருவுங் கலைமாதும் பூரணியும் தினநடனஞ் செய்தநாடு
மந்தரமொப்பனையான பணிமலையீசரைத் தொழுது வாழுநாடு
இந்திரனு மாலயனுந் தேவர்களும் கோதையில்வந் தேத்துநாடு
சுந்தரமாகிய வேலருமைபாகர் மேவிய பூந் துறை நன்னாடே.(20)

தென்மழையே பொழிநாடுபணிமலையார்க் குபசாரஞ் செய்யுநாடு, பொன்மழையு மன்மழையுங் கவிமழைக்கே யனவரதம் பொழிந்தநாடு, மின்மழையா மெனமதவேள் கணைமழைக்கே பயந்துமிக வேட்குநாடு, தொன்மழைபோற் கருணைசெயு முமைபாகர் வரந்தருபூந் துறைநன்னாடே. (21)

திருச்செங்கோட்டு மலை.

குருக்கோடு நவமணியும் நவநிதியும் நவரசமும் கொழிக்குங்கோடு, தருக்கோடு சுரபியுஞ் சிந்தாமணியுந்தழைத்ததெய்வத் தானமாமால், இருக்கோடு பலகலைக ளாகமங்கள் குரவோர்களிரைக்குங்கோடு, செருக்கோடு முமையரனைப் பிரியாமலினிதிருக்கும் திருச்செங்கோடே. (22)

பொன்கோடு மணிக்கோடு புகற்கோடு பனிக்கோடு புகலுங்கோடு, மன்கோடு தரச்சுரபி தன்கோடு தனிற்கொணர்ந்த வாரையாமால், பன்கோடு குலகோடு பலகோடு மூலகோடு பரவுங்கோடு, தென்கோடு வடகோடு குடகோடு குணகோடெண் டிருச்செங்கோடே. (23)

பூகமலைத்திடுசோலை சூழ்மேருகிரியினுக்குப் போட்டியான
பேகமலையண்டருலகம் புகுதற்கேணியெனப் பெற்றதாமால்
மாகமலை வாணியன மாதுதின நடனமிடு மகிமையான
நாகமலை நாகமலை நாகமலை தனிலினிய நாகமாமே. (24)

கோதையூர்.

பூரகமுங் கும்பகமும் ரேசகமும் பெறுதவமே பொருந்தியோதுந்
தாரகமந்திரத்திலர ஞாகம்பெற்றுமைவாழுந் தானமாமால்
பாரகமுஞ்சூரகமு மூரகமு மோகமும் பழையஞானப்
பேரகமா மோரகமு மேரகமாமென விளக்கம் பெற்றவூரே. (25)

வானளக்குங் கோபுரம் பொன்மணியளக்கு மகிழ்ரத மாட மேடை, தேனளக்குஞ்சோலை நெடுந்தெருவளக்கும் பலசாலைகள் செல்வமேவு, மீனளக்கும் வயல்வரம்பு முத்தளக்குங் கதலியிலை வெய்யில்மூடும், கோனளக்கும் நீதிமின்னூர் குணமளக்க மணமு ளக்குங் கோதையூரே. (26)

வண்டாடுங் காவின்மலை மிசையாடும் புயலுடனே மயிலுமாடும், தண்டாடுஞ் சோலைபழச்சேறுடுந் தெருக்களிலைந் தருக்களாடுங், கண்டாடு மிரப்போர்கள் கரமாடுமுன் வாவிக் கயல்களாடும், கொண்டாடு முமைபாகர் கொடியாடும் படியாடுங் கோதையூரே. (27)

செங்கமலத்தடங்களெனக் கொடியாடுமூர்கொடியோதிமங் களாடும், சங்கமலிவாணருக்குக் கலைமடைந்தை பணிவிடைகள் தானேசெய்யும், துங்கமலிமன்னவர்முன் னூல்வழியேநீதிசெய் யத் தொடங்குவார்கள், கொங்கையிணைமடவார்க்கு மன்மதனே யேவல்செய்யும்கோதையூரே. (28)

முத்திருக்கும்நகைநகையே மொழியிருக்கும் சபஞ்சபமே மேனஞானச், சத்திருக்குகுகைகுகையே தவமிருக்கும் மகமக மேதானசீலம், ஒத்திருக்கும்மணிமணியே யொளியிருக்கும்மன மனமே ஓதியேறு, கொத்திருக்கும் புயம்புயமே குடியிருக்கும் படியிருக்குங் கோதையூரே. (29)

ஏடளக்குந்தொடைமடவா ரிடையளக்குந்துடியெவருமின் பங்காணும், நாடளக்கும்நெறிபனு வனலிலளக்குங் கிளிகுயில்கள் நாதமோதும், வீடளக்குந்தருமமொழி மெய்யளக்குங்கரங்கள்

கொடைமேவு மாணைக், கோடளக்கும்முலைமடவார் கொம்பளக்க
நம்பளக்குங்கோதையூரே. (30)

வடம்பயிலுமுரமுரமே மதன்பயிலும்மனமனமே வாணிபா
கன், படம்பயிலும்மணிமனியே பயம்பயிலுங்குணங்குணமே பர
தகிதே, நடம்பயிலுஞ் சபைசபையே நயம்பயிலுமிசையிசையே
நாதன்றேரில், குடம்பயிலுங் கனங்கனமே குலம்பயிலநலம்பயி
லுங்கோதையூரே. (31)

ஆன்பொருந்துநங்காஞ்சி யலகுமுறியாறு தொப்பை யாறு
வானி, மீன்பொருந்துங்காவேரி திருமணிமுத்தாநதிசூழ் மேரு
வாமால், கான்பொருந்துங்கொல்லிபன்றி குருடிமலை பாலைமலை
கஞ்சநாகம், கோன்பொருந்து மெழுகரைநன்னாட்டினுக்கு நாயக
மாங் கோதையூரே. (32)

சிலைவாழுங்கரத்தானுருமை பாதியெனமகிழ்ந்து தேவதீர்த்தத்
தலைவாழும்பஞ்சவர்ணப் பிரகாசருளமேவுந் தானமாமால்
மலைவாழுங்கவியுடைத்த மதுவாறுப்பனசுகமைழ மாவும்போத்துக்,
குலைவாழைசெழுந்தாளக்குடிலெடுத்து வீதிவருங்கோதையூரே.

ஒத்துவருகண்டகரை யுரம்பிளந்துகடலுதர முண்டுமீண்ட
சத்திதரனுரினியபஞ்சலிங்கம் பூசைசெய்யுந்தானமாமால், முத்
திதருநாககிரிமாயூரங்கோளரவைமுறிந்துமீளக், கொத்தியெடுத்
தேநடித்து கொக்கரித்துவிளையாடும்கோதையூரே. (34)

ஆசிரிய விருத்தம்.

பூமேவுகோதையுமைபாகர்தமை வேலரைப்பூசித்தபேர் கரு
மையும், புண்ணியதிருப்பணிகளாடையாபரணங்கள் பூமாலைநந்த
வனமும், காமேவுசோலைபல வாவிகூபங்களுங் கமலமருவியவோ
டையும், கன்னியர்கள்நடனமும் பதினெட்டுமேளமும் கானப்
பிரபந்தகவியும், மாமேவுமாசிவைகாசியின் தீர்த்தமும் மாசபூசை
யின் உபயமும், மடமன்னசத்திரமும் மறையவர்கடானமும் வண்
ணமயர்ச்சகர் வரிசையும், கோமேவுமரவகிரி வந்தவநாள்முதற்

கும்பிட்டபேர் பெருமையும், குறைவறவிவர்க்கரனளித்தருள் பதத்தையும் குற்றமறவேபுகலுவாம். (35)

காமதேநு

பூமேவுவடகயிலையுறையீசனைக்கபிலை போற்றியொருவரமீ கெனப், புனிதனுமகாமேருமுடியிலேம்முடியவை பொருந்துமது கொண்டேகிநீ, மாமருவுகொங்கிடைப்பூசியெனவவ்வுரை மகிழ்ந் துகாவிரியருகினில், வண்மையொடுதாபித்து வேதாகமப்படி வ ழுத்தியர்ச்சனைசெய்தனள், தேமருவுகஞ்சகிரிபதுமகிரிவேதகிரி திரமானசங்ககிரியும், திருநாககிரியாதியைந்து முடிலிங்கங்கள் செய்தனள் வரம்பெற்றனள், கோமருவுபஞ்ச கவியக்கொடுமல ங்களைக் கொல்லவலிமையுமெய்தினள், குறையாமல்முப்பத்து முக்கோடிசுரருநக் கொண்டுபசுபதியானதே. (36)

பிரமன், விஷ்ணு, துற்கை, சேடன்.

பேறுபெறுமுதலுகம்பிரமன்பணிந்தனன் பிரமகிரிபிரமேசு ரம், பிரமதீர்த்தமுமானபேரிணைவிரித்தனன் பெற்றனன்முதற் றொழிலையே, வீறுபெறுமிணையுகம்விட்டுணுவழுத்தினன்விட்டுணு கிரிவிட்டுணுதீர்த்தம, விட்ணீசுவரருமாகமேவினனிரட்சிக்க வேண் டியவரம்பெற்றனன், தூறுபெறுகொற்றவை துவாபரயுகந்தொ ழுது துர்க்கைகிரிதுர்க்கேசுரம், துர்க்கைதீர்த்தமுமாகவந்தித்து மகிடா சுரக்கொலைப்பழிகழுவினுள், சீறுமரவங்கலியுகந்தொழு துமுப்பேர் சிறந்துபலகலை யோதியே, செம்மணிபயந்துநஞ்சிவண வயங்களின் சேடபூடணமானதே. (37)

இந்தயுகநாலுமுறைவந்தனைபுரிந்திட விருந்தநாகேசுரரை யே, எழிலாமரக்கரைவதைத்தபழிதீரவே யெய்தியர்ச்சனைசெய் தனர், ஐந்துலிங்கங்கடாபித்தனர்குமார புன லறுமுகதடங்கண் டன, ரனதானமிட்டனர்குராநிழலிலேயிருந் ததிகநியமஞ்செய் தனர், கந்தர் தமைவந்தணுகுமிந்திரனைவானுடு காவமகுடங்கட்டி னர், களிற்றிறைடுகொனகியையுங்கொண்டுவேல ரிதுகயிலையென நின்றருளினர், சிந்தைதனிலன்புகொடுவந்தனைசெயவோர்கள் வினை

தீர்த்தருள்குமாரரென்னத்,தேவர்முதலனைவர்களுமேவ வரநீடிச்
சிறந்துளர்வை வேலரெனவே. (38)

உமாதேவி, கணபதி.

மலையினிற்பிலவழியில் வந்துகணபதிதனை மகிழ்ந்தவன்சுனை
மூழ்கியே, வாகைவடிவேலனைக்கண்டுதய வெய்தியிரு வனமுலை
யினமுதூட்டினள், பலமிகுதியானகற்பகநீழலுறையரன் பாகம
துபெறவெண்ணியே. பங்கயமலர்ந்ததேவோதக பொகுட்டினிற்
பன்னுதவநிட்டையதனால், நிலமைபெறுநாகீசரொருபாகமருள
செய்ய நேரிழையிடத்தளாகி, நின்றவடிவாமர்த்தநாரீசரெனவுரை
நிகழ்த்துமகிமையையெய்தினள், தலமைபெறுநாரிகணபதியும்நா
கீசரிரு தாளிணையையர்ச்சித்தனன், சகலதேவர்க்குமுதலானவர
மெய்தினன் தந்திமுகவைங்கையோனே. (39)

தேவேந்திரன், பாண்டவர் முதலியோர்.

மாகபதியிந்திரனும்நாகவரையெய்தியொரு வாவியதுகண்டு
தினமும், மங்கையொருபங்கனையும்வடிவேலனைத்தொழுதுமணி
மகுடமதுபெற்றனன், நாகபரிதேனுதருசசிதேவியொடுகனக நா
டாளவரமெய்தினன், ஞானமுனிவோரமரரானபேரர்ச்சித்துநாடின
வரம்பெற்றனர், போகமுறுமேதினியுளோர்பலர்வழுத்தியே, புத்
திமுத்தியுமெய்தினர், புண்ணியமிகுந்தரும புத்திரர்களர்ச்சனை
புரிந்தனரிருந்துபலநாள், தாகமுமகன்றுபதிநாடரசுபெற்றனர்ச
யித்தனர்பகைத்திரளினைத், தங்குகுறைதீர்த்தமொருலிங்கமவர்நா
மந்தழைத்துறுமலைச்சிகரமே. (40)

சிங்கவன்மன்.

சீருலவுகலியுகமுதித்துவருமாதியின் சேடகிரியுமைபாக
ரைச், செங்கைவடிவேலரைநாகீசரைத்தொழுது சிங்கவன்மன்
பரிவுடன், ஏருலவு கோபுரவிமானமண்டபமதி லிலங்குதிருமா
ளிகைகளும், இயலானதிருவீதிதிகழரியநகரமும் மினியபலபல
தருமமும், பேருலவுவைகாசிதைத்திருவி ழாவழகுபெரியரதவா
ரோகணம், பின்னையுமனேகபரிவாரதாபனையோடு பிரமப்ரதிட்

டைபலவும், காருலவுசோலைபல வாவிகூபங்களுங்கண்டு மனரத மெய்தியே, கவினரசுபெற்றனனிவன் மகிமைநீடூழி காலமதுநிலை நிற்கவே. (41)

பாண்டியன், சேரன்.

தென்னவனெனுஞ்சவுந்தரபாண்டியவன்வந்து சேடகிரி யுமைபாகனைச், சேயவனையுந்தொழுதுபூசித்தனன்பெரியதெற்கு வாசற்கண்டனன், மன்னனுயர்பாண்டீசனைத்தொழுதனன்கனக மணிமகுடமதுபெற்றனன், வையபுரந்தனன்பாண்டியனெனத் தின மகிழ்ந்தனன்வரமெய்தினன், இன்னவையுணர்ந்ததிகசேர குலமன்னவனு மெய்தியர்ச்சனைசெய்தனன், எழிலானவுமைநே சர்முருகீசர்குமரீச ரியலானகுன்றீசனார், அன்னவர்களுக்கதிகபூ சனைபுரிந்தனன் அழகானமேல்வாசலுண், டாக்கினன்னேகவர மதுபெற்றனன்கயிலை யரனையெய்தினனரசனே. (42)

சோழன்.

காரணிகமானவளவன்கலியுகாதியிற் கட்செவிமலைப்பரம னைக், கந்தனைவணங்கிமக பூசையுண்டாக்கினன் கைலாசநாதசிவ னைத், தாரணிபுகழ்ந்திடத்தாபித்தனன்பெரிய தண்கூபமதுகண் டனன், சைவமறையோர்பூசனைக்கினியராகவே தனதுமண்டல மேவியே, சீரணிசீகாழியாலம்பாயர்காசிபர் திறத்தோடர்ச்சனை செய்யவே, திறமுறவமைத்தனன்மனுநீதிமுறைகண்ட செம்பி யன்பெற்றபெருமை, ஏரணியுமாததிமாலிகைவரிசை பெற்றனன் எழிலானமுடிபெற்றனன், எண்டிசைபுரந்தனன் இன்பமொடி ருந்தன னினியபதமெய்தினானே. (43)

சத்தகுரவர்கள்.

செஞ்சொல்புனைசெம்பியன் தாபித்தநாள்முதற் றிகழுமுப சாரமுடனே, திவ்வியாகமவிதியிலேயரவகிரிமேவு சேயையம்பி கைபாகனைக், கஞ்சனெனமாலெனத்துர்க்கைபணிவேளெனக் கவு ரிநற்கணபதியெனக், காதலொடுபூசித்தபிரவுடாலம்பாயர் காசி பர்கள்பெற்றபெருமை. பஞ்சலட்சண கவிதைபாடமறை... டப் படியிலடியவர்தம்மையும், பகரரியவைந்தெழுத்தோ...

தானசிவ பதவியிலிருத்தவரமும், தஞ்சமெனவந்தவரைரட்சிக்கவுஞ்சைவ சமயத்தைவளர்விக்கவும், சற்குரவராகியபிடேகமும் பெற்றுத் தழைத்தனர்கள் சந்ததமுமே. (44)

இதுவுமது.

மன்னுபுகழ்சேர்சப்ரமண்யபண்டிதனெனவரும் மகிழ்சதாசிவபண்டிதன், மனமேவுதெய்வச்சிகாமணிப்பண்டிதன் வளர்நாககிரிபண்டிதன், தென்னுலவுவேதநாயகபண்டிதன்றமிழ் தெரிந்ததேவாரநம்பி, செல்வனெனவருமர்த்நாரீச பண்டிதன் சேனபதிப்பண்டிதன், இன்னவர்களேழுகுரவோருகந் தர்ச்சனையியற்றினர் வரம்பெற்றனர், இயலழகுசேர்கருணையேற்றமுறவறிவுண்மையின்புமிகுவித்தைபொறுமை, தன்னினுமிருந்தனர்கள் சற்குணருமாகியே தர்மத்தைவளர்வித்தனர், சந்ததமுமுமைபாகர்வேலவரருளாலதிக தானந்தழைத்தேறவே. (45)

கட்டளைக்கலித்துறை.

பூமெவு வேதியன் சக்ரா யுதன்துர்க்கை பொங்கரவம்
மாமேவு கந்தன் உமையாள் கணபதி வாறெனவே
கோமேவு நாக மலையாரை ஏழு குரவர்களும்
தாமேவி அர்ச்சனை செய்தார் பெருமை தழைத்திடவே. (46)

மூவர் முதலிகள்.

ஆசிரியவிருத்தம்.

சோதிபுனைசேடகிரிசூழயோசனைசிவ சொரூபமென்பனவெண்ணியே, சுந்தரன்பொன்னிநதிமேற்கரையிலேதமிழ் தொடுத்தனன்கிரிநாடியே, நீதிபுனைசம்பந்தனும்பதிகமோதியே நீங்கிநண்ணுவடையவே, நீள்சுரமுறப்பொருமறபின்னுமணுகியே நீலகண்டப்பதிகமும், ஓதினர்தமிழ்க்கினியவாக்கரசனும்முற்றுரைத்தனனுதலாலே, உருபிணியகற்றினன்மூவர்முதலிகள்கைலை யுற்றனர்வரம்பெற்றனர், வேதமிகுசூதருமிதன்புராணந்தனைவிதித்தனரனேகரிஷிகள், வேள்விபலசெய்தன ரருச்சனைபுரிந்தனர்கள் வேண்டியதடைந்தனர்களே. (47)

மலைகாவலர்.

சினமிகுதுலுச்சர்வந்தாவகிரிநோக்கிச் சிதைக்குர்வகைசெயு மளவிலே, திறல்வீரானவீமணன் ஓவணன்கருணை சேரிரங்க ணன்மூவரும், கனநீதியானகிரியைக்குகனையீசனைக் சண்டுமிகுத யமெய்தியே, காக்கவகையெண்ணியுமைபாகனை வணங்கிநற் சந்த னையுமனமுன்னியே, மனமுறுதியாகித் துலுக்கருடனமர்செய்து வலியகண்டகராவியை, வாளுறவிடுத்தனர்கள்சேடகிரியழியாத வகைபுரிந்தனராதலால், அனமிடமதானபணிமலையீசரிவர்களுக் கரிதானவீரசொர்க்கம், அன்புடனளித்தருள வவராவகிரிகாவ லதிகாரமுற்றனர்களே. (48)

பூவுலகில்மன்னவரனேகரரிபீடப்பொறுத்தமுடிபெற்றுநதி சூழ், புவியாளும்நரபதியெனப்பெருமைபெற்றபேர் புகலிலெண் ணிலராகுமால், மேவுமநுமாந்தாதி சக்ரவர்த்திகளோடு விக்கிரமா தித்தனுடனே, விசயவிரணியவன்ம ராயன்முதலாயினோர் வெற் றிபுனைபிரவுடராயன், தாவுபுனையாண்மையழகார்நீதிமுறைவீறுத வமதிகசௌர்யம்பலம், சத்யவாசகமுறநுபொறைநெயொப்புரவுவேக தாரவிரதஞ்சயகரப், நாவிரதமானமொழிபலகலைதெரிந்தசிவ ஞானவிமலானகுணராய், நாவலந்தீவேறவந்தாசிருந்தசில நல்ல வர்தமைப்புகலுவாம் (49)

விஜயநகர துரைத்தனம்.

இராயர்கள்.

வேறு.

செந்திருவீரராயன் திருநரசிங்கராயன்
சுந்தரானந்தராயன் சோமசூரியனும்ராயன்
ஐந்தருவன்னதான னருடருசொன்னதான
னிந்திரன் தன்மராய னெழில்புனைசொக்கராயன். (50)

மன்னியமானங்காத்தான் மருவியவிஷ்ணுராயன்
தென்னுயர்கிருஷ்ணராயன் திகழ்விருபாக்ஷிராயன்
கன்னியன்பானமல்லி கார்ச்சுனன்புஜபலேசன்
மின்னாசிங்கன்மல்லி கார்ச்சுனன் வேந்தனுமே (51)

சாளுவராயன்கீர்த்தி சதாசிவராயன்பூமி
யாளுமச்சுதனங்கோமா னன்னசீரங்கராயன்
மேவெளனும்ராமராயன் வீரியவசந்தராயன்
வாளுடையராசநீதி மருவுவெங்கடபதீசன். (52)

வடிவுறுமானைகொந்தி மருவுசீரங்கராயன்
படிபெறுமன்னர்மன்னன் பரவைசூழுலகெண்டிக்கும்
முடிபெறுமுதல்வராகி முறைசெயுமரசாகோதை
கடிபெறுகுழலிபாகர் கைங்கரியங்கள்சொல்வாம். (53)

வேறு.

செந்தமிழ்சேர் குமாரங்கையானங்கூறும் சித்தளந்தூர்தோகைநத்தந்தோகைபாடி, நந்தலைவுமோடமங்கை யணிமூர்தேவணுங்குறிச்சிகோழிக்கால்நத்தந்தானும், முந்துதிருமங்கையுடன் செக்குநத்தம்முளசிமகாசாத்தபுரஞ் சூராப்பளளி, இநதநகர்பதிணைஞ் சைலஞ்சூழ ஏரகத்தார்படிக்காசரீந்ததாமே. (54)

தருமராயன்.

வேறு.

பன்னிரண்டூருங்கோதைப்பதியுமைபோகர்க்கீந்து
நன்னிலம்புகழுமபச்சைநம்பியைச்சிவிகையேத்தி
இன்னிலமதிக்கவேதானெழுகரைநாட்டுப்பட்டன்
தன்னையும்விதித்தானெங்கள் தபவுள தருமராயன். (55)

வாலராசன்.

இபலாகவேரத்நசிங்காதனத் தமிசை யேறிமணிமுடி சூடியே, ஏகசக்ராமாகவம்புவிபுரக்கவரு மிறையான தருமராயன், தயவாக வாலராசன்றனக்கருளவே தாராபுரந்துருகமும், தானுளநாளரவகிரியீசருக்கதிக தானங்கள்விடுவித்தனன், பயனுமனேகதருமங்களைநடத்தினன் பணிமலையுமேசருளால், பாக்கியமடைந்தனன் பாலகரையீன்றனன் படிமீதுபுகழ்பெற்றனன், விபனுணநரசிங்க

ரராயநகரந்தன்னை விட்டனன்தலைமுற்றனன், மெய்ப்பொருளு ணர்ந்தவன்கோதையபனன்புகொடுமேதினிவிளங்கினனே. (56)

கிருஷ்ணராயன், திரியம்பகவுடையார்.

வண்மைபெறு கலியுகசகாப்தமாயிரமிசை வெழங்குநானூற் றினுடனே, மருவுமுப்பத்துநாலானசித்திரபானுவருடமதுகிருஷ் ணராயன், * உண்மைபெறுதிரியம்பகர்க் குதவவம்மன்னவனுமு யர்கொங்குநாடாளுநாள், உரககிரிமீதுவடகோபுரக்கல்வேலையோ டுமதிலுங்கண்டனன், தண்மருவுதெப்பக்குளந்தனதுமண்டபந்த ங்குநாயகமண்டபம், சந்தைசெவ்வாய்க்கிழமைதளிகைரசிதக்கி ண்ணி தாவுசிங்காரவனமும, கண்மருவுகாட்சிதருதையுடுபவுற் சவங் கனமாகவேசெய்தனன், கம்பனுயர்சாமணிவர்தம்பிதான ன்பெரிய காராளன்மிகவாழ்கவே. (57)

வெண்பா.

கம்பபுரமென்றொருவூர் கம்பநயி னார்தனது
தம்பிபெய ராலொருவூர் தானபுரம - அபபுவியெண்
பாட்டிமை யானசித்ர பானுவரு டந்திருச்செங்
கோட்டிலமைத் தானன்புகொண்டு. (58)

சதாசிவராயன்-ஜகதேவு, நரசிங்கராமாஞ்சி.

ஆசிரியவிருத்தம்.

சீரார்சகாப்தத்திலாயிரமு நானூறுசெல்கவெழுப்பத்துமூ ன்றின், திரயானதுன்மதிச்சித்திரைத்திங்களைச் சேர்ந்த[illegible] தைந்தினிற், பூராயபூர்வபட்சந்திங்களுந்தசமி பூசமாம்மேனுளி லே, புவியாள்சதாசிவமகாராயர்ஜகதேவு பூபாலனுக்குதவவே, வீராகமப்பிரபுட நரசிங்கராமாஞ்சி மிகுகொங்குநாடாளுநாள், விப்ரகுலசர்வயன்தேவகாயாதிபன் வீருவணந்தபூபன், வரான

---

* மதியூகியான அப்பாஜி வேடிக்கையுத்திசாலியான, தென்னா லிராமகிருஷ்ணன் முதலியோர் இவர் சமுகத்துளோர். வீரப்பிரதாப ஸ்ரீ கிருஷ்ணதேவமஹாராஜன் என இவரைக்கூறுவர் இவர் அங்கங்கேசெய் துள்ள ஆலயத்திருப்பணிகள் பல.

செங்கோட்டில்மேவுகயிலாயர்முன் எழிலானசற்கம்பமே, இன் பொடுநிறுத்தினன் கீர்த்திப்பிரதாபமது விமசேதளவுநிற்கவே.

துங்கமிகுசேடகிரிவடகோபுரந்தனைத் துன்மதித்ஸதத்திங்களிற், சுந்தரமதாகவேசெங்கல்நிறைவேலையும் சூளிகையும்நிறைவேற்றினன், கங்கைமதியணிசடையர்கயிலாயநாதர்கற் கம்பமழகுற நாட்டினன், காசினிமதிக்கவெகுபூசனைபுரிந்தனன் கனசவுரியம் பெற்றனன், இங்கிதமடைந்துருகுமேழுகரைநாடதனை யியல்நீதி முறைசெய்தனன், எதிரிட்டமன்னர்மணி மகுடம்பறித்தனன் இறைஞ்சினரைரட்சித்தனன், திங்களணிறைமுகசதாசிவராயனருள் மேவுதிரிஜகதேவுமகிழும், செஞ்சொல்புனைநரசிங்கராமாஞ்சி சந்ததம்திறைமையுடன மிகவாழ்கவே. (60)

களஞ்சியம் கிருஷ்ணய்யன்.

வேறு.

மின்னுபொன்பணி வேலர்தானூபுரம்வெள்ளியின்தடவேறும்
தென்னுலாவிய திருவிழாமண்டபச்சிறப்புமன்பொடுமேத்தி
பொன்னிறுடையும்மோகனமாலையும் புகட்பணிகிரியார்க்கு
மன்னுசங்கமும்களஞ்சியம்கிருஷ்ணயன் மகிழ்ந்தினிதளித்தானே

காளிங்கராயன்.

வெண்பா.

* ஆலிங்க நாகமலை யர்த்தநாரீசுரர்க்குக்
காலிங்கராயனெனுங்காராளன்—மாலிங்க
மென்றேமா மாந்தைநில மேழுமா வுங்கொடுத்தான்
நன்றே புகழாகி னான். (62)

---

* ஆ = பசு, லிங்கம் = சிவலிங்கம். பசுப்போலும், சிவலிங்கம் போலும் தோற்றும்மலை.

மதுரைத்துரைத்தனம்.

விசுவநாதநாய்க்கர்.

விருத்தம்.

வெற்றிநரபதிராய ரருளினாலேவிருதுபலவரிசையுடன் சேனை சூழக், கொற்றவர்கள் பணிந்திடவெண்டிசையும் போற்றச்கூடனகர் சௌந்தரபண்டியனைப்பாகக், கற்றமனுமுறைவழியாச் செங்கோலோச்சுங்காவலன்தட் சிணபூமிக்கடவுளாகி, நற்றவமேபுரிவிசுவநாதராயன்நடத்துவித்த தருமமெலாநவிலுவாமே. (63)

வேறு

கனமிகுவிசுவநாதன் காதலன்வீரபூபன்
மனமிகுகிருஷ்ணபூபன் மருவியவீரபூபன்
தனமிகுமுத்துக்கிருஷ்ணன் தந்தருள்முத்துவீரன்
இனமிகுதிருமலேந்த்ர னீன்றருள்முத்துவீரன். (64)

சுந்தரவிசுவநாதச் சொக்கலிங்கேந்திரேசன்
மந்திரிமன்னரேவ பந்துலகாண்டபேர்கள்
செந்திருவிளங்குங்கோதைத் தலத்திலேசெய்யப்பெற்றோர்
தந்திருப்பணிகளெல்லாந் தயவுடன்சாற்றுவாமே. (65)

குருவப்பநாய்க்கர்.

வேறு.

திறமிகுசகாப்த மாயிரமைந்துநூற்றொன்று சேரவருவிசுவற்சரம், தேசதேசம்பரவு வீரபூபதியுடைய சித்தமதுமகிழவுலகம், முறைநெறிநடத்தவருமானைவசவன்றந்த மூர்த்தனியகுருவமகிபன் முடிமன்னர்பணிகட்டி கவலோடெழுகரை நாடுமுழுது தோரணமிட்டனன், கறையணிகளத்தர்பணிமலை யீசருக்கினிய கனமானவபிடேகமுங், கவினுடைதிருமாலையழகுபுனைதீபமும் கட்டளைப்படிசெய்தனன், நிறைகருணைவளர் கட்டி செய்தரதமோட்டினன்நேசமொடுபூசித்தனன் நீடூழிகாலமளவாகவெகு கீர்த்திதனை நிலைபெற நிறுத்தினனே. (66)

வேறு.

சீர்பெறுமதுரைவீரன் திருவுளமகிழச்செங்கோல்
ஏர்பெறுகுருவபூபனியல் பெறுவிசுமுன்னாகப்
பேர்பெறுபார்த்திபாந்தம் பெரும்புவிதன்னையாண்டு
பார்பெறுகோதையீசன் படித்தரநடத்தினனே. (67)

பள்ளியப்பன்.

வேறு.

வியவருடமுதலென விகாரிவருடத்தளவு வீரராகவ முதலியார், மெச்சுமருகன்பள்ளி தருகம்புரந்தனன் மேவுநாகாச் செட்டிபால், தயவினுடனெமீள வீரபூபாலகன் தந்தனுப்பிடவந்தனன், தமிழ்மேவு பள்ளியப்பன் விக்குருதியாதியாத் தான் விசயவனாயாண்டனின், இயலினுடனேகொடிக்கம்பமது மேற்றகடு மெழில்பஞ்சசரதாவடம், ஏற்றருத்திராட்சமேற் கட்டுபெயசாரமு மினிதான பரிவட்டமும், பயனுதவு குருபூசைபூமிதானஞ்சம் பளக்சொல்லை குளமானியம், பணிமலைத்தானீகருக்குதவி செய்தனன் படிமீதில் மிகவாழ்கவே. (68)

சித்தமகிழுஞ்சர்வதாரியிற் கோதைத்திருப்பணி நடந்துவரவே, தென்மதுரைவீரபூபதியப்பனைப் படி சிறக்கமணியஞ்செய்யுமால், மெத்தமுனிவொடுபள்ளி யப்பமகிபாலசன்விதரிவருசட்டியிதய, மேவவுரைசெய்தவனு நல்லதம்பிக் காங்க யனுமனதுகளிகூரவே, ஒத்தவருகந்தபின் னேழுகரைநாடதனிலுள்ள பாளயகாரருக், குண்மையுடனுரைசெய்து பட்டயமுமெழுதியே யொப்பமதுவரைவித்தனன், நத்துலவுமேழுகரை நாட்டுபெயமார்க்கமும் நடக்கவகையேசெய்தனன், நாடனைவரைக்கொண்டு தாரைவார்பபித்தனன்நன்மையுடனீடேறவே. (69)

கலிவிருத்தம்.

அடலுலுகோதைதவை யாசிவீதியுந்
தடாரதமிசையரன் றையல்பாகமும்
வடிவுளபரிமள வல்லிசேவையும்
படிதொழவிதித்தனன் பள்ளியப்பனே (70)

அருந்தவர் பூசையு மகுதிபோசனம்
திருந்திநற்பணிமலைத் திருக்குராகிழல்
விருந்தெனநுகர்த்தினன் வேள்வியாளர்பால்
பரிந்தினிதளித்தனன் பள்ளியப்பனே. (71)

ஆவினெய்த்தீபமு மழகுமாலையும்
நாவினுக்கினியபோ சனமுநல்கியே
தேவெனப்பணிமலைச்சேயைப்பூசனைப்
பாவனைபுரிந்தனன் பள்ளியப்பனே. (72)

சந்ததம்பணிமலைத் தானிகர்க்கெலாஞ்
சிந்தையினினைந்தன சிறந்தளித்தனன்
புந்தியிலன்னைதாய் போலுவகந்தனன்
பைந்தமிழ்நதிகுலன் பள்ளியப்பனே. (73)

வெண்பா.

பாட்டிமையாங்கோதையுமை பாகருக்கேயேழுகனை
நாட்டுபயமார்க்கம் நடத்தினான் - தாட்டிமையாம்
பள்ளியப்பன் புண்ணியவான் பாகி ரதிகுலத்தோன்
வள்ளியப்பன் போலொருமால் வந்து. (74)

அம்பொற்றேரேறிவரு மர்த்தநா ரீசுரர்க்குச்
செம்பொற் கிரீடந் திருக்குழையுங் - கும்பத்
தனதளமும் பள்ளியப்பன் முனே கொடுத்தான்
மனதுளவன் காராள மால். (75)

கலிவிருத்தம்.

தென்னுார்சதாசிவ தேசிகன்கையிற்
கன்னியதானமாக்கனகமைம்பது
தன்னியல்தயவுடன்றந்தனன்றமிழ்ப்
பன்னியகோதையிற் பள்ளியப்பனே. (76)

வெண்பா.

காரணிகர் கோதைக் கைலாய நாதர்முன்னே
சீரணியு மண்டபமுஞ் செய்தானே - பாரணியும்
தொண்டைவள நாடன் துரைராயன் பள்ளியப்பன்
மண்டலிகன் சார்வபூமன். (77)

நாகாச்செட்டி.

வேறு.

தாரணிபரவுங்கோதைத் தையலோர்பாதிபார்க்கே
சீரணிமகுடஞ்சூட்டச் செம்பியன்நாகாச்செட்டி
ஏரணிகனக * மாடை யீரிருநூறுந்தந்து
நாரணனெனவேபூசை நடத்தினன்நன்மைபெற்றான். (78)

மதுரைவாழ்முத்துவீரன் மகிழ்ந்திடச்செங்கோலோச்சுஞ்
சதுரனும்நாகாச்செட்டி தமிழிசையோதுகின்ற
விதுரனுமர்த்தநாரிபண்டிதன் மீதன்பாக
குதிரையுங்குடையுந்தந்து கொல்லைமானியமுமீந்தான். (79)

காளத்தியப்ப முதலி.

விருத்தம்.

சயமுதல்விகாரியந்தந் தமிழ் தெரிகிருஷ்ணபூபன்
இயல்புளகாளகத்திக் கீந்திடவந்தமன்னன்
பயனுறுங்கொங்குநாடு படைத்தரசாளுநாளில்
வபனிறைகோதையார்க்கு மகாபடித்தரங்களீந்தான். (80)

அந்தணர்பரவுங்கோதை யர்த்தநாரீசர்தம்மை
வந்தனைசெய்துபட்டு வத்திரமனேகமீந்து
கொந்தணிதூபநல்ல கோவினெய்தீபங்கந்தச்
சந்தனங்கதம்பமெல்லாஞ் சாத்தினன்காளகத்தி. (81)

அரவமாமலைக்கே காளகத்திபூபதியன்பாகத்
திருவிழாவதிகபூசை திருப்பணியநேகதானம்
பரிவுடனடத்தித்தானும் பரிசனத்தவர்க்கேயின்பம்
மருவினனூறுபொன்னும் வழங்கினன்றனிகர்க்கே. (82)

ஆபத்துக் காத்தாபிள்ளை.

பற்றுசார்வரியாமாதி பராபவவருடமெட்டும்
வெற்றிசேர்கிருஷ்ணபூபன் மேவ வாபத்துக்காத்தான்
கொற்றவனருளினாலே கொங்குநாடாளும்நாளில்
உற்றவன்கோதையாருக்குயர்படித்தரங்களீந்தான். (83)

---

* மாடை = அரைவராகனிடை.

மன்னியகிருஷ்ணபூபன் வாசலாபத்துக்காத்தான்
தென்னுயர்கோதைவாழுந் திருக்கயிலாயநாதர்
சந்நிதிகாலசந்திதனக்கெனத்துத்திரத்தம்
மன்னவன்கொடுத்தான்றங்கள் நாயகன் மகிழத்தானே (84)

ஆண்டியப்பன்.

சீர்புனைபிலவங்காதி திகழ்விரோதிக்ருதியந்தம்
பார்புனைமுத்துவீரன் பரிந்தளித்திடச்செவ்வந்தி
ஏர்புனைகொங்குநாடாண் டிடுகையிலாண்டியப்பன்
தார்புனைகோதையார்க்குத் தருமமேநடத்தினானே (85)

அருடிருவட்டயானை யைங்கரன்கோயில்கண்டான்
திருவளர்கைலாயர்க்குச் சிறக்கமண்டபந்தொடுத்தான்
பரிவுடன்கோதையீசர் படித்தரமிகவுஞ்செய்தான்
தருவெனவாண்டியப்பன் தனித்தினிதிருந்துவாழ்ந்தான்.(86)

காளத்தியப்பமுதலி.

பெரும்பரிதாபியாதி பிங்களவருடமட்டுஞ்
திரம்பெறுமுத்துவீரன் சிறந்தளித்திடவேசெங்கோல்
அரும்பொருளுணர்காளத்தி யகிலமெண்கொங்குநாடு
புரந்தனன்கோதையீசர் பூசனைமிகவுஞ்செய்தான். (87)

வாசவன்முத்துவீரன் மந்திரிநயினான்பாலன்
தேசமெண்காளஹத்தி தென்கயிலாயனார்க்குத்
தூசுடன்மாலைதீப தூபமோடங்காங்கங்கள்
பூசனைபுரிந்துதெப்பம் பொருந்தியவிழாவுஞ்செய்தான். (88)

திருக்குளநந்தவானந் திகழொருதென்னந்தோப்பு
கருக்குளபனையுமுச்சிக் கட்டளைவேலன்பள்ளி
மருக்கொளுமுடிசேர்கோதை வள்ளலுக்களித்தானென்னா
வெருக்கொளப்பொருகாளத்திவிண்ணவர்க்கிறையொப்பனன்.

ஆசிரியவிருத்தம்.

தவமிகுசகாத்தமோ ராயிரத்தைஞ்ஞூறு தாவுமுப்பத்தொன் றினிற், சாதாரணத்தில் வருசித்திரையிலேரகந் தன்னில்வருணான் றிசையினில், சிவனுமையிடத்தனுங் குகனுமகிழ்வெய்தியே தெப்ப ரதமேறியுடிபத், திருநாள்நடக்கவுந்தேவர்களி கூரவுஞ்சேவைமா னிடர்காணவும், நவரசமெனப்பலருநுகரமறையவர்கடின நானபா னஞ்செய்யவும், நாதர்கயிலாயருக்கழகுதிருமஞ்சன நடக்கநன்னுள் மூழ்கவும், புவனமதினீதிபூனமுத்துவீரன் றனதுபுண்ணியமதாகியு தகப், புனல்வாவிகண்டனன் கீர்த்திபூன காளத்தி பூபாலனன்மை பெறவே. (90)

வெண்பா.

கண்டான் றிருக்குளத்தைக் காளகத்தி கோதையிலே
வண்டாடு சோலை மதுரேசன் - கொண்டாடுங்
கீர்த்திமுத்து வீரனெனுங் கேள்விபா னுனிலமுங்
காத்தகர்த்தன் புண்ணியமா க. (91)

வீராகவமுதலியார்.

விற்பனவிகாரியாண்டில் வீராகவபூபாலன்
பற்பலருபயம்பாதி பாதிதன்னுபயமாகச்
சற்பமாமலைமீதேறத் தான்படிகட்டிவைத்தான்
சிற்பரன்றனக்குநாலாந் திருவிழாநடத்தினானே. (92)

தண்டமிழ்முத்துவீரன் றனதெனக்கோதையார்க்கு
விண்டலத்திறையொப்பான வீராகவபூபாலன்
புண்டரீகஞ்சேர்மேலைப் பூந்துறைநாட்டு $ ரேகை
யுண்டெனவளித்தான்பண்ணைக் கொருபணம்பயலாள்பாதி.

பள்ளியப்பன்.

சனமிகுதீர்த்தராயன் றம்பிநன்கச்சியப்பன்
மனமகிழின்பமான மைத்துனன்பள்ளியப்பன்
இனமிகுசந்தைத்தோப்புமினிய*மண்டபமுண்டாக்கி
கனமிகும்பிள்ளையாருங் கண்டனன்றிருச்சங்கோட்டில் (94)

---

* இந்த மண்டபத்தைப் படையாட்சிகள் பிரித்து தங்கள் மடத்தருகே வடக்குவாசலாகக் கட்டியுள்ளார்கள். $ வரி.

கரிபரியிடபஞ்சிங்கங் கனமயில்பூதஞ்சிம்புள்
பரிவொடுபுட்பமேரு பத்துடனெட்டுமேளம்
விரிவுடனழகியம்மை விக்கிரகமுமுண்டாக்கி
மருவுளகோதையாரை மகிழ்ந்தனன்பள்ளியப்பன். (95)

ஏறமசெட்டி.

முத்துவீரப்பராயன் மொழியுமப்பணியினலே
எத்தலம்புகழுங்கச்சி ஏறமசெட்டிப்பூபாலன்
பத்திசேர்காளயுத்திமுதற் பிர பவமட்டாண்டான்
சித்தமேமகிழ்ந்துகோதைத் திருப்பணிநடத்தினனே. (96)

பங்காரம்மாள்.

தென்னணிவிசுவநாதத் திருமலராயன்மேவ
இந்நிலம்புரக்குங்கோமான் ஏறமசெட் டியார்தன்றேவி
பொன்னணிவங்காரம்மன் புனைசரப்பணிமுச்குத்தி
மின்னணிகோதையீசன் மேனியிற்சாத்தினளே. (97)

கருத்தனர்கோதைவாழுங் கயிலாயநாதர்முன்னே
நிருத்தமண்டபமுன்னுண்டினிகழ்த்தினகுறடுந்தானும்
உருத்திரோற்காரி தன்னிலுத்திரம்போதிபாக்கல்
திருத்தமாய்வங்காரம்மன்செய்தனளினிதுபெற்றுள். (98)

வேங்கடாத்திரி.

கட்டளைக்கலித்துறை.

பார்மேவு கோதை யுமைபாகர் முன்னர்ப் பலகணியும்
வார்மேவு மின்ப வடவாசற் கோபுர மஞ்சனமும்
பேர்மேவு வர்க்க வகைப்பணி யாரப் பெருஞ்சிறப்புஞ்
சீர்மேவு மேத்து வளிவெங்க டாத்திரி செய்தனனே. (99)

அடைக்கலங்காத்தன்.

மாலான கோதை யரவா சலம்வளர் வைரவர்க்கு
மேலான கோவிலு முன்மண் டபமு விளங்கவேதன்

பாலர்க வேங்யி ஞுத்தைதன் தம்பி பகீரதிகோன்
சிலா வடைக்கலங் காத்தா னியற்றினன் தேச்குறவே. (100)

சின்னநாகாச்செட்டி.

விருத்தம்.

செஞ்சொல்சேர்முத்துவீரன் றிருவுளம்பெற்றேனுருக்
கெஞ்சமாசின்னநாகாச்செட்டி பாண்டிசனூர்க்கு
மிஞ்சவேகோயில்கட்டி விளங்கியமாந்தைத்தோப்பும்
நஞ்சைமாநாலுங்கோதை நாரிநாயகர்க்குத்தந்தான். (101)

முத்தியாலுநாய்க்கன்.

ரேர்த்திசேர்முத்துவீரன் கிருபையேபெற்றேன்கச்சி
போத்தயன்முத்தலேந்திரன் பொன்பணியரைஞாண்டன்னே
சாத்தினன் கோதைவாழுந் தையலோர்பாகனூர்பால்
வாய்த்திடும்மகவைப்பெற்றான் மண்டலம்படைத்துவாழ்ந்தான்.

நாரணப்பன்.

ஏரணிமதனன்கச்சி ஏறமசெட்டிநாளில்
காரணமிகுதி ருத்திரோற் காரியிற்கருணையாளான்
நாரணமகிபன்கோதை நாரியோர்பாகனூர்க்குச்
சீரணியினியமாசித் திருவிழாநடத்தினனே. (103)

வீரூர்சகாத்தமாயிரமுமைஞ்நூற்றினெடு மேவுநாற்பத்தைந்தினில், வெற்றிருத்ரோற்காரிவருடத்து மாசியில், விளங்குமிருபத்தைந்தினில், கூறுருமதுரைவருமுத்துவீரன்மனதுகொண்டாடவந்த சுமுகன் குலமிகுந்திடு மெறம செட்டி மகிழ்மைத்துனன் கொற்ற நாரணமகீபன்; பேறுனகோதைநகர் மாசிரதவீதியும் பெருவிழா வைபோகமும், பின்னுமட நந்தவன வாவிகூவங்களும் பெருகுமம்புயவோடையும், மாறுமலன்னமு மநேகதருமங்களு மகாபூசையுஞ் செய்தனன்,மங்கையுமை பங்கர்வடிவேலரருளால்மதுரை மன்னன் றழைத்தேறவே. (104)

சலமேவுசாரணை சமுத்திரமுமொம சமுத்திரமு நாகநட முங், தண்டலைகளுங்கதலியுங் கன்னலொடு செர்செல் சண்பகமு நந்தவனமுங், குலமேவுபனசுமலைவாழை பாடலிபுன்னை குராகோங் குவிளவுருவளை, கூவிளைசெழுங்கமுகுவேய்சம்பு நாவலொடு குலவு கொம்மடிமாதுளை,பலமேவுதென்னைமாமாதுளை கொளிஞ்சியும் பனை யுடனனேகங்களும், பனினீர்முல்லை யிருவாட்சி சிறுசண்பகம்மருப் பரிமள சுகந்தாதியும், நலமேவுதத்தியோதன வுபயகட்டளையு நற்றிப மாலிகைகளும், நாகாசலேசருக்கித்தனை நடத்தினன் நாரண மகிபா லனே. (1:5)

வெண்பா.

வேலனுக்குத் தென்முளைசவேலனிடு மங்கிதனிற்
சீலமுடன் சொன்னஞ் சிலகூட்டித் - தூலமெனக்
கோப்புடனே தேரோறுங் கோதைபா கர்க்கமைத்தான்
பாப்பனருள் நாரணபூ பன். (1'6)

நாயகத்தாமுதலியார்.

விருத்தம்.

நன்னிலமதிக்கவரு திருமலைநரேந்திரன் நல்லவிபவருடத்தி லே நாடுபுகழேந்திபாப் பிள்ளைக்களிக்கவே நாயகத்தாமுதலியார், தென்னுலவு துருகம்பு ரக்கு நாளிற் கருணை சேரரவகிரியீசரைச் செங்கைவடி வேலரைக்கண்டு விரதத்துடன் றினமண்டலந்தொழு தனன், மன்னுகிரிமிசை தாண்டவக்குறடு செய்தனன் வாணருக்கன் பீந்தனன், மாறுமனுறுமுபல கன்பிணி தொலைத்தனன் மலடிசிலை மீதுதினமும், தன்னுபயமாக வொருதீபமு நடத்தினன் சந்நிதிதரி சித்தனன் தனதுடைய வர்க்கதிக பலனுமுண்டாக்கினன் சந்ததியு டன் வாழ்கவே (107)

திருவேங்கடய்யன்.

மன்னுசுக்கிலவருட முதலாகவேவியவ மட்டுமேழரைவரு டமும் மதுரைவருதிருமலைநரேந்திரனருள மன்னவர் மதித்ததிருவேங் கிடய்யன், தன்னுதென வேகொங்கு துருகம்புருக்குநாட் டம்பி

வில்லவராயனுஞ் சர்ப்பகிரி யீசரைக்கந்தரை வணங்கியே சந்ததம மாவாசையிற், பன்னியர்ச்சித்தனன் குட்டமிடி மாற்றினன் பாராள வருமன்னர்கள் பக்கலிலனேக வெகுமானங்கள் பெற்றனன்பனி மலையிலுறை கடவுளை,மின்னுலவுமாதிரையின் மார்கழிதொறுங் கபிலை மேவுநெய்யினி லாட்டியே மெய்த்தரிச னஞ்செய்து கனபவுசு பெற்றனன் மேதினியில் மிகவாழ்கவே. (108)

சின்ன ஏறமசெட்டி.

கட்டளைக்கலித்துறை.

பொன்னூறுந் தந்து புகழ்வீர பூபதி புண்ணியத்தால்
தென்னேறு கச்சி வருபோத் தயன்றந்த செல்வனெனும்
மன்னே றமசெட்டி பூபாலன்றுன்மதி வச்சரத்தே
முன்னேறு பூசனை செய்தா னறுபத்து மூவரையே. (109)

வில்லவராயன்.

கட்டளைக்கலிப்பா.

கங்கை சூடுங்கயிலாய நாதனுர் கதித்தநிர்த்தமகாமண்டபத்திலே,செங்கலாலேதளவிசையோடுடன் சிதம்பரேசர் சபையதுகண்டனன், துங்க மாமறுபத்தாம் படியின்மேற் சுவரெழுப்பிப்படி கட்டுவித்தனன், சங்கமேவு தமிழ்க்கோதை தன்னிலே தம்பி வில்லவராயன் றருமமே. (110)

மாது லாவுதிருநாகமாமலை மங்கைபாக ரிருதோளுந் தொங்கலுந், தீதிலாதபெரிய வொட்டியாணமுஞ் செங்கைமேவு பலாக்காய் வளையலுஞ், சோதியாக வருசந்திரசேகரர் சுந்தரேசுரரம்பொற் கிரீடமுஞ்,சாதியானதிருவேங்கிடண்ணல்கள் தம்பிவில்லவராயன் றருமமே. (111)

கட்டளைக்கலித்துறை.

தேமேவு கச்சி வருவிசுவ நாதத் திருமலையன்
தாமேவு மாதிரு வேங்கிட வண்ண றனமிதென்றே
பூமேவு கோதை யுமைபாகர் தாளிணைப் பொற்றகடு
கோமேவொழுகரை வில்லவ ராயன் கொடுத்தனனே. (112)

அரவாச லேசர் பெரியொட்டி யாண மமுதளிக்கும்
பரிவான கைக்குப் பலாக்காய் வளையலும் பண்ணிவைத்தான்
தருவான வீகைத் திருவேங் கிடவண்ண றன்மணியம்
மருவாருந் திண்புயன் வில்லவ ராய மகீபதியே. (113)

தளவாய், இராமப்பய்யன்.

திரமேவுவிசுவநாதத்திருமலேந்திரன் சித்தமகிழ் ராமப்பய்யன் செங்கோட்டு வேலரையு மையபாகரைத் தொழுதுதிக்கு விஜயஞ்செய்தனன், உரமானதென்கடற்றிருவணை*யடைத்தனன் உலகுநாற்பதிலட்சமும் ஒருகுடைக்கீழாக வாக்கினைபுரிந்தன னுடையவன் மனது வரவே, துரமானமலையாளமும் கொள்ளைகொண்டனன் றட்டரைக்கழுவேற்றினன் சோரரையடக்கினன் குருவியழகன் §றலை துணித்தனன்பாண்டியரை¶யும், பொருமாறவிட்டுச் சடயக்கனை† யடக்கினன் பூசுரர்கள் தேவர் பதியும் பொலிவுறநடத்தினன் சந்திர சூரியரளவு புகழ் நிலைநிறுத்தினனே. (114)

கோண்டப்பய்யன்.

விருத்தம்.

தென்னுலவு மதுரைவருதிருமலை நரேந்திரன் செங்கோன்மை ராமப்பயன் செல்வமருமகனை கொண்டபூபதிதாது சேரற்பிசைத்திக்களின், மன்னவர்களெதிர்கொண்டு கப்பங்கள் கட்டவே வடகொங்கு நாடாளுநாள், மாதுலவு கோதை யுமைபாகர் தமைவேலரை வணங்கி யபிமானித்தனன், சந்நிதிசிறக்கவே மூவாயிரம்பொனுஞ் சர்வமானியமாகவே தமிழ்மேவு ராக்கனுரையாலிவை யளித்தனன் தனதுடைய வன்றருமமாய்,முன்னமொருசிங்கவன்மன் வளவனொடு பள்ளி முனைநாரணப்ப னெனவே முளரிமாலிகை மார்பகன்கொண்டபூபதி முழுப்படிநடத்தினனே. (115)

---

* சேதுபதி ஒளிந்திருந்த தீவுக்குச்செல்லத் தென்கடலில்கட்டிய பாலம். §விளங்கவில்லை. ¶அப்போது ஏற்பட்ட பாண்டியர் கலகம் †சடையக்கதேவர் அல்லது தளவாய் சேதுபதி.

செம்மைபெறு கலியுக சகாத்தமாயிரமிசை சிறக்குமைஞ்ஞூற்றைம்பதிற் சேராறதானவீ சுரவருடமாசியிற் செங்கோடைவேலருடனே, அம்மையுமைபாகருமகிழ்ந்திட விரண்டுதே ரழகாகவேதந்தனன் ஆனசப்பிரமஞ்ச மூன்றுபேரிகையொன் றலங்காரமஞ்சமாணை, கொம்மைமுலை நவபாத்திரங்களோரேழிளங் கோவிலிடபக்கூபமுங் கோபுரந்தனில் வரிசை பதினொன்று பரிமளக்கோதைசிகரமு மஞ்சனம், எம்மையுடையோன் றிருமலேந்திரன தென்னவே வினியராமப்பன் மருக னியல்பான கொண்டபூபதியதிக தருமங்க ளிப்படி நடத்தினனே. (116)

கொங்கிலரவாசல மகிழ்ந்தவுமை பாகருங் கோதைவேலருமகிழவே, குலவுபயமார்க்க மகரந்துத்தி நத்தமுங் கூனவேலன் பள்ளியும், பொங்குபுகழ் சிறுமுளசை பால்மடையு மேல்கரைப்பூந்துறைசை நாட்டுவரியும், புகலுமணை நன்செயும் போதரவு பண்ணினன் பூசகரை ரட்சித்தனன், அங்கவர்களுக்கர்ச்சனை விருத்தியும் முதவி யத்தலத்துறை வேதியர்க் காகமாம்பூண்டியகரஞ் செய்தளித்தனனனேக தருமஞ் செய்தனன், திங்கள்முக விசுவநாதத்திருமலேந்திரன் சித்தமகிழ் ராமப்பயன் செல்வமருமகனான கொண்டபூபதி சரிதை செப்பவரி தானதிறமே. (117)

வேதமலி கோதைவடிவேலருமை பாகர்தெரு வீதிவரு வெள்ளிவிடையும் வெள்ளிமயில் பொற்சிவிகை மகரத்துசங் கவரிமேவுபீலிக்கவிகையும், மாதுலவு சிகைதாடு * பீதாம்பரக்கபாய் வடிவானதுகிலாடையும் வரிசைபெறு தினசலவை யாலவட்டங்கள் பலவகைமாலையுறுமால்களும், கீதமிகுமேளவகைநாடகவிதங்களுங் கேளிக்கை உவைபோகமும் கேள்விபெறுதம்பட்ட மூவிரு தடாரியுங் கிரணவெண்கலதீபமுஞ், சோதிபெறுவாணவகை தேரலங்காரமுஞ் சுருதியோசையு மிதுவெலாந் துங்கனுயர் கொண்டபூபதிதனது மன்னவன் சொற்படி நடத்தினனே. (118)

---

* கொண்டையணியென்று. உ மகளிர் விளையாட்டு.

தண்டமிழ்பெறுங்கோதையுமை பாகருக்கினிய சம்பாவின முது படியுந் தானேழுகறியமுது பயறுபடி யொன்றுநற் சந்தனம் பலமொன்றரை, மண்டலமதிக்கவே காவேரிமஞ்சன மங்கிணிக்கு டம் * நாலுதான் வரவெரு திரண்டதற்காளுமொவ் வொன்றுக வகைமாலை யுறுமால்களும், புண்டரிகமலராதியான பூம்பந்தலும் புளகிலாமிச்சைவேரின் பொற்கவரி விசிறியொடு காளாஞ்சி வெள் ளிமடல் புனையாடியோடிதுவெலாங், கொண்டமகிபாலகன் றனது பயமாகக் கொடுத்தனன்றினமானமுங் கொற்றவன்றிரு மலேந்திர னுடைய தருமமுங் குறைவறநடத்தினனே. (119)

வெண்பா.

நாரணப்பன் முந்நா ணடத்தினமா சித்திருநாள்
சீரணவுத் தாரணமுஞ் செய்தானே - தாரணியில்
கொங்கிருக்குங் கோதைக் குமரருக்கு மம்பிகையோர்
பங்கருக்குங் கொண்டமகீ பன். (120)

விருத்தம்.

முன்னுளகிருஷ்ணராயன்முறைதிரியம்பகேசன்
மின்னொருபாகனுரைவேலரையுடிபமேற்றி
மண்ணியதிருநாட்செய்தவாறுகாலத்திசெய்தான்
அன்னவைசெய்தான்கொண்டபூபதிகோதைபார்க்கே. (121)

தாதுவற்சரமுன்னின்பந்தரும்பிரமாதியந்தம்
மாதுரைதிருமலேசன்மந்திரிராமப்பையன்
வேதியன்மருகன்கொண்டவேந்தனேசெங்குநாடு
நீதியேபுரந்தான்கோதைநிமலனேவணக்கஞ்செய்தான். (122)

குருவப்பையன்.

வெற்றிசேர்குருவப்பையன்விக்கிரமவிஷுவிரண்டும்
நற்றவத்திருமலேசனல்கவேகொங்குநாடு
பெற்றினிதுடனேயாண்டான்பேசரும்புகழ்சேர்கோதை
யுற்றனன்பூசைசெய்தானுடையவன்றருமமென்றே. (123)

---

* எருதுமுதுகிற் பொதியேற்றிக்கொண்டுவரும் நீர்க்குடம்.

வெண்பா.

மாதுலவுந் தென்னனுப்பு மண்டபமும் வாசிகையுங்
கோதையிலீ சர்க்குக் கொடுத்தானே - வேதியர்கோன்
எங்கள்குரு வப்ப னியல்புடையோ னித்தருமந்
தங்களுடை யோனுதென்றே தான். (124)

சிதம்பரய்யன்.

ஏலமுறுங் கந்த மினியதுகி லாடைபல
சீலமுட னேகொடுத்தல் செய்தானே - ஞாலமகிழ்
கோதையிலீ சர்க்குக் குருவன் சிதம்பரயன்
நீதியுள்ள மாமறையோ னே. (125)

மாகாணம் - வேங்கடாத்திரி.

விருத்தம்.

சகமேவுவிசுவநாதத்திருமலேந்திரன் றனதுமந்திரிகுருவயன் தானருள மாகாண வெங்கடாத் திரிவந்து தாரணிபுரக்கு நாளில், அகமேவுபொன்னம்ப லய்யனெழுதினபடியி னுனதம்பாமுதலியா ரர்த்தநாரீசுரர் படித்தரமுயற்சியாயங்கரங்களுஞ்செய்தனன், மிகமே வுவர்க்கவகை பணியாரவகைகள் பலவெஞ்சன * மனேகங்களும் வியனுனவபிஷேக நைவேத்தியங்கள் கன விமரிசுடனே செய்தன ன், மகமேவு திருவிழா வைகாசியுற்சவமு மகிமையுடனே நடத்தி மன்னுதானம்பரி சனங்களனைவோரையும் மகிழ்வுறநடத்தினனே.

வெண்பா.

மாசித் திருநாளின் வைபோக முன்னோரித்
தேசத்தி லில்லையென்று செப்பவே - பூசித்தல்
செந்திருவாழ் கோதையிலே செய்தான் செழுமறைதேர்
ஐந்தருவான் வெங்கடரா யன். (127)

---

*சிற்றுண்டி.

விருத்தம்.

திறமிகுவிசுவநாதத்திருமலைராயன்மேவு
மறையவன்ராமப்பையன்மைத்துனன்வெங்கடாத்திரி
முறைமிகுகொங்குநாடுமுழுதுமேசித்துபாநு
விறையெனவாழுநாளிலேலரசஞ்சிறப்பித்தானே. (128)

வெங்கிடகிருஷணய்யன்.

விருத்தம்.

பத்திசேர்வெங்கடாத்திரிபரிந்தவெங்கடகிருஷ்ணய்யன்
முத்தமிழ்க்கோதையார்க்குமுழுப்படித்தரம்நடத்தி
சித்திரமெழுதிவைத்துச் சிறப்புடன்றிருநாடன்னே
மெத்தவைபோகஞ்செய்துவேண்டியபலன்பெற்றனே. (129)

இராக்கியப்ப முதலி.

தயவொடிராக்கபூபன் றன்னிடவரசர்க்கோதி
யியல்புடனர்த்தநாரியீசுரர்க்கதிகபூசை
பயனுறநடத்திமேன்மேற்பாக்கியம்பெற்றுவாழ்ந்தான்
மயல்புனையிரதிகாந்தன்மயல்புனைமன்னன்றானே. (130)

கட்டளைக்கலித்துறை.

சீராருங் கோதை யுமைபாகர் பூசைத் திருப்பணியும்
ஊரானதுந் தல முண்டா னதுமுற வோர்மடமும்
பேரார் பரமன் றிருநாளு மேலும் பெருமைகளுங்
கார்ராளன் றென்புலி யூராக்க பூபதி காலத்திலே. (131)

கிருஷ்ணய்யன்.

விருத்தம்.

பன்னுதமிழோர் புகழ்சுபானு வற்சரமாதி பரவு வியவருட வரையும், படியாளவருதிருமலேந்திர னளிக்கவே பங்கயத் தொடைமார்பகன், மன்னவர் மதிக்கவரு கோப்பூரிராமய்யன் மைத்துனன் கிருஷ்ணபூபன் வலியராதாபுரமுடன் கொங்கு துருசமும்

மனு நீதிமுறை புரியுநாள், கன்னடிய நஞ்சயன் செங்கோடு தனில் வந்து கனககவமணிகலசமும் கனதாருணத்தற் பிசைத்திங்களிற் கொள்ளைகட்டியே கொண்டேகினன், இன்னகுறை தீரவே பொன் னூறு நெல்சலகை யிருநூறு மேதந்தனன் இன்பமொடு சம்புரோக்ஷணை நடப்பித்தனன் எங்கள் கிருஷ்ணயமகிபனே. (132)

நாகமாமலைக்கே வந்து நஞ்சயன் பரித்தபோது
வாகிலி கெம்பராக்கன் மாதல மென்று சொல்லி
ஏகெனவமர் மகேச விலிங்கமும் பரியந்தந்து
வேகமாய்க்கலச மாடவேண்டிய பொருளுந்தந்தான். (133)

வெண்பா.

மன்னு புகழ்க் கோதை வயிரதீர்த் தத்தருகே
மின்னுமதி பூங்கதவு மேவினன் - தென்னுலவு
வெங்களிற்றோன் ராமயன்பான் மெத்தமணியம் புரக்கும்
பங்கயத்தோன் கிருஷ்ணபூ பன் (134)

அழகாத்திரி நாய்க்கன்.

விருத்தம்.

வெற்றிபுனை வியவருட மானிமாசந்தன்னில வீரூர்துலுக்கர் படையால் மேல்கரையிலேகு முமைபாகரை வணங்கியேமேவி யர்ச்சனை செய்தனன், கொற்றமிகுதிருமலேந்திரனுபயமாகவே கோபாலகிருஷ்ணப்பனுங் கோப்பூரு ராமயன் மணியங்கிருஷ்ணபூபனுங் கூற வழகாத்திரி தயவாய், நித்தமிரு நூறுபடியரிசிகட்டளையிட்டு நிறைபூசை யதுசெய்தனன் நீங்காமலிருபத்து நாலுபடி தானிகர் நிர்வாகவமுதீந்தனன், உற்றனை கொடுத்தனன் பணிமலையிலனைவர்க்கு முயிர்தாரை யதுவார்த்தன னுயர்பஞ்ச காலையி லி ரட்சித்தனன்புகழை யோங்குற நடத்தினனே. (135)

கோபாலகிருஷ்ண பிள்ளை.

திரந்தருசர்வசித்து சேரவே சர்வதாரி
உரந்தரு திருமலேந்திர னுதவவே கொங்குநாடு

புரந்தகோபாலகிருஷ்ண பூபதிகோதையார்க்கு
தரந்தரமாகப்பூசை தன்னையே நடத்தினனே (136)

சேஷாத்திரி பிள்ளை.

கனமுறுவிரோதியாதி கரவருடத்துமட்டும்
மனமுறுதிருமலேந்திரன் மகிழ்ந்தளித்திடவேசெங்கோல்
இனந்தருகுன்றத்தூரோ டிருபத்து நான்கு நாடுந்
தினமுறுமதிபன் சேஷாத்திரிமகிபதியே யாண்டான் (137)

தென்னுயரனங்கன் சேஷாத்திரியெனுந் தருமராயன்
தன்னுயர்கருத்தனுனேன் தனது புண்ணியமதாக
மன்னுயர்கோதையாரை வணங்கியே மிகவும்பெற்ருன்
பன்னியேமிகவும் பூசை படித்தர நடத்தினனே. (138)

அம்புவிபுரந்தகோபாலகிருஷ்ணன் மணிய மாண்டியப்பன்கல கமும் அடஒறு துலுக்கர்படையுங் கண்டுசெங்கோடை யர்த்தநாரீசர்தமையே, இன்பமொடுகுன்றை யினிலர்ச்சித்து மீளவுமெழுந்தருளவேசெய்தனன் எழிலானகைலாய நாதராதாரசிலை யிளைய நயினர் தளவிசை, உம்பர்தொழ வருகோபுரத்துவரி நான்குதுிலை... குமேற்கட்டி திருநாள், உற்றநவகலசங்கள் கொப்பரை கடாரங்களுருருளை சருவந்தபிலையுஞ், செம்புமயமான திருமஞ்சன குடங்களுந் தீபசரமாளிகை களுந் தீப தண்டங்களும் புதுமைசெய்தனனெங்கள் சேஷாத்திரிமகிபாலனே. (139)

கோனப்பையன்.

செந்தமிழ்மாலைமார்பன் திருமலைராயன்மேவ
நந்தனவிஜய மட்டும் நரசயன்கோன பூபன்
வந்தனைக்கினியான் கொங்கு மநுமுறை செய்யும்நாளில்
பந்தணி விரலாள் பாகன் படித்தர நடத்தினனே. (140)

கஸ்தூரி அய்யன்.

விருப்புடன் கோதையார்க்கு வெள்ளியிற் புழுகுக் காப்பும்
பருப்புடன் கறி நெய்யப்பம் பாலமுதடிசிலாக்கி

திருப்படி கமலமார்பன் சிறந்த கஸ்தூரிராஜன்
கருப்படி வறவெழுச்சிக் கட்டளை நடத்தினானே. (141)

சேஷாத்திரி பிள்ளை.

வாசமாஞ்செயமுன்னாக மன்மதவருடமட்டும்
தேசம்மெண் புகழ்சேர்சேஷாத் திரிமகிபதியன்பாக
நேசமாங்கொங்கு நீதி நிகழ்த்திடு போதுகோதை
ஈசரைப்பணிந்து பூசையியல் பொடு நடத்தினானே. (142)

நாரணய்யன்.

திருந்திய துன்முகி முதலா வேர்விளம்பி வருடமட்டுந் திருமலேந்த்ரன், பரிந்தருள் நாரணப்பனிருகரையுமதி காரம்பண்ணும் போது,சுரந்தருளுங் கருணைபர்த்தநாரீசர் பணிமலையைத்துதித்துப் போற்றித், தரந்தரமாயங்கரங்க வைபோக மெனப்பூசை தனைச் செய்வித்தான். (14)

திம்மரசய்யன்.

பார்புனை புத்துவீரன் பரிந்திட விளம்பியாண்டில்
ஏர்புனை மணியமேவு மினியதிம் மரசபூபன்
தார்புனைகோதை வாழுஞ் சங்கரி பாகனார்க்கு
சீர்புனை யதிகபூசை சிறப்புடனடத்தினானே. (144)

சேஷாத்திரி பிள்ளை.

மண்டலமகிழ்விகாரி வற்சரந்தனிலேவந்து
திண்டிறலான சேஷாத் திரியரசாளும் நாளில்
அண்டர்கள் பரவுங் கோதை யர்த்தநாரீசனார்க்குப்
பண்டையில் வள்வன் போலப்படித்தரம்நடத்தினானே.(145)

வரமருவு சாறு வரிமுதலாக வேபிலவமட்டதாக [நாளில்
உரமருவநாரணய்யன் மநுமுறைமையினிய செங்கோ லோச்சு
அரமருவு வடிவேல ருமைபாகர்படித்தரங்க ளதிகமாக்கித்
திரமருவு மரவகிரிதனிலெவர்க்கு முபகாரஞ் செய்வித்தானே.(146

நல்லபாட்டையன்.

சீர்மேவு பிலவ வருடமாசி மாதந் தேதி யைந்தினின் மகத்தின் திருவிழாவின், பார்மேவு சொக்கலிங்க ராயன்மேவப் பன்மறையோரணைப்பனுமந் நாளில், ஏர்மேவுகோமைந்த வடிவேலர்மேனிக்கேற்ற திருமார்பினப்பி தங்கத்தாலே, தார்மேவு மார்பனப்பாக்குட்டி யென்போன் றந்த நல்லபாட்டையப்பன் சாத்தினனே. (147)

சேஷாத்திரிபிள்ளை.

நலமருவு கலியுக சகாப்த மாயிரமிசை நடக்குமஞ் ஞூற்றெண்பதின் நாலான பிலவ வருடமாசி யிருபத்தைந்து நாள் சுக்கிர வாரமகமும், பலமருவு மிடபலக்கினஞ் சுகரு மங்கரசை பௌரணைமையும் பெற்றநாள் பன்னுதமிழ் விசுவநாதச் சொக்கலிங்க பூபதி மந்திரி வேதமறையோர், குலமருவு நாரண மகிபதி சகோதரக் கொற்றராகவன்மணிய மென் கோனதிமூர்த்தி யதிகாரயப்பாகுட்டி குணநல்லபாட்ட மகிமன், தலமருவு மரவகிரி வேலவர்க் கெழிலான தங்கத்தி லந்திதனையே தனதுமன்னவனுடைய தருமமெனரதமீது சாத்தினன் கீர்த்திபெறவே. (148)

திரமருவு கலியுகசகாத்தமாயிரமீது சேருமைஞ்ஞூற்றெண்பதிற், செல்லுநாலான பிலவ வருடமது சித்திரைத் தேதி யிருபத்தெட்டினிற், குருமருவு சத்தமிப்பூச நட்சத்திரங் குலவு கோசல கரணமுங், கூடின விருத்தியோகமு மிடப லக்கினங் கொண்டதொரு மேனாளினில், மருமருவு திண்புய னாரணிபடைத்தமால் மன்னர்படி தெய்வராயன், மைந்தனருணாத்திரி சகோதரன் மநுநீதி வாய்ந்தசேஷாத்திரி மகிபன், தருமருவு மரவகிரிமீது வடபாரிசத் தண்பிரம தீர்த்தமருகே, தவவிசுவநாதப் பிரதிட்டைசெய்தனனதிகசந்ததி தழைத்தேறவே. (149)

கலைமேவு தமிழ்மதுரை விசுவநாதச்சொக் கலிங்கபூபதி மகிழவே, காசினிபுரக்கவரு சேஷாத்திரி பூபதி கனத்தபுண்ணியமாகவே, நலமேவு புகழர்த்தநாரீச பண்டித னல்கவருகல்விமுதலாம்,

நம்பினவர்தம்பமென வன்புபுரி கும்பமுனி நல்லபமகீபாலகன்,குல மேவுமரவகிரி யாலயந்தன்னில் வடக்கோபுரத் தென்மேலையின் குமாரவிசுவேசுரர் விசாலட்சி நந்தீசன் குஞ்சரமுகேசர்தமையும், தவமேவு மண்டப முடித்ததிலிருத்தியே தாபனஞ் செய்வித்தனன், தாரணியி னீடூழி யசமானனுக்கதிக தருமந் தழைத்தேறவே.(150)

மன்னிவரு சுபகிருது முதலதாக வளர்விசுவா வசுவருட வரையுங்கூடற், றென்னுலவு சொக்கலிங்க னருளாற் சேஷாத் திரி சமுகன் கொங்குசெங்கோல் செலுத்துநாளில், நன்னிலமெண் கோதையுமை பாகனுர்க்கு நல்ல திருப்பணிகள் படித் தரங்களீந்து, பன்னுமறை யோதுமர்த்த நாரியீசபண்டிதருக் கபிஷேகம்பண்ணி னனே. (151)

சீர்மேவுகலியுக சகாத்தமாயிரமீதுசேருமைஞ்னூற்றெண்பதிற், செல்லுமேழாகிய குரோதி வைகாசியின் றேதியொன்பதின் வெள்ளியிற், பார்மேவு சத்தமித் திருவோணமும் பெற்ற பரிவுபெறு மேனுளிற், பன்னுதமிழ் விசுவநாதச் சொக்கலிங்கபூ பதி மனது வரும் மன்னவன், தார்மேவு மணிமார்ப னரணி படைத்தவன் றயவுடைய தெய்வராயன், றந்தருளவந்சே ஷாத்திரி நராதிபதி தனது புண்ணியமாகவே, ஆர்மேவு வேணியுமை பாகர்வேலைவ ரருளி னர்த்த நாரீசனெனுமா, லர்த்தநாரீச பண்டிதராயகுருராய ரபிஷேகம் நிலையானதே. (152)

தேபுரத்தண் கமலமலர் வாவிசூழுந் தென்மதுரைச் சொக்க லிங்கராயன்மேவத், தாபரித்துப் புவிராச்குந் தெய்வராயன் றந்த ருள்சேஷாத்திரி மன்னன் ஞானசோமன், மாபுரத்தாள் *கைலாய நாதர்கோதை, மன்னியதேவாலயத்தின் வாய்தல்மேவு, கோபுரத் துவரியனைத்தும் பாவுமேற்றிக் கொடுங்கையுடன் கபோதமட்டுங் கூட்டினனே. (153)

---

* பூர நக்ஷத்திரத்துதித்த பார்வதி.

வெண்பா.

* நணிய கயிலாய நாதருக்குப் பூசை
அணி கிளருங் கோபுரமுண் டாக்கிப்—பணிமலைமேற்
காசி விசுவ நாதருக்குக் கற்கோ யிலும்பணித்தான்
தேசருணற் சேஷாத் திரி. (154)

சரவணப் பெருமாள் பிள்ளை.

அம்புவியெண் சோபகிருது கன்னிமாத மாரணி சேஷாத்திரி கொங்காளுநாளில், நம்பர்கயி லாயருடன் கோதைவாழ நங்கைபரி மளவல்லி நாச்சியார்க்குச், செம்பின்மிசை தங்கமுலாமகுடங்காது சீர்பாத முலைகழுத்து கரங்கள் நான்கும், தம்பமெனும் வழியடிமை கொண்டானன்பாய்த் தந்த சரவணப்பெருமாள் சாத்தினனே. 155

தாரணி யெண்கோதை யர்த்தநாரீயீசர் தமக்கிருபத் தைந் தாண்டு தவிர்ந்துமோன, ஏரணிசித்திரை வசந்தத் திருவிழாவை யியல் சோபகிருது முதலா யெடுத்துக்கூட்டி, ஆரணி மன்னவன் கருணைத்தெய்வராய னருளிய சேஷாத்திரிகொங் காளுநாளில், காரணிகன் வழியடிமை கொண்டான் பாலன் சுதித்த சரவணப் பெருமாள் நடத்தினனே. (156)

பலமிகு விசுவாவசுவினிற் கோதைப் பதிவரு குருக்கணல் லயன் சொற், படிகுடியுடனே பரிசனத் தவரும் பரிவுடன்சரவணப் பெருமாள், தலமகிழ் மங்கைச் § கணுகியே ராமச்சந்திர ¶ பூபதிக்

---

* ஸ்ரீ கைலாயநாதர்கோவிற்கோபுரவாயில் நிலவின்மேற்படியில் ஸ்வஸ்தி:— ஸ்ரீ சகாப்தம் ௲௫௱௭௰௫ இதன்மேற் செல்லாநின்ற சோபகிருது ஆவணிமீ ஸ்ரீமது விசுவநாத சொக்கலிங்க நாயக்கரவர்கள் ராஜ்ஜியபரி பாலனம் பண்ணுகையில்." என்றெழுதிய பின் இந்த வெண்பா செதுக் கப்பட்டுள்ளது.

குரைக்கத், தபவுடனவனு மலைமிசையேறித் தருவறுவாக்கியே யிறக்கி, நலமுடனருள மரமெலாங் கொணர்ந்து நாசமாமலையின் வேலர்க்கும் நாரிபாகர்க்குந் திருக்கொடி கம்பம் நானிலம் புகழவே நிறுத்திக், குலவிய கைலா யப்பராலாயத்துக் கோபுரக்கதவு தேருருளை, கொடுத்தனன் றிருத்தேர் நடத்தினன் மதுரைக் கொற்றவன் வெற்றியே பெறவே. (157)

கட்டளைக்கலித்துறை.

விசுவா வசுவிட பத்திங்களாறின் வியாழத்தினு
ளிசைவான ரோகணி யோடமா வாசையு மோரகஞ்சேர்
புசவாசி யானவடிவே லவர்க்குமுன் புந்தியன்பு
கசிவாஞ் சரவண னட்டிவைத்தான் கொடிக் கம்பத்தையே.

வேலவன் றேர்க்கும் விநாயகன் றேருக்கும் மெல்லியுமை
பாலகன் றேருக்குங் கல்லாற் றளவிசை பண்ணுவித்தான்
சீலவனு வழியான் சரவணச் செல்வனெடு
மாலவன் கீர்த்திபெற் றூன்விசு வாவசு வற்சரத்தே. (159)

வெண்பா.

சேஷாத்திரி பிள்ளை.

ஆலயத்து வாழை யழகியம்மை யேரியின்கீழ்ச்
சோலையொத்த நந்தவனஞ் சோம்பாக—மாலையொத்த
மானபரன் கீர்த்தி மருவியசே ஷாத்திரி மெய்ஞ்
ஞானபர னுண்டாக்கி னன். (160)

---

§ சேந்தமங்கலம். ¶ ராமச்சந்திர நாயக்கன். சேந்தமங்கலத்தில் கம்பளத்தார்களில் பங்காரு ராமச்சந்திர நாயக்கன், மும்முடி ராமச்சந்திர நாயக்கன், தலைமலை ராமச்சந்திர நாய்க்கன். குளக்குடி ராமச்சந்திர நாயக்கன் ராக ராமச்சந்திர நாயக்கன், குறவஞ்சி ராமச்சந்திர நாய்க்கன் என முறையே ஏழுபேர்கள் அதிகாரிகளாய் அங்கே பல கட்டடங்கள் அக்கிராரங்கள் செய்தனரென்றார்கள்.

செங்கைமுகி லானசொடைச் சேஷாத்திரி ராயன்
எங்கள் விசு வேசுராருக் கேற்கவே—துங்க
படித்தரமு நித்த நித்தம் பண்புறவே நன்றாய்
நடத்து வித்தா னின்பமுண்டா னன். (161)

விருத்தம்.

மீட்டான பணிமலைவா முமைபாகர் நந்தவன வேலையோர்க்மிக
நீட்டாக வாழுமர்த்த நாரீசபண்டிதன்பா னிலைமையாக
பாட்டான தொடைமார்ப னரணி சேஷாத்திரிதன் பத்தியாலே
நாட்டார மங்கலத்தி லிருபானற் பொன்னிலமு நடப்பித்தானே.

ஆதி மூர்த்தி.

பராபவம் வென்றிமாலைப் பங்கய னதிமூர்த்தி
நராதிபன் பிலவங்காண்டு நல்லகாளத்தி நாதன்
வரோதயன் கீலகாண்டு மநுநீதி புரியும்நாளில்
புராதன கோதையீசர் பூசனை நடத்தினனே. (163)

சங்காலு நாயக்கர்.

தவமிகு சௌமியாதி தழைத்த சாதாரணந்தம்
புவிபுரந்திடு சங் காலு பூபதி புலியூர்தன்னில்
நவரசமான நஞ்சை நாலு மாநிலங்கள்போட்டுப்
பவமகல் கோதையார்க்குப் படித்தரம் நடத்தினனே. (164)

கட்டளைக்கலித்துறை.

சாதா ரணச்சிங்க மேழான தெய்திபின் சந்திரநாள்
ஆதார நாக மலைமேலை வாச லடுத்ததெற்கே
வேதாகமத்தின் விசாலாட்சி யைவிசு வேசுரரை
மாதானஞ் செய்தருச் சித்தான் செங்காலுமகிபதியே. (165)

சோக்கலிங்க நாயக்கர்.

விருத்தம்.

வெற்றிசேர் விரோதிகிருது வியன் பரிதாயிபந்தஞ்
சொற்றமிழ் மாலைமார்பன் சொக்கலிங்கய னன்பாக
கொற்ற வெங்கிட கிருஷ்ணப்பன் குவலயம் புரக்குநாளில்
நித்தமுங் கோதையார்க்கு நிறைபடித் தரங்களீந்தான். (166)

முத்தளகாத்திரி நாயக்கர்.

வேதியர் மகிழ்ந்துபோற்றும் வேலர் மண்டபத்தை வாங்கி
கோதையிற் கைலாயப்பர் கோபுர வடகீழ் மூலை
மூதறியவுடையோன் கச்சி முத்தள காத்திரிமன்னன்
மாதயவுட னுஸ்தான மண்டபங் * கட்டினனே. (167)

வீரராகவ முதலியார்.

பைந்தமிழ்த் தொண்டைநாடன் பகிரதி குலத்துவேந்தன்
விந்தைசேர் பரசுராமன் வீரராகவ பூபாலன்
எந்தையார் கோதைவாழு மீசர்மா சந்நிதிக்கண்
சந்ததமிரண்டு சாதஞ் சதாசிவ குரவற்கீந்தான். (168)

சேவ்வந்தி.

வடிவுறு சரணர்கோதை வருகயிலாய நாதர்
நடன மண்டபத்துக்கேக நல்லிரு சுருளோடைந்து
படியடைவாகக்கட்டிப் பரவின னிறையோன் வாழத்
தடபுயன் சொக்கநாதன் றந்த செவ்வந்தி தானே. (169)

சோக்கநாதன்.

வெண்பா.

செஞ்சொல் வருக்குக் கோவை? செங்கோட்டு வெண்பாவும்
பஞ்சவிதி லட்சணமாய்ப் பாடினன்—றஞ்சமெனுங்
காரணிகன் சேரை கதித்தபிறை சூடிமைந்தன்
தாரணிகன் சொக்கநா தன். (170)

---

* மண்டபசிகாமணி யென்னுங் கர்த்தர் மண்டபம்.

வெள்ளியிலே நாரி விநாயகர்க்கு நூறுடனே
தெள்ளி யிருபதுநற் றேங்காயு—மள்ளி
யுடைப்பித்தா னுகிசேர்க் கோங்குபிர தோடம்
நடப்பித்தான் சொக்கநா தன். (171)

ஆசிரியவிருத்தம்.

செஞ்சொல்சேரரவ கிரிவருமுருகர் தேவியோர்பங்கர்மெய் குளிரத், திறமிகுபஞ்ச கௌவிய வைந்தமுதந் திகழ்பல பலாசிஞேதகமுஞ், கஞ்சமாமலரின் புட்பவோதகமுங் கனகமாமணியிஞேதகமுங், கங்கை காவேரி மஞ்சனந்தபனகலசமும் பனியினீர்புநுகும், விஞ்சிய சகலபரிமளங்கலந்த மெல்லியசந்தனக்குழம்பும், விதியுடனபிஷே கம்புரிந்தேனை வெற்றியுங் கொடுத்துமால்படைந்நான், றஞ்சமென்றவர்க்குத் தாதைதாயனவே தருமபிடேக சொக்கப்பன் முரணி தனிலாயிரம்பிறை தொழுது சந்ததி பெற்றுவாழ்ந்திடவே. (172)

வேறு

இரத்தனகிரி பிள்ளை.

அண்டர்தொழ வருகோதை யுமைபாகருக்கினிய தான நாலாந்திருவிழா, வதிகமண்டபபூசை யிடபவாகனசேவை யழகுதிருநந்தவனமுங், கண்டிரசமானமுக் கனிவகைகளும்பஞ்ச கௌவியமுங் கந்தங்களும், கார்த்திகையினபிடேக நைவேத்தியங்களுங் கனககலைதிருமாலையும், மண்டலமதிக்கவரு சீனிவாசன் சோமவார நாடகவரிசையும் வதுவைபூதானந்திருக்கைபின் வழக்கமும் மடதருமமும் பரிவுடன், எண்டிசையெண் மதுரைவரு விசுவநாதத் திருமலேந்திரன் றருமமெனவே யிவற்றினை நடத்தினமெனல்லார்க்கும் நயினுனிரத்நகிரி மகிபாலனே. (173)

சேனுபதி அர்த்தனுரி பண்டிதன்.

கட்டளைக்கலித்துறை.

வானோர் பணிபு முமைபாக னுரர்த்த மண்டபமுன்
ஏனோர் பணியுந் தலைவாசல் காவ லிருவரையும்
ஞானே தயனெங்க டேவார நம்பிதென் னுகவெற்பிற்
சேனுபதியர்த்த நாரீச பண்டிதன் செய்தனனே. (174)

முத்தியாலுநாய்க்கன்.

ஆசிரியவிருத்தம்.

தேமேவுகலியுக சகாத்தமாயிரமீது சேருமைஞ்ஞூற்றைம்ப திற், செல்லு மொன்றாகிய விளம்பிவருபங்குனித்திங்களிற் பரிவாக வே, மாமேவுபணிகிரித்தென்வாசலுக்கருகு மன்னுவிசு வேசுரரை யும், மாதுமை விசாலாட்சி நந்திகணபதியோடு மண்டபமும் நிறை வேற்றியே, கோமேவு தென்கொழுங்கெண்டையுமளித்தனன்குலவு நான்காந்திருவிழாக் கொண்டாடு மண்டபமுமற்று நந்தாவனக்கூவ மும் பெரிதாக்கினன், பூமேவு விசுவநாதத்திருமலேந்திரன் புண்ணி யமதாமென்னவே, புகழுனகஸ்தூரி ரங்கபூ பதியுடைய புதல்வன் முத்தலபூபனே. (175)

கோதாரஉடையார்.

காரணிகமாகவரு நாகவரை மீதினிற் கன சர்வதாரி வருஷங் கல்லு வசவன் வீறு தெய்வீகமாகவே கடலையுணவே கண்டனன், தாரணிமதிக்கவரையடி வார வடநீழ றன்னில் ராட்சதவற்சரஞ் சண் முகப்பிரதிஷ்டை மண்டபங்களுமழகு தானுக நிறைவேற் றினன், சீரணியு மேழுகரை நாட்டுபயமார்க்கமுஞ் சேரவவரவர் மேவவே, செப்பியிலைவதாரை வார்க்கும்படி நடத்தித் திருப்பணி விசாரித்தனன், ஏரணியுமேழுகரை நாட்டு மன்னவருடனிருபத் து நான்கு நாடு மின்பமுடனுபசரிக்கப்பெற்றிருந்தன னினியகே தாருடையனே. (176)

கிள்ளிசோழன்.

வெண்பா.

தாவும் பணியசலத் தாழ்வரையின் ஞேணியிலே
மேவும் படிக்கு விதமாகப்—பாவின்ப
வேதமிகு சாத்தனையும் வெள்ளானையு மமைத்தான்
சோதிமிகு கிள்ளிநற்சோ ழன். (177)

மைசூரார் துரைத்தனம்.

சிக்கதேவராஜு.

வெண்பா.

பத்திரைசா முண்டிதந்த பாரவரம் பெற்றிடுசற்
புத்திரனுப் பூலோகம் போற்றுமால்—சித்திரந்தேர்
சிக்கதே வேந்திரயன் செங்கோடர் பூசனைக்குத்
தக்கதே தந்தான் றனம். (178)

விருத்தம்.

திண்டிறல் வீரன் சிக்க தேவரா சேந்திரேசன்
தண்டமிழ்க் கோதையார்க்குச் சர்வமானியமேதந்தான்
கண்டர்கள் கண்டன் வெற்றிக் கத்திவாய் முனையினாலே
மண்டல முழுதுங்கட்டி மதுரையுங்கட்டினனே. (179)

கட்டளைக்கலித்துறை.

தன் மண்டல மெனுங் கொங்கே ரகத்தன்ன ருள்பணிந்து
தென்மண்டல முத்தமிழ்நாடு சோழமுஞ் செஞ்சிதஞ்சை
முன்மண் டலமுத்தரதேசங் கத்திமுனையிற்கட்டி
நன்மண் டலம்புரந்தான்சிக்க தேவ நரேந்திரனே. (180)

குமாரதளவாய்.

ஆசிரியவிருத்தம்.

திண்டிறல் பெறுஞ் சிக்க தேவப்பராசுடைய சித்தமது களி கூறவே, திக்குவிசயம்புரி குமாரதளவாய் கொங்கு தென்முகந்தள மெய்தியே, மண்டலமதித்தபிரமாதீச வையாசி மணலிமுட்டாஞ் செட்டியும், மன்னுபரமத்திபு மனந்தகிரியுங் கொல்லி மலைமகால ட்சுமி கடியும், கொண்டரவகிரியிசரைத் தரிசனஞ்செய்து கோவி லப்பனை வாங்கியே, கோதைத்தலச்சர்வமானிய மெனத்தந்து குண முற்ற வசவையனை, அண்டையிலழைத்தர்த்த நாரீசர் சந்நிதியை யழகுடனடத்தென்னவே, அரசர் புண்ணியமாகவே யந்த மன்ன வனு மப்படி நடத்தினனே. (181)

முத்துவசவையன்.

மனமேவு நாககிரி வடிவேலர் பலியருகு வாங்கு படை முன் சரி மதில், மறலிவாசறக்கதவு நிலைகாலடிப்படை மடப்பளித்தள விசைகளும், கனமேவு வையாசி நடைவீதி நடைவாவி காளிகோ விற்பிரபலங், கயிலாய நாதரறை திருமடப்பள்ளியொடு கவுரி மண்டப சுவர்களும், அனமேவு முமைபாகரணி திருக்குழையோலை யத்தமுங் கண்டுதரமு மங்கிமக பூசனைபடித்தரந் திருநாளி னதிக வைபோகங்களுந், தினமேவு தேவ ராசேந்திர நராதிபதி சீர்பெரு குமார தளவாய், சித்தமது மகிழ்மணியமுத்து வசவையன் றிருப் பணி புரிந்த திதுவே. (182)

சீர்மேவுகலியுக சகாத்த மாயிரமீது சேருமைஞ்ஞூற்றின் மிசையே திகழ்கின்ற தொண்ணூற்றினேழிலாநந்தஞ் சிறந்த கன் னித்திங்களிற், பார்மேவு மிருபதுட ஞென்பதாந் தேதியின் பன்னு சௌமியவாரமும், பத்திரைவிருத்தியே காதசி சதயமும் பரிதனு சுலக்கின மதனிற், றூர்மேவு தேவரா சுடைய புண்ணிய மதாய்ச் சௌரியகுமார தளவாய் தன்மணிய முத்துவச வயன்மனது சரிவந் த சதுர திவ்யலிங்கயன், ஏர்மேவு நாககிரி யர்த்தநாரீசருக்கிருகுழை மகரகொந்தளம், எழில்பெற வணிந்தனன் மைசூரில் வருமரச ரினி தூழி யுலகாளவே. (183)

வெண்பா.

செம்மையுமை பாகர் திருக்குழையுந் தென்னழகி
யம்மை திருக் கோயிலு முண் டாக்கினான்—எம்மை
யுடையான் வழியடிமை கொண்டாள வுற்றோன்
படியாள் சரவணபூ பன். (184)

மண்டலந்தொழுதே வராசய நரேந்திரன் மந்திரிகுமாரதள வாய், வைத்து மணியம்புரியுமுத்து வசவய்யனன் மனது வந்திடு லிங்கயன், எண்டிசைசவழுத்து பணிமலை வேலருமைபாக ரிதயமது களிகூரவே யினியவபிஷேகநைவேத்திய படித்தரமு மெழிலாடை யாபரணமுந், தண்டுலவு தீபதூபங்கள்விபணிமாலை சங்கீதமேள

நடனந் தானமுறவோர் பரிசனங்களந்தணரன்ன தானமடபலதருமமுங், கொண்டலெனவுதவு மகிசூரரசர் தமதுடைய குலவுபுண்ணியமாகவே குற்றமறவே நடத்தினனினிது நீடூழி குவலயந்தனில் வாழ்கவே. (185)

கட்டளைக்கலித்துறை.

தண்டாமரை முகமுதரமுந்தோளுந் தடவுரமுங்
கண்டார் மகிழக் கனகாங்கி கோதைக் கடவுளுக்கு
உண்டாக்கி னன்சிக்க தேவப்பராசனுபயமென்றே
வண்டாடு மாலை புனைமார்பன் முத்து வசவையனே. (186)

இலிங்கய்யன்.

ஆனந்தக் கன்னியினுலேழு நாண்மிசை யம்புவியெண்
வானந்த நாக மலையீச ருக்கு மகரகுழை
தானந்த வாம குழை கொந்தள மிவை சாத்திவைத்தான்
போனந்தருதிவ்ய லிங்கயபூபன் புகழ்பெறவே. (187)

ஆசிரியவிருத்தம்.

மாதுலவு கலியுக சகாத்தமாயிரமீது வளருமைஞ்ஞூற்று மிசையே, மன்னுதொண் ணூற்றேழி லாநந்த மகரமதி மருவு மூன்றுந்தேதியின், போதுலவு சுக்கிரவாரமுமதியமும் பெற்ற புனர்பூச நட்சத்திரம், புகலரியவுபகரண விஷ்கம்ப யோகமும் பொலிகும்ப லக்கினமதனில், நீதிபுரிதேவரா சயனுபயமாகவே நிலைபெறுகுமார தளவாய், நித்தமகிழ் மதிமந்திரிமுத்துவச வையன்மிகு நேயதிவ்விய லிங்கயன், கோதை வாழுமுகம்மை சந்நிதானந்தனைக் குலவுநிறை கலையாக்கினன், கொற்றவன்முதலாகவே வரசர்நீடூழி குவலயந்தனில் வாழ்கவே. (188)

திருமேவு மரவகிரி யுமைபாகர் வேலவர் திருப்பணி சிறப்பேறவே, தேவரந் தணர்சுரபி மழைநீதி யோங்கவே சிவசமயமீடேறவே, தருமேவு தேவராசய்யமபலனுந் தளவாய் குமாரய்யனுஞ் சத்தியவாசகனென முத்துவச வையனுந் தயவிலகு லிங்கய்யனுங்,

குருமேவு தானவதி காரகரணிக்கருங் குலவுபரிசனரனைவருங் கோதைவள நகருள்ள குடிகளனைவோர்களுங் கொங்கி லெழுகரை நாடரும், மருமேவு மழுகம்மை சந்நிதானத்ததையா வாகித்தபல மெய்தியே, வரிசையுடனேயதிக செல்வமது பெற்றினிது வையகந் தனில் வாழ்கவே. (189)

கலிவிருத்தம்.

காத்தலே புரிபணி கயிலை யீசனார்
கோத்தலை யானிட கூட கேசரி
பூத்தலைப் பட்டடை பொருந்து பாக்கலும்
ஏத்தலாய் முடித்தன னிலிங்க ராசனே (190)

வேறு.

புவிபுக ழரவமேருப் பொருப்பரன் றெற்குவாசற்
றவமிகு காளியூர்த்வ தாண்டவ விலாசந் தன்னை
கவிபுனை குமாரசாமிக் காங்கேயன் றெடுத்தவேலை
நவமென லிங்கராச னுயகப்பத்தி செய்தான். (191)

முத்துவசவையன்.

திரம்பெறு சிக்கதேவ ராசயன் சித்தமேவப்
பரம்பரைத் தளவா யின்பம் பயில்குமாரய்யன் பாலின்
உரம்பெறு கோதையார்க்கே வுயர்படித் தரம்நாலாண்டு
வரம்பெறு மகவான் முத்து வசவைய னடத்தினனே. (192)

கெம்பராசன்.

சீர்பெறு சிக்கதேவ ராசயன் சித்தமேவப்
பேர்பெறு கெம்பராசன் பிங்கள வருடந்தன்னிற்
றூர்பெறு கோதை யீசன் சந்நிதி சிறப்புண்டாக்கிப்
பார்பெறு கோதை யீசன் படித்தர நடத்தினனே. (193)

தேசப்புடையார்.

வெண்பா.

கொங்காங்க மாகியதென் கோதையரன் சந்நிதியை
அங்காங்க வைபோக மாக்கினன்— றுங்கனெங்கள்

போசரா சன்சமுகம் போலே கவிமொழியுந்
தேசராசய்ய நரேந் த்ரன். (194)

நங்கைபால் வாழுமர்த்த நாரீச லிங்கருக்கே
அங்கிபீ தாம்பரமுண் டாக்கினன்— துங்க
விடையாளன் பாரதம் விளக்குமால் வெற்றிப்
படையாளன் தேசயபூ பன். (195)

கட்டளைக்கலித்துறை.

நடிக்கும் பதத்தர்த்த நாரீசருக்கு நலமுடனே
வடிக்குங் கனகாங்கி பீதாம்பரம் பண்ணி வைத்தனனல்
தடிக்கும் புகழ்சிக்க தேவப்ப ராசன் றருமமென்றே
படிக்கின்ப மன்னவன் தேசப்ப பூபன் பலன்பெறவே. (196)

வீரசெட்டி.

விருத்தம்.

பருவதமனைய தேவரா சுடையார் பால்மதி மந்திரித்தலைமை, படைத்ததே சப்பராசயன் றனது பாரிசமாகவேதுருகம், நிருவகியாகிலிங்கராசய்யன் நெறிமனுமுறை நடத்திடுநாள் நீதிசேர்கோதை யர்த்தநாரீசர் நித்தியகல்யாண சந்நிதிக்கே, சருவமானியமாய் முழுப்படித்தரமுஞ் சகலமும்பட வெற்றிநடத்தித், தானிகர்பெரியோர் பரிசனத்தவர்க்குந்தந்தை தாயளவுற வணைத்து, உருவசிமதனன் கச்சியம்பதிவாழ் உத்தமராசனீன்றெடுத்த, ஓங்கியபுகழ்சேர் தேங்கிய கருணையுடையவன் வீரபூபதியே. (197)

வேறு.

தாரணிபுரக்கவரு தேவப்பராசுடைய தனது புண்ணியமாகவே தருமதுரை தேசயன் றருலிங்கராசயன் றுனுமப்பணைசெய்யவே சீரணியு மரவகிரியுமைபாகர் சந்நிதித்தெற்கு வாசலின்மண்டபந், தேசலிங்கந் திருக்காமீசலிங்கப்ர திட்டை கோபுரமஞ்சனம், ஏரணியுமிடபமா யூராசி தாங்கியு மினைய நயினராங்கியு, மெழிலானபூதமுஷிகவாகனஞ்சிவிகை யேந்து முத்துப்பந்தலுங், காரணிகவைகாசி வீதியிணை பெரியகற் கட்டிரண்டேரிவளமுங், கச்சிராசன் வீரசெட்டி போசன்செய்த கனதிருப்பணிகளிதுவே. (198)

வெற்றிதருகலியுக சகாத்தமாயிரமீது விளங்குமறு நூற்றெரன் றீனில், வீருன தொருகாளயுத்தி மகரத்திங்கள் மேவுமிருபத்தாறி னில், உற்றதிதிசத்தமிசுவாதிநட்சத்திர முகந்த சுக்கிரவாரமும், யோகமது விருத்தியும் பவகரணமும் பெற்ற வுயர்மீனலக்கினமத னில், கொற்றமிகுதேவரா சேந்திர நராதிபதி குலவுதேசயமன்ன வன், கொங்கிலுயர்சங்ககிரி துருகம்புரக்கு நாட்கோதைவருகயிலா யர்தன், நற்றரளமணியணி திருக்கோபுரக்கதவு நன்ருகநிற்றவேற்றி யே நட்டனன் புகழ்வீர செட்டி யம்புவிமீது நாடோறுமிகவாழ்க வே. (199)

கட்டளைக்கலித்துறை.

தலையான தேசய ஞட்காளயுத்தியிற் றைத்திங்களின்
மலையானகோதை கயிலாயர்கோபுர வாயிலுக்கு
நிலையான கம்பைக்கதவை யுண்டாக்கி நிறுத்திவைத்தான்
கலையானகச்சி வருவீர செட்டி கனம்பெறவே. (200)

விருத்தம்.

சிக்கதேவரசுமேவத் தேசயன்ருருகஞ்சீமை
யொக்கவேபுரக்குங்காள யுத்தியிற் கோதையார்க்கு
பக்கமாயங்கி பீதாம்பர நிறைவேற்றியீந்தான்
தக்கமால் வீரசெட்டி தழைத்தினி தாயினுனே. (201)

சீரணியுஞ்செங்கோட்டில் வைகாசித் தெருவீதி தென்மேல் மூலை, ஏரணிதென் முகச்சபையை வடமுகமாய் வைத்ததென்மேற் பெவருங்காணத், தாரணியெண்டேவரசு தயவுள தேசயன்மணி யந்தானேசெய்யுங், காரணிக வவதாரன் வீரசெட்டிமண்டபந்தான் கட்டினுனே. (202)

சீலமுடன் சத்திரமும் வீரேசன்று வசதண்டுந் திருவிழாவும், மாலுமடங்கடறபடியுந் தேமானந்திருத்தேரும் வடிப்பமாகத், தால மடங்கப்புரக்குந் தேவரசன் மந்திரிதே சயநட்பான, ஞாலமடங் கப்புகழும் வீரசெட்டி ரௌத்திரியினடத்தினுனே. (203)

தென்னுலவு குடையால வட்டமொடு பலவிசிரி சேருடி கொடியாடையுஞ்,சேணுக்குடக்கயம் மகரதோரணமாதி தேரலங்காரங்களும், மின்னுலவு பந்தவகை வாணவகை பட்டுவகை வெள்ளைசந்திரகாவியும், வெண்சாமரங்கள் பல சாலிசல்லரிகள்பல விருதுபாவாடைவகையும், பொன்னுலவு நவமணிவிளங்கிய வடங்களும் பூமருவு வகை மாலையும், பொலிவுதரு நாககிரி யுமைபாகர் வேலவர் புராண வேள்வியுமிதுவெலாம், நன்னிலமதிக்கவரு தேவப்பராசயநராதிபதி தருமமெனவே, நளினமுகதேசயன் மகிழ்வீரசெட்டி திரு நாள் நடத்தினமகிமையே. (204)

அரவகிரி யீசர்வடி வேலவருமகிழவே யங்கரங்கமுமாகவே அபிடேக நைவேத்தியங்கள் பணியார வகை யாயிரமணித்தீபமும், பரிவுபெறு பதினாறு வகையினுப சாரமும் பலமாச பூசைவகையும் பத்திபெறு கார்த்திகையி லிருலட்ச தீபமும் பன்மறைமுழங்கு சபமும், விரிவு பெறு ருத்ராபிடேக மடதருமமும் மேவுசத்திரசாலையும், மேள தாளம் பரதகீதமு நிருத்தமும் மேன்பட நடத்திவருமால், திருவளரு மார்பகன் றேவப்பராசயன் சித்தமது மகிழ்தேசயன் செங்கோல் நடத்திவரு கச்சிராசன்வீர செட்டி செய்திடு சரிதையே. (205)

குணமுள கெம்பராசன் கோதைவாழ் குருக்கண் மாரை
பணமென நெருங்க வோடிப் பருத்தி நாடணுகு வோரை
மணமுடனழைத்து நம்ப வலக்கரங் கொடுத்து வீரன்
[illegible]மலைப் பரனைப் பூசை பண்ணுவீரென்று வைத்தான் 206

தேசய துரை தாபித்த தேசியீசுரருக்கென்று
பூசனை புரியக்கோதைப் பூசுரர் மனதுமேவ
ஆசையுள்ளளவுந்தந்தே யமுதமு மளித்தெந்நாளும்
நேசமாய் வீரசெட்டி நிலைபெற நடத்தினனே. (207)

வெண்பா

வாங்குடனே சூரி மடலுங் குடை விசிறி
பாங்குடனே வெள்ளியிலே பாலித்தான்—தேங்குபுகழ்

சிக்கதே வப்பரசன் சீமான் றருமமென்றே
பக்கமாய்த் தேசயபூ பன் (208)

விருத்தம்

சாதி நாயக வெழுகரை நாடனைச் சதாசிவ குரவோனே
வேத நாயகக் குருகுலோத்துங்கனே விரிவொடுபொருளீந்து
கோதை நாயகர் பூசனைபுரிந்திடக் குருவெனவபிடேகம்
நீதி நாயகன் வீரபூபதியிவை நிறைவுற முடித்தானே. (209)

கட்டளைக்கலித்துறை.

நிலமுள்ளமட்டும் புரக்கின்றதேவப்ப நீதிமன்னன்
குலமுள்ள மட்டுந்தழைத்தேறுந் தேசயன் கோத்திரமும்
பலமுள்ள மட்டும் பெருங்கோதை மேல்வைத்தபட்சத்தினல்
தலமுள்ள மட்டும் நினைப்போம் புகழுந் தருமமுமே. (210)

சம்போஜி—அருதிராஜ.

செஞ்சொல் பெறுகலியுக சகாத்தமாயிரமீது சேருமறுநூற்றைந்தினிற், சீரானதுந்துபிச் சித்திரைத்திங்களிற் சிறந்தசம்போஜி மகிபன், தஞ்சமெனவே அருதிமன்னவனை வரவிடத் தனதுபுண்ணியமாகவே, சர்ப்பகிரி யரனுக்குமுன்னூறு கிராமங்கள் சருவமானியமாகவே, கஞ்சனெனமாலெனப்பூசனை புரிந்தனன் கனசங்ககிரிதுருகமும், கட்டிராதாபுரங்கட்டி மதுரைக்கரசர் கனமட்டமுங்கட்டினன், விஞ்சுபுகழரவகிரி யீசரிடதிருவிழா விடலபலோராயனும், மேன்மையொடு சொன்னபடி கெங்கோஜிபூபதி விரிவுற நடத்தினனே. (211)

அம்புவிபுரக்கவரு சம்போஜி தருமமென வருதிபூபதி மகிழவே, அந்தணன்விட்டல பலோராயர் கெங்கோஜி யன்புடனடத்துமெனவே, உம்பர்தொழு மர்த்தநாரீசரிட சந்நதியை யுண்டாக வகைசெய்தனன், உயர்படிநடத்தினன் சர்வமானியமாக வூரனைத் துந்தந்தனன், தம்பமெனவே குரவர் தானீகர் பரிசனர்கள் சதுர்மறைவலோர் யாவருஞ், சந்தோடமாகவே தாய்தந்தைபோல்

வந்து சகல வரிசைகளுதவினன், நம்பின சனங்கடனை நன்றாய் டத்திநனன் நாலுமறையோது நிபுணன், நாகரீகன்புகழ் வீமோசி கோவிந்தர் நானிலந்தனில் வாழ்கவே. (212)

வீமோஜி பண்டிதர்.

பொங்கரவ கிரியர்த்தநாரீசர் சந்நதிப் பூசனை திருப்பணிகளும், புகலரிய ருத்திராபிடேக கட்டளைகளும் பொன்னிநதியுதகங்களும், தெங்குலவு பலசோலை வாவிகூவங்களுந் தெருவீதி முகபத்திரமுஞ், சிகரகோபுரம் மகாமடமன்ன சத்திரமுந் திருவிழாவைபோகமும், மங்களகரங்களொடு தினமாசவுற்சவமு மகரதோரண வாசலும் மன்னுதினபூசை பதினாறினுபசாரமு மருவுபலபல தருமமும், கொங்குலவு சம்போஜி தருமமெனவே வரிதிகோமானுரைத் தபடியே, குணமருவு கெங்கோஜி மனமருவு வீமோஜி கொற்றவனடத்தினனே. (213)

தாரணிபுரக்கவரு சம்போஜி மன்னவன் றனது புண்ணியமாகவே, சர்ப்பகிரி யீசருக்கருதி மாபூபதி சந்த்ர காவிச்சரிகையும், ஏர்பெறுபுயாசலன் விட்டலபலேராய னியல் சந்திரகாவிசரிகை, எண்டிசைமதித்த சந்தோஜியொரு துகிலாடை யின்பமுடனேதந்தனன், காரணிக வவதார கோவிந்தவீமோசி கட்டுவர்ணத்துகிலுடன் கம்பியிருசேலையும் கனகப்பதக்கமுங் கனதுராயுந்தந்தனன், வாரணிபுமுமைபாகர் சோமசுக்கிரவார மருவு படிவில்வார்ச்சனை, மகிழ்வுற நடத்தினன் பிறையாயிரந்தொழுது மைந்தரொடு மிக வாழ்கவே. (214)

நந்தியாதீபந்தூப நடததிவாத்தியங்கள் லேத
சந்தியில் மூன்றுநூறு தீபமுந்தயவாயேற்றி
புந்தியே மகிழ்வீமோசி பூசையீ ரெட்டுங்கோதை
யெந்தையார் தமக்கன்பாக வியல்பொடு நடத்தினனே. (215)

கட்டளைக்கலித்துறை.

தருநாடனுகிய சம்போஜிராஜன் றருமமென்றே
குரு நாடனுமெங்கள் வீமோசி பண்டிதன் கோனதாயிலே

ஒருநாளு மில்லை யெனவா வணியிலுயர்பெரிய
திருநா ணடத்திவைத் தான்மூன் றுலகமுஞ் சித்திக்கவே. (216)

பரிமள வல்லி பாத பாடகஞ் சிலம்புபட்டம்
புருவ நேத்திரங்கிரீடம் புகழ வுண்டாக்கியீந்து
முருகவேள் கயிலாயப்பர் முகமுறு பட்டஞ்சாத்தி
மருவுவீமோசி மன்னன் மைந்தர்களுடனே வாழ்ந்தான். (217)

கண்டோஜி.

கோதையரனுக்கிரண்டபிசேக கலசமுங்குலவுகண்டிகை யொன்றுடன், குழிவுறுபடிக்கமொரு நாலுமுத்தட்டமும் கொண்டுபரிவொடுதேந்தனன், மாதுலவுபரிவட்ட வகைதிரைச்சீலையும் வரிசை யுடனேதந்தனன், மன்னிரத முட்டியுங்கட்டி யேதினபூசைமாசபூசையுமேத்தினன், நீதியொடுகுரவோர்கள் மறையோர்கள் தானீகர் நிரைபரிசனத்தாரையும் நேசமுடனேயினிது சம்பளஞ்சாதங்கள் நிறைவேற வருள்செய்தனன், வேதியர் குலோதயன் கெங்கோஜிராயனன் மேவுமணியஞ்செய்யுநாள், வீறுபுனேசாமரசு கண்டோஜி மன்னவன் மேதினியின் மிகவாழ்கவே. (218)

வாசவனெப்பனையானேன் கெங்கோஜிபாற்கரயன் மனதுமேவப், பூசுரர்தன்குலதிலகன் சாமரசுகண்டோஜி புகழ்செங்கோட்டில் ஈசருக்குத்திருப்பணியுந் திருநாளும் படித்தரமுமேற்றமாக, நேசமுடனேநடத்தித் தருமமுடன் புகழை நிலை நிறுத்தினனே. (219)

கட்டளைக்கலிப்பா.

சீர்பொருந்திய செங்கோடையீசனர் சித்தமேவு திருப்பணி மாலையைப், பார்பொருந்து சதாசிவபண்டிதன் பாடி யென்றும்படித் திடத்தக்கதாய், ஏர்பொருந்தியசம்பளமாறுபொன் னிரண்டுசாதமபூபமுங்கூடவே, தார் பொருந்தியவீமோசி பண்டிதன் றுனளித்தன னீடூழிவாழ்கவே. (220)

வெண்பா.

கட்டசெவிக்கி ரீசருக்குக் காலசந்திக் கட்டளையும்
பட்சமுடன் பாலூற்றும் பண்ணவே—தச்சகனும்
பங்கயஞ்சேர்வீமோசி பண்டிதரா யன்பரிவாய்
தன்கையிலே தந்தான் றனம். (221)

பெரியயன்.

ஆசிரியவிருத்தம்.

சீர்மேவுகலியுக சகாத்தமாயிரமீது சேருமறுநூற்ருறினிற், செல்லுருத்ரோற்காரி கார்த்திகைத்திங்களிற் தேதியொருபதினெட்டிலே, ஏர்மேவு மாதிவாரந்தசமி கூடிவரு மெழிலுத்திரட்டாதிநாள், ஏரகங்கயிலாயர் பலிபீடமுங் குறடுமின்பமொடு தாபித்தனன், தார்மேவுகெங்கோஜி பாற்கரன் மனமேவுதயவுவீமோஜி மகிபன், தாரணிபுரக்கவரு நாளனை வரும்மகிழ சைவகுருகுலசேகரன், பார்மேவு புகழார்த்தநாரீச பண்டிதன் பரிவுபெறுதெய்வநாயகம், பாலனெனுநாயகந்தந்த பெரியய்யபூபதிதரும மீடேறவே. (222)

கட்டளைக்கலிப்பா.

சைவசேகரன் செங்கோடையாதிபன் ருணுவாமர்த்தநாரீச பண்டிதன், தெய்வநாயக மன்பான நாயகஞ்செல்வனுன பெரியய பூபதி, மெய்வியாபர் கயிலாயசந்நதி மேவுபத்திர பீடங்குரடுதான் கைவியாபதனங்கொண்டு கட்டினன் காசிபன்குல நீடூழிவாழ்கவே.

மரிராஜன்.

திரமருவு கலியுகசகாத்தமாயிரமீது சேருமைஞ்ஞூற்றினுடனே, செல்வருடமுப்பதின்மேல் சர்வதாரியிற் சிங்கமாதந்தன்னிலே, ஏர்மருவுமுப்பத்தொராந்தேதி பூசமுமின்பமங்கள வாரமும் எழில்பெறுதுவாதசி கவுல்வஞ்சிவயோக மேற்றநாள் செங்கோட்டிலே, ஆர்மருவுசெஞ்சடைக் கைலாசநாகீச ராதித்த ராதியாக, ஆதிகேசவர் வரையி லஷ்டபந்தனமிக்க வன்புடன் செய்வித்தனன், பார்மருவு கீர்த்திபுனை கண்டீர்வநரசய்ய பார்த்திபன் றரும

மெனவே, பஞ்சவர்சகாயனுகிய கவுடராஜனருள் பாலகன்மரியேந்திரனே. (224)

செப்புஞ்சகாத்தத்தி லாயிரத்தைஞ்ஞூறு சேருமுப்பத்தொன்றினிற், றிகழும்விரோதியிற் சித்திரைத்திங்களிற் றேதியொருபதினெட்டிலே, வைப்புற்றவெள்ளியுந் த்ரிதிகையுடனனுசமும் வரிசைபெறுமேனாளிலே, மன்னவன்கண்டீர்வ நரசராசேந்திர மகீபாலனருள்செய்யவே, யப்பணையிலிருநூறு முந்நூறுபொன்னுடனைஞ்ஞூறுபொன்கூட்டியே, ஆயிரம்பொன்னுக்கு மர்த்தநாரீசருக்கதிக பூசனைசெய்தனன்,இப்புவியுளோர்பரவு சங்ககிரிதன்னிலே யியலரசு புரியுநாளில் இன்பமிகு சௌடையன் கற்பபரி பாலகனிந்திர தருமரிராஜனே. (225)

திருமருவுகலியுக சகாத்தமாயிரமீது சேருமைஞ்ஞூற்றினுடனே, செல்வருடமுப்பதுட னெண்பதோர்விளம்பியிற் சேட்டமாசந்தன்னிலே,குருமருவுதேதி பதினைந்தில் வெள்ளிக்கிழமைகுலவிய துவாதசியநாள், கோதையம்பதியில்வாழ் கைலாயநாதரிட கோபுரந்தனைமுடித்தான்,தருமருவுநிதியங்கள் சதுருபாயத்திலுந் தானகவேயீந்தனன், தாம்பிரக்கலசத்தின்மேற் பொன்பூசியதன்மீது தாபனஞ்செய்வித்தனன், மருமருவு மகிசூரில் வாழ்கிருஷ்ணராசேந்த்ர மகிபாலகன்றருமமாய், மன்னுபுகழ் சௌடையன் கற்பபரிபாலகன் மரிராசமகிபாலனே. (226)

கட்டளைக்கலித்துறை.

மாகனம்பெற்ற மரிராசபூபன் மனதுமெச்ச
நாகரிகம் பெறு மாவருணாத்திரி நல்குமைந்தன்
சோகஙகப்புய னப்பயபூபன் குணமுடனே
மோகனமாலை தரித்தான்செங் கோட்டு முதல்வருக்கே. 227

யோகாதிபர்தொழு நாகீசனுர்தம் முளமகிழ
நாகாபரணந் தனைத்தரித்தான் றெண்டைநாடன் மிக்கத்
தியாகாதிபனெங்கள் நல்லூருத் தண்டி தெரிந்தளித்த
வாகானகீர்த்தி கனகசபையெனு மன்னவனே. (228)

ஆசிரியவிருத்தம்.

செப்புஞ் சகாத்தத்தி லாயிரத்தறுநூறு சேருநாற்பத்தெட்டின்மேற், செல்லாண்டு பிலவங்க விடபமதிநடைபெறுந்தேதி யிருபத்துமூன்றின், மெய்ப்புற்ற சோமவாரஞ்சதுர்ந்தசியொடு விசாக நக்ஷத்ர தினமும்,மேவுசிவயோகமுங் கோசவாகரணமும் மென்சிங்க லக்னமதனில், அப்பர்தென் கைலாயவரையென்னும் நாககிரியர்த்தநாரீசுரர்க்கே, ஆனதொரு பெரியரதமுண்டாக்கி யுற்சவம் மன்புடன் ருன்செய்தனன், ஒப்பமிகுமைசூரில் வாழ்கிருஷ்ணராஜேந்த்ரவுடையர் புண்ணியமாகவே, உல்லள்ளி வாழ்சென்ன ராசசிக்கேந்திரன் உலகுதனின் மேன்மைபெறவே. (229)

பெரியயன்.

கட்டளைக்கலிப்பா.

செஞ்சொல் சேரர்த்த நாரீசபண்டிதன் தெய்வநாயகமன்பாணநாயகந், தஞ்சமான பெரியயபூபதி சர்ப்பயவெற்பின் றிருப்பணிமாலைய, விஞ்சைமன்னர் சபைக்கரங்சேற்றியே மேவுமுப்பழஞ் சம்பளஞ்சாதமும், அஞ்சலாக வரிசையுந்தந்தன னுயிரம்பிறை கண்டேயிருக்கவே. (230)

குருக்கள் சீனிவாசயன்.

விருத்தம்.

சைவசிகாமணி மறையோனலம்பாயர் தமைழக்நவந்தோன் கவிவிதுரன் ருனசோமன், றெய்வசிகாமணிக்கு ரவனுதவுபாலன் சீனிவாசயமகிபன் றிருச்செங்கோட்டில், ஐவர்சகாயனுக்கு வடகடலாம்பாலூற் றதனை விரிவாக்கிவைத்துப் படியுங்கட்டி, கைவசகாஞ்சனங் கொடுத்துப் பரற்குமாகக் கனவமுததானபலன் கைக்கொண்டானே. (231)

முதிருமாமறைக்கோதையம் பதிவாழ் முக்கணீசுரனுர்க்குச்
சதுரனுகிய சொக்கலிங்கேந்திரன் றனது புண்ணியமாக
விதுரனுகிய சீனிவாசயன் றமிழ்வித்தையன்பொடு நாடி
மதுரைநாயகன் மாந்தையிலொருபது மாநிலந்தந்தானே. (232)

வீமோசி.

ஆசிரியவிருத்தம்.

பூமேவு கலியுகசகாத்த மாயிரமீது போந்தவறு நூற்றேழினிற் பொலிவுதருரக்தாக்ஷி மிதுனமாதந்தனிற் புண்ணியமுதற்றேதியின், மாமேவு சுக்கிரவாரந்துவாதசியோடு மன்னுமசுபதிசுகர்மம், வ்ள மானகவுலவந்தனு சுபலக்கினமான மங்களமுகூர்த்தத்திலே,கோமே வுசம்போஜி விட்டலபலேராயர் குலவுகெங்கோஜி மகிழுங், கோ விந்தவீமோஜி தனதுபயமாகவே கோதைமாநகரில்வாழுந், தே மேவு கயிலாயநாதரொரு பாகமுறை தேவிபரிமளவல்லியார், சிர மீது ரசிதக்கிரீடந்தரித்தனன் செகமீது மிகவாழ்கவே. (233)

இராமச்சந்திர ராயக்கன்.

அலைமேவு சடையருமை யொருபாகர் கோதைநகரனதான மடதருமமும், அபிடேகசந்தனம் பொன்னிநதிமஞ்சன மமுதுபடி யைந்துகுறுணி, நலமேவுதயிர்கறி யமுதத்தியான மொடுநந்தவ னமுங்கூபமும், நடனதாண்டவர் நூபுரங்கவரி துகிலாடைநல்ல கார்த்திகைதீபமும், நிலமேவு சோழ சிந்தாமணியிலே யைந்து நெடியபுல்லூரைந்துமா, நிகழுநாட்டா மங்கையோடு முகவைந்து மாநீதியருவூரைந்துமா, பலமானதூசியூர் தனிலைந்துமாநிலம் பக ருபயமார்க்க வரிசை, பத்தியுடனே நடத்தினன் ராமச்சநதிரபூ பதிமனைதழைத்தேறவே. (234)

மாதுசேர்புயன் ராமசந்திரன்பணி மலைவாழ்
நாதனுர்மடம் பூசை நந்தாவன நடக்க
நீதியாயினுப் பைக்குளம் பூதனேரியையும்
ஈதல்செய்தனன் கோனயம்பதிவரு மிறையே, (235)

சின்னப்ப நாய்க்கன்.

ஆசிரியவிருத்தம்.

திருமருவு மரவகிரி யீசருக்கமுதுபடி தினமுமொருபது கறி களுஞ், சிறுபயறு திருமாலை காவேரிமஞ்சனந் திகழடைக்காயுமி லையுந். தருமருவு தோணிமட மனதான மண்டபந்தங்கு மன்னத்

துவசமுஞ், சைவமடநந்தவன தண்கூபமண்டபந் தன்னிலாவணி மூலமும், மருமருவு மாசிவையாசியில் விழாவினிய மண்டபப்படி பூசையும், மன்னுசங்கிரமபாரிவேட்டைதீபாவளியில் வடிவானபரி வட்டமுங் குருமருவு வந்தியாபாடாணதீபமுங் கோவிலுட்பல தீபமுங், கோகனகவாவிசெறி தினசை வருகிருஷ்ணயன் குலவு சின்னயனுபயமே. (236)

பெத்தய்யன்.

செப்புஞ் சகாத்தமாயிரமீது நானூறு செல்லுமிருபத்தைந்தி னிற் றிரமான பரிதாபி வருடமகரத்திங்கள் தேதிமுதலான சனி யும், வைப்புற்ற பஞ்சமியு மீனலக்கினமான வரிசைதருமேனளி னில், மணியமோவப்பணிடு வந்தியை யகற்றியதி மன்னனுத்தார முடனே, அப்பருப ரர்த்தநாரீசரிட பூசையாலம் பாயர்காசிபரை யும், அழகானதளிகை திருமேனிகாவலரினிய ரானசெங்குந்தரு டனே, சர்ப்பகிரி கோதைநகர் தாபித்தனன் செவிடுபெற்றயன் றினசையதிபன், சந்திராதித்தர்வரை திக்குவிஜயஞ்செய்து தாரணி யின்மிகவாழ்கவே. (237)

கோண்டமராசன்.

ஒண்டொடி செந்திருத்தினசை கிருஷ்ணயன்சின் னயனுடை யவுபயமாக, மண்டலமெண்புகழேறு குரோதிதுலாமாதநல்ல வரி சையாகத், தண்டமிழ்சேர் கோதையுமைபாகருக்குத் திருநாளிற் சார்துசாத்தக், கொண்டம ராசயனினிய வெள்ளியினற் கிண்ணி பண்ணிக்கொடுப்பித்தானே. (238)

வெண்பா.

நாககிரிக் கேழுகரை நாட்டுபய மார்க்கவரி
ஈகவகைக் கொப்பமெழுதினன்—பேகனெனுந்
துன்னுபுகழ்ப் பள்ளியப்பன் சொற்படிக்குத் தென்றினசைப்
பன்னுதமிழ்ப் பெற்றய பூபன். (239)

குமார்சாமி முதலியார்.

ஆசிரியவிருத்தம்.

நன்மைபெறு கலியுகசகாத்தமாயிரமிசை நடக்குமைஞ்ஞூற் றினுடனே, நலமானதொண்ணூற்றொடொன்று கீலகமகர நாளிருப துடனாறினிற், றென்மருவுதிரவாரமுஞ் சதயமும் பெற்றதிரிதிகை பரியாயோகமுஞ், சீரானவாலமும் விடபலக்கினமாஞ் சிறந்தவொரு மேனுளினில், மன்முறைமை புரிவளவன் மாவையாட்கொண்டவன் மகிழ்குமாரச் சுவாமி, வளரரவ கிரிமேலைவாய்தல்வட பாரிசம் வருவிசுவநாதர் தமையும், இம்மையில்வரந்தருவி சாலாட்சியும் பலியுமினிய கணபதிநந்தியு மியைபினொடு பிரதிட்டை செய்தனன் பிறையா யிரந்தொழுதுமிகவாழ்கவே. (240)

கட்டளைக்கலித்துறை.

கீலகந் தையிரு பத்தாறின் மந்தன் கிழமையன்று
மேலக வாய்தல் வடவரு கேவிசு வேசுரரை
மாலகஞ் செய்தருச் சித்தா னரவ மலைமிசைபூ
பாலகன் மாவைக் குமாரச் சுவாமி பலன்பெறவே. (241)

ஆசிரியவிருத்தம்.

பணிமலையில் வேலருமை பாகர்விசுவேசுரர் படித்தரநடந்து வரவே, பரிவினொடு வெண்கலக்கிணறு நாற்பாங்கெல்லை படியாதி பொத்தனூரும், மணிகுலவு குண்டுக்கல் மகமையெழுகரை நாட்டு மகமை மேல்கரைமகமையும் வாங்கல்நில மாறுமா வும்பட்டயந்த னை வரைந்துகல்வெட்டுமெழுதி, அணிதவசு நித்தீச *னுக்குதவி வதுவைபுட னுசாரியபிடேகமும், அரவகிரி தனிலோதுவார் சம்ப ளக்கொல்லை யனதானமடதருமமுங், கணிதிரமதான பரதேசிமுத் திரையினதிகாரமொடு தாபித்தனன், காரணிகமாவைக் குமாரசா மித்துரைக் காராளகுலதீபமே. (242)

அரவகிரி யீசருக்கமுதுபடி யனுதினமுமையைந்து மேழுதளி கை யானகறிபயறுபடி யாவினெய்பழம் வெல்ல மருமடைக்காயுமி

* ஒரு கட்டளைப்பண்டாரம்.

லையும், பரிவினோடெண்ணெய் படிபழமுப்ப தினியதயிர் பாலுமெ லுமிச்சம்பழம், பசுவினெயரைப்படியு மதுவரைப்படி மஞ்சள் பல மொன்று சர்க்கரைபலம், விரிவுபெறு காவேரி யுதகமொருகாவடியு மேவுசந்தனமொருபலம், வீறுகற்பூரசாம் பிராணிகள் வராகனிடை மிகுமஞ்சனத்திரவியம், மருவமருமாலைநற் கந்தமுட னேபுழுகு மாறுமலிவைதந்தனன், மாவையாட்கொண்டான் குமாரச்சு வாமி நதி வங்கிசமகாவேருவே. (243)

ஆடரவகிரி வேலர்சந்நதி முன்னொருமஞ்ஞை யைந்தடுக்குத்தீப முன், னுனதீபங்கள்பல கிண்ணிபலதளிகை பல வபிடேக கலசம ணியுந்,தேடரியவாலவட்டங் கவிகை கண்ணுடி செப்புக்குடங் கண் டிகை திருவாலிநீ ராசிதட்டுபல தூபமொடு தீபதண்டுகள் கவரிகள், நீடுதவ நித்தீசனுக்கு மிப்படியிந்து நியதிகன்மட மண்டபம், நேய மடவடிமை பசு நந்தவனமுந்தந்து நிருவாகபடிசம்பளம், நாடரிய தானிகர் தன்வர்த்தனைக் கொல்லை நன்ருக வருள்செய்தனன் நன் மைபெறுமாவைக் குமாரசுவாமித்துரை நதிகுல சிகாரத்நமே.(244)

சிரணியுமேட மாதத்தில் வருபரணியுஞ் சித்திரையில் வரு மதியமுந், திருவிழாமண்டப சிறப்பாணிமூலமுந் திருவாடியின் பூரமும், வேரணியுமாவணி நன்மூலமுங்கேதார விரதமுமகா நவ மியும், விசுவினபிஷேகமு மகா கந்தசஷ்டியின் விரதமுந் தீபாவளி, ஏரணிக்கிருத்திகையு மார்கழியு மாதிரையு மினியசங்கிரமபூசையு, மிரவு சிவபூசை மகமண்டபமு மீனமும் மிலகுமுத்திரபூசையுந், தாரணிபுரக்கவரு மாவையாட்கொண்டவன் றருகுமாரச்சுவாமி, சர்ப்பகிரி யீசருக்கிப்படி நடத்தினன் சந்ததமுமிகவாழ்கவே. 245

மீனமுதல் மிதுனமளவாகவும் மரவகிரி வேலரையுமுமைபாக ரை, மேனிகுளிரும்படி சுகந்த கற்பூர மொடு ம்ருகமத குழம்பு சாத்தி, ஆனபரிவட்ட மல்லிகை சாதிமல்லிகை யணிந்தலங்காரித் தன, னமுதடைக்காயிலை வடைப்பருப்பாதிக ளமைத்துற நிவேதித் தனன், பானுவொளியான பிரதோஷ கட்டளையோடு பலகார்த்தி கைப்படிகளும், பரிவட்டவகைநானு நந்தியாதீபமும் பலதீபமிக

வேற்றினன், மானபரன் மாவையாட்கொண்ட பூபதியருள வருகு மாரச்சுவாமி மாதரும மாகநித்தீசுரனுமிப்படி வளம்பெற நடத்தினனே. (246)

மண்டலந்தொழுதேவ ராசய நரேந்திரன் மந்திரிகுமாரதளவாய், மன்னனுலகாளு நாளின் முத்துவசவய்யன் வரவென்று நித்தீசனே, கொண்டலெனவுதவுமா வைப்பதிவிளங்கிய குமாரச்சுவாமி மகிபன், கோதையுமை பாகருக்குத் தருகிராமமுங் குலவு மகமையுமருளியே, அண்டையிலழைத்துமுன் னெப்படி நடந்துவரு மப்படி நடத்தென்னவே யப்பணைதரத்திவ்ய லிங்கயன் சொற்படியி னந்தமுனிவன் பரிவுடன், பண்டையில் வளம்பெறு படித்தரநடத்தினன் பணிமலையரன் கருணையாற், பாராளவந்த மகிழூராளும் மன்னவர்கள் பலகாலு மிகவாழ்கவே. (247)

தாரமங்கலம்,

கட்டி முதலியார்.

ஆசிரியவிருத்தம்.

அனவரத மரவகிரி யீசருக்கமுதுபடி யறுபதொருகுறுணி பயறு, மதனிலொரு படிதோசையப்பமொருபடிபுண்ணி யாகமொருபடிபொங்கலும், மனவரத மானவடி சிற்றளிகை யொருபதுமணத்தகறி நெய்கனிகுளம், மாலைசம்பாவமுது காலைதத்தியோதனம் மருவுகற்பூரவிடயம், தினவிரதமான வபிடேக மெள்ளெண்ணெய்படி தேனுமொரு நெய்பிடி, தேங்காயிரண்டு பழநூறிருபடிளநீரைந்து திருமஞ்சனத்திரவியங், கனவிரதமான முத்துகுகன்னலின்பிழிவு காவேரி கந்தவுதகங், கற்பூரவபிடேகமும் புனுகுகாப்புமிவை கட்டி பூபதியுபயமே. (248)

சந்ததமுமரவகிரி மீதிலந்தணரன்ன சத்திரம் வாரிகுரவோர் சங்கமார்ச்சனை யதிதிகட்கிருபதமுது நற்சந்நியாசிகள்பிட்சையும்

சிந்தைபுறை முருகீசர் மேவியசிவாலயந் தேவிகணபதி நந்திபுஞ், சிவபூசைமடமாலயம் வாயுமூலையின் றிகழ் விநாயகர் கோவிலும், புந்திதருமாதிகேசவர் மேவுகோவிலும் புகலுபய நாச்சிமாரும், பொலிவுதரு சத்தமாதர்களுறை கோவிலும் புபலுலவு மேல்கோபுரங், கந்தருமை யொருபாகர் தன்றிருவி ழாவினிற் கனசகத்திரபோஜனங், கவினுதவு சந்திரசேகரர் கௌரிதிருமேனி கட்டிபூபதிபுபயமே. (249)

வேறு.

அரவகிரியீசரர்க்கு ருத்தி ராட்சபுயகங்கண வலயம். அணிகோட்டரளமாலிகையுமரசந்தழைப்பொன்மணிப்பதக்கம்.மருவின்முலையாளுமை வயிரமணிபொட்டொடு மஞ்சக்காறை, மணமங்கிலிய முலைத்தளமு மகிழ் கொப்பொடு கொந்தளவோலை,விரிவுபெறுதோளுகபடம் விளங்குபுய தாயத்துமணி, மேவுந்தகட்டுப்பச்சைவட மேலாங்கனகவுருமாலுங், கரிவண்மையுட னெடுக்கவலங்காரத்திருமஞ்சனக் குடங்கள், கவளம்பாகன் முதலியன கட்டிராயன் புண்ணியமே. (250)

செஞ்சொற்பணிவெற் பார்பூசத்திருநாட் சிறப்புமண்டபமுந் திருக்காவேரித்துறைமுழுக்குந் திருகார்த்திகைநட் சத்திரமும், மிஞ்சுபுழ்சேர் மாசிமுதல் விழாவுமெட்டாந் திருநாளும் விசாகத் திருநாள் முதற்றிரு நாள் விளங்குமேழாந் திருநாளும், நஞ்சைப்புசித்த சிவநிசியு நற்கேதாரஞ் சவுத்திமகா, நவமி நரகசதுர்த்தசியு நற்கார்த்திகையுஞ் சசிவாரங், கஞ்சறபகிரி மிசைகிருத்தி காதீபாரோகணப்பொரிமார் கழியாதிரைச்சங் க்ரமச்சிறப்புங் கட்டிராயன்புண்ணியமே. (251)

விளங்குபுகழ் சேரரவகிரி வேலன் சிகரவிளங்கோவில், வேலன்றிருமுன் மாயூரம் வில்வார்ச்சனை யாயிரநாமம், உளங்கொளமுதமெனு முககமுறு *முதம் பாக்கிணறும், ஓங்குபசு நூறொருமையுநூ றுபயமார்க்கத் திருப்பணியுந், தளங்கொளரியாசனக் குறடு

---

*அத்திக்குட்டைக் கிணறு.

தந்தச்சிவிகை மணித்தூபி தங்கக்கலசஞ் சந்தனத்தின் றருவாற் சமைத்த சப்பரமுங், கலங்கமகலும் பணியசல காவலருக்குப்படித் தரமுங் காருணியஞ்சேர் தாரமங்கைக் கட்டிராயன் புண்ணிய மே. (252)

சீலம்பெரிய பணிமலைவாழ் சிவன்பூசனைசெய் தேசிகர்க்குச், செவிக்கைகங்களஞ்சி லாறுகட்டி திகழ்முக்களஞ்சிற் பவுத்திரமுங், கோலம்பெரிய துகிலாடை குலவுமனைவர்த்தனை நடத்திக், குமாரர் களுக்கு வித்தை கற்றுக்கொடுத்துப் பரிசோதனைபார்த்து, ஞாலம் பெரியகனகசபை நல்ல விருத்தா சலத்திலுறை, நற்றேசிகர்க்கு நிகராக்கி நன்றாய்ப்பெருமை நடத்துவதுங், காலம்பெற வந்தணர் கருமங் கடவாவகையின் முடிப்பதுவுங் காதல்பெருகு தாரமங்கைக் கட்டிராயன் புண்ணியமே, (253)

பன்னுந் தமிழ்சேர்கோதையுமை பாகன் றனக்கே வுபசாரம் பதினாறியற்றித் திருப்பணியா பரணந்துகிலானதுங் கொடுத்து, மன்னுந்தலத்தை யாதிசைவமறையோர் தம்மைத்தனதுதா வாச மெனவே வுபசாரமருவி மனவாஞ்சிதமளித்து, பொன்னும் புவி யும் ரதகசமும் புரவிசிவிகைகாலாளும், புதல்வர்பெருமை யழகா ண்மை புகழுந்தவமுஞ் சௌரியமுங்,கன்னன்றனைப்போற்கொடை கருணை கவிதைவிசய மறுநீதி, காருண்ணியமும் நவநிதியும் கட்டி ராயன் பெற்றனனே. (254)

வேறு.

பன்னுமறைதெரிகோதை யுமைபாகர் சிகரமுமை பாகமு டையார் பெட்டகம், பைங்கனககோளகச்சிறுபீடமும்பரபை படிக் கமபிடேகபீடந், தென்னுலவு வடவாசன் முன்மண்டபஞ் சத்திர தீர்த்தக்கலிங்குமதிலுந் தென்றிருமடப்பள்ளி வடகோபுரஞ்சகஸ்த் திரலிங்கமுங் கோயிலும், மின்னுவேல் மணியொட்டியாணங் கிரீ டம் விளங்கு ருத்திராட்சவடமும், வீறுர்சவுக்களி பதக்கமொடு திருவாசி வெள்ளியபிடேக கலசங், கன்னல்செறி நந்தவன கூப மண்டபபூசை கயிலாய வாகனமதின் காட்சி சிங்காரமிகு தோப்பு மிவைசியால கட்டி பூபதியுபயமே. (255)

தலமருவுகோதையுமை பாகர்பூசைக்கினிய தாம்பிரகிடார சருவங், தாபிக்கநவபாத்திரங்கள் கொப்பரைகிண்ணி சங்குசேணைக் கால்களுங், குலமருவுதளிகை மணிபரிவாண மட்ட ணிகை குட தீபமுந் தூபமுங், குடையாலவட்டமுங் கண்ணுடி தட்டமுங் குளிர்சத்ர சாமரைகளும், நலமருவு பட்டுவகை பீதாம்பரஞ் சலவை நல்ல சந்திரகாவியும்,நானுவிதங்களழகான பரிவட்டமும் நயந்தமேற்கட்டு திரையுங், கலைமருவு தேரலங்கார மணிமகுடமுங் கவினுதவு பெரியரதமுங் கனமான தாரமங்கையின் மேவு சீயால கட்டிபூபதியுபயமே. (256)

தினமரவகிரியாரை யபிடேகமகபூசை செய்நாலு வேதமுழவங் திகழ்மந்த்ர புட்பவில்வார்ச்சனை ப்ரதட்சண செப நமஸ்கார நியமம், மனமருவுபூசை மறையோர் கணக்கறை காவல் வாத்தியார் சாஸ்திரிகளும், மடமடிமை காவேரி மஞ்சனமுமாளிகையு மலர்மேவு நந்தவனமும், தனமருவு மிருடோலு நாகசுரமிருவருந் தலபுராணத்தோதலுஞ், சந்நிதியிலொருநாலு நந்தியாதீபமுஞ் சந்தியாதீபங்களுங், கனமருவு சாம்பிராணி குங்கிலியதூபமுங் கற்பூர நிறைதீபமுங் காரணிக வடகோபுரத்தி லிருதீபமுங் கட்டி பூபதியுபயமே. (257)

சீருலவு கலியுக சகாத்தமாயிரமிசை சிறக்குமைஞ்ஞூற்றெழுபதின், றிகழாறதான விசயந்தனிற் பங்குனித்திங்களொரு பத்தொன்பதின், பாருலவு பூர்வபட்சந் தசமி பூசமும் பரவுசுக்கிர வாரமும், பன்னியசுகர்மமுந் தைதுலையு மிதுனமும் பலனுதவு மேனுளினல், ஏருலவு செங்கோடை வருதிருவிளங் கோவிலெழிலான வேலர் திருமுன், னியல்பான மயில்வாகனந்தனைப் பிரதிட்டையினிதாகவே செய்தனன், தாருலவு மார்பினன் மங்கையிம் முடிகட்டி தந்த சீயாலகட்டி, சற்புத்திராதிகளுடன் முறைநடத்தியே சந்ததமு மிகவாழ்கவே. (258)

கட்டளைக்கலித்துறை.

துங்கக் குரோதி தனிலாடித் திங்களிற் சோபனமாய்ச்
செங்கைக் கழகு தரவே ரகத்தான் றேவியர்க்குத்
தங்கக்கடகஞ் சரியும் புவளமுந் தானளித்தான்
மங்கைப் பதிவரு சியால கட்டி மகிபதியே. (259)

பொங்கிய செல்வந் தருகோதை யீசரைப் பூசிக்கவே
பங்கய மார்பனைத் தெய்வ சிகாமணி பண்டிதனைச்
சொங்*கைபி னுமேல கொடுத்தபிடேகமுஞ் சூட்டிவைத்தான்
மங்கை வரோதயன் சியால கட்டி மகிபதியே. (260)

விருத்தம்

பங்கயனுன சேனு பதிகுரு மணமுஞ் செய்து
தங்கையின் மனவிருத்திக்குச் சம்பளம்படியுமீந்து
பொங்கிய புகட்செங்கோடர் பூசனை புரிவதற்கே
மங்கைமா நகர்வாழ்கட்டி மணிமுடி சூட்டினேனே. (261)

ஆறை—இளையா நாய்க்கன்.

ஆசிரியவிருத்தம்.

தேமேவுமரவகிரி நாகீசர் சந்நிதிசிறந்தகற்பக்கிரகமுந் திகழர்த்தமண்டப மஹாமண்டபத்திறெடு, தென்கோபுரந்தடிகளும் பூமேவு நந்தவன வாவிமண்டபபூசை புகழுமஞ்சாநதிருவிழாப் பூசைபடி பதினேழு பயறுகறியமுதுதாம் பூலமாலிகை கந்தமும், மாமேவு மாசிவையாசி சிவராத்திரி மகாநவமிதீபாவளி மார்கழியுடன் கார்த்திகைத்தீபபொரிசோம வாரமும் பரிவட்டமும், கோமேவு மாலைவடைகாவேரி மஞ்சனங்குலவத்தியானவொலியுங், கொற்றமிகுமாறைவல் லாளனிளையானருள் குமாரதிருமலையுபயமே. (263)

சீர்மேவு கலியுகசகாத்தமாயிரமிசை சிறக்குமைஞ்ஞூற்றறுபதின் செல்லுமைந்தான தாரணவருடமற்பிசைத் திங்களிருபத்தைந்தினிற், கூர்மேவுவேலுடைய மகிசூருநஞ்சயன் கோதையந்

---

* பொருள்.

தலமதனையே கொள்ளைகொண்டேகினது கண்டுதயவாகியே கொள்ளைபரிபோனவகையிற், பார்மேவவே தனதுபுண்ணியமெனச்சிறிது பாலித்து நன்மையுதவிப், பட்சமுடனேசம்பு ரோட்சண நடக்தினன் படிமீதுபுகழ்பெற்றனன், தார்மேவு வாகைபுனை கண்ணப்பர் சேகரன் தருமமேகனிநெஞ்சினன், றருமருவு திருமலையல் லாலாளனிளையான் மரபு தருமந்தழைத்தேறவே. (263)

வெண்பா.

* அத்தர்திருச் செங்கோட் டரனடிக்கே யன்புசெய்யும்
எத்தலமெண் ணுறை யிளையான்கேள்—இத்தலத்தே
வந்துகொள்ளை கொண்டான் மகிசூரா னீயதனைத்
தந்துகொள்ளை கொண்டாய் தவம். (264)

விருத்தம்

* அண்டர்தொழுங் காளத்தியப்பருக்குக்கண் கொடுத்தா யதிர்ந்துவீழு, மண்டபமுந் தாங்கியநற் சிவகோசன் றனக்குமுத்தி வருவித்தாயே, கொண்டனிக ரானகொடை யல்லாள திருமலையா குற்றூர்வாழ்வே, தண்டமிழ்சேரிளையானே துட்டர்கண்டா நறுவாகைத்தாமத்தோனே. (265)

* மூவருக்கு மகத்தியமா முனிவருக்கு மரசிருந்த முன்னையோர்க்குந், தேவருக்குந் திரும்பாத காவிரியைக் கொங்கேற்றித் திறைகொண்டாயே, பூவிருக்குமுரமாயன் கடலடைத்தானவன் வேடம்புனைந்தவாறே, யாவருக்கு மிளையானே யல்லாள திருமலையா யீகையோனே. (266)

வெண்பா.

ஏவிளம்பி வச்சரத்தே யேரகநா கீசருக்கு
மாவிளம்பக் கோயிலுமா மண்டபமும்—பூவிளம்பக்
கண்டா னல்லாளன் கருணையிளை யானுறைத்
தண்டாவு வாகையுரத் தான். (267)

---

* கொள்ளை போன பொருட்குப் பிரதி உதவியகாலத்துப் புகழ்ந்தமைபோலும்.

வெண்பா.

சந்தியா தீபஞ் சதுரங்கந் தாம்பூலம்
நந்தியா தீப நடத்தினன்—புந்தியால்
எப்போது மாறை யிளையான் றிருமலையான்
றப்பாமற் சீர்த்திகொள்ளத் தான். (268)

சிறுமுளைசைச், சேங்கோடன்.

ஆசிரியவிருத்தம்.

திருமருவுகலியுக சகாத்தமாயிரமீது சேருமறுநூற்றினுடனே, சென்றுவருமேழான சயவருடவையாசி தேதியொரு பதினெட்டிலே, குருமருவு திரவாரசட்டிபுனர் பூசமுங் கொண்டதொருமோனளிலே, குவலயமதித்ததிரு நாககிரி நாகீசர்கோவிலின் சிகரிசெய்தான், மருமருவு திண்புயன் காளிமகிபாலகன் மரபுள்ள காவலர்களும், வண்மைசேர் காமாட்சி மாகேசனுரைகேட்டு மன்னுநிதிதரவாங்கிய, தருமருவு சிறுமுளைசை முத்தணன் சந்ததி தழைத்தசெங்கோட மகிபன், தன்னுதெனவேதாம்பி ரக்கலசம் வைத்தனன் சகலரும் மிக வாழ்கவே. (269)

மோரூர்க் காங்கேயர்கள்.

ஆசிரியவிருத்தம்.

மங்களசகாத்தமோ ராயிரத்தைந்நூறு மரு மிருபத்தொன்றினில், வரு சர்வதாரிதனிலிடப மாதந்தனில் வாழ்வுதவுபணிமலையிளாள், எங்களுமை பாகர்பல கணிவாசன்மண்டப மிலங்கு மணியொட்டியுடனே, யினிய சித்திரகண்டமுத்திரம்போதிகையு மேற்றதளவிசையறைகளுங், கொங்கிளகு சாந்துதட்டோடு பாக்கல்லோடு குறைவற வழுத்தியேம, கூடமென மண்டபமமைத்தனன் வேளாள குலதீபமான கண்ணர், தங்களரசானதிரு மலையர்த்தநாரிநல தம்பிகாங்கயபூபதி * தருமந்தழைக்கவே சந்ததிசிறக்கவே தாரணியின் மிகவாழ்கவே. (270)

---

* தக்கை (இசைத் தமிழ்) இராமாயணம் முதலிய பிரபந்தங்கள் ஆக்குவித்தவன்.

குணமருவு பூசைமணி யபிடேக கலசநவ கும்பமொன்பது பாத்திரங், கொப்பரை யிடாரங்கள் செப்புக்குடந்தபிலே குழிவுருளே யரிவாணமும், மணமருவு தூபார்த்தியேகார்த்தி பஞ்சார்த்தி வசவார்ந்தி புருடார்த்தியும், வடிவுறு மடுக்கார்த்தி யன்னார்த்தி திரிதளார்த்தி மங்களாலத்திகுடமும், பணமருவுநாகார்த்தி திருவார்த்தி கற்பூரபரிமள மகாலத்தியும், பலமிகுவிபூதிமடல் குடையால வட்டமொடு பார்வைபெறு கண்ணாடியும், இணைகவரி மெத்தை தலையணை சிவிகை மஞ்சமு மினியமுத்துப்பந்தலு, மின்பமிகு மோரூரில் நலதம்பி காங்கேய னெனும்ப்ரவுட மானுபயமே. (271)

மூவுலகு மோசை தருசேகண்டி சின்னமு முழங்கு மெக்காளநவரி, முரசு சங்கொடுதிமிரிடக்கை மத்தளிபேரி மொழிநாக சுரபூரிகை, மேவுதவிலொடு சகலபதினெட்டுமேளமும் விருது நாடகநிர்த்தமும், வேதமொழி யாகம புராண மாறங்கங்கள் வித்தையதிவிதவேள்வியும், பூவினறு மாலைபல தேரலங்காரங்கள் புனையிரதமுடிகலசமும், பொற்கவிகை சேருடி கொடியாடை பலவிருந்து புகலரிய தருமங்களும், தாவுபணி மாமலையு மேசரருண்மேவவே தனது புண்ணியமாகவே, தானடத்தினனெங்கள் மோரூரில் வரு நல்ல தம்பி காங்கய ராயனே. (272)

சோபனசகாத்தமோ ராயிரைத்தைஞ்ஞூறு தோன்று நாற்பத்தொன்றினிற்,சுகமானசித்த்ரார்த்தி மிடப மாசந்தனிற்றுங்கமிகு நாகவரைமேற், ரூபனமதான முருகன் மகாமண்டபந் தளமுத்திரம் போதிகை, தட்டோடு பாவுகல் சுவர்பிடை வடப்புறந் தாவுமருகணியொட்டியுந், தீபநிரை தூபமண மாலைசாயங்கால செல்லசம்பாவடிசிலும், பூபதிமதிக்கவரு நல்ல நாயகனுதவு புதல்வனிம்முடிநலலவன் புண்ணியமதாகவே யித்தனை நடத்தினன் புவிமீது மிகவாழ்கவே. (273)

வெற்றிபுனை கலியுக சகாத்தமாயிர மிசை விளங்குமைஞ்ஞூற்றைம்பதின், மேவு சுக்கிலவருடவையாசி தன்னிலே வியனரவமலைமேலிடம், பெற்றவுமைபாகர் பலகணிவாசல் தன்னிலே

பெரிய மண்டபநடுவிலே பிரியமுடனேம கூடத்தை நிகரென்னவே பேருலகு மகிழ்வெய்தவே, பொற்றிருவிமானமது கண்டனனனே கதவபுண்ணியங் கைக்கொண்டனன் பூசுரரை யீசனைக்கவிஞோரை யரசினைப் பூசித்துவரமெய்தினன், கொற்றமிகுமோரூர் படைத்த கண்ணன்கங்கை கோத்திரந்தன்னிலுதயன் கோகனக முகனுன நல்ல நாயகனருள் குமாரச்சுவாமி தானே. (274)

அரவகிரி யர்த்தநாரீசர் பச்சிமவாச லழகுசித்திரமண்டபம் அரவிந்தசிலை மண்டபமுமிருப்புக்கதவு மாணைமுகவன் மண்டபம், பிரிவு பெறு தெற்கு வாசற் கதவு தாண்டவப் பத்திரைவிலாச முடனே பகருமிந்திரவிமானஞ் சந்தனக்குறடு பன்மாலைகட்டுகுறடு, திருவளருமாலயத் தளவிசை குகன் கோவில் தென்மேலையுயர் மண்டபஞ், சிகரி நடுவிடைமண்டபஞ்சமன் கன்மிசை சிறந்த சித்திரமண்டபம், விரிவுள மகா நவமி மண்டப முடன் பாரிவேட்டையாடிய மண்டபம், மேலமுத வாவியிருபூவனமு மோரூர் விளங்கு நல்லயனுபயமே. (275)

திரமேவு கோதையுமைபாகரிட சந்நதி திருப்பணி நடந்துவரவே, சீமையெழுகரை நாட்டினுபயமார்க்கப்பகுதி சேரவகை செய்ததருமம், வரமேவு கயிலாய நாதராலய மதிலு மாதுபரிமள வல்லியார் மருவுகர்ப்பக் கிரகமர்த்த மண்டபமகா மண்டம் பள்ளியறையும், முரமேவு நிர்த்தமண்டபமுநட மாளிகையு மோங்கு சந்நதிவீதியி லுற்ற தென்சிறகு நடமாளிகையு நூறுபசு வயருமறையோரகரமுஞ், சுகமேவு நந்தவனமுங் கிணறனேகமுஞ் சோலைசெறி மோரூரில்வாழ், துங்கனெனு மத்தப்ப பூபனருளால் வந்த சுமுகனல்லவனுபயமே. (276)

ஆதரவு பெறு சித்திராபவுரணைத்திதியிலாயிரத்தைஞ்ஞூறு மேலானவிளநீர்கதலி யின்கனிக ளாயிரமைம்பது பலச்சர்க்கரை, போதரவு ததிபயசு நெய்புமதுவுங் கழைப் புனலு நற்கந்தவுதகம் பொன்னிநதி மஞ்சனங் கங்கை யுதகங் கொடு புயங்ககிரியானை வேலை, மாதயவுடன் பரவி யபிடேகமேத்தி நல் வஸ்திரம் பலசாத்

தியே மாலைமிருசந்தன கதம்பகஸ்தூரிமிருக மதபூடணங்களுதவி, ஏதமற நல்ல சம்பாவரிசியசனங்களினிய பலகறி சூபமும், இப் படி நடத்தினன் குமாரநலநாயக னெங்கள் மோரூரதிபனே (277)

ஏகமா மரவகிரியுமை கரத்திலிலகிய சரியுடன் கடகம்
நாககங்கணமுஞ் செவ்வியபவள நன்மணி பதக்கமுந்துகிலும்
மாகமாதருமோ ரூரதிபதியா மன்னவ னல்ல நாயகன் சொல்
பேகனுங்குமாரச்சாமி காங்கயனற்பிரியமாயினி தளித்தனனே.278

வெண்பா.

பவளஞ் சரிகடயம் பல்வயிரப் பொட்டுங்
கவளமணி கைக்கங் கணமும்—தவளநிறக்
கோதையுமைக் கென்றே குமாரசுவா மிக்கவுண்டன்
மாதயவாய்த் தந்தான் மகிழ்ந்து. (279)

காரணிக மாகநிலைக் கண்ணாடி யட்டணிகை
ஏரணியுங் கோதையரர்க் கீந்தானே—தாரணியெண்
சீராளன் மோரூர்த் திருமலையத் தப்ப நல்லான்
பாராளும் வேலமகி பன். (280)

ஆசிரியவிருத்தம்.

அரவகிரி யீசருக்கமுதுபடி னிரண்டுமொனகறி சூபமுடனே ஆவினெய்பழம் வெல்லமமுதடைக்காயிலையு மாலத்தி சாம்பராணி யும், விரிவுபெறு காவேரி யுதகமொரு காவடியு மேவு சந்தனமோர் பலம்மேலான கர்ப்பூர கோரோசனம் புநுகு மேவுநந்தாதீபமும், மருவிலுயர் சாதிமல்லிகை முல்லை யிருவாச்சி மணமான செவ்வந் தியும், மாலைமுடி பூவில்வமாதிபல கட்டளைகள் மனமேவியே செய்த னன், திருவுலவு மோரூரில் நல்ல நாயகனுதவு செல்வனிம்முடி நல்ல வன், செஞ்சொல்பெறுவேலன் குமாரச்சுவாமியுஞ் செகமீது மிக வாழ்கவே. (281)

சீரார் சகாத்தத்தி லாயிரத்தைஞ்னூறு சேர்ந்ததொண் ணூற் றெண்பதிற் றிரமான நளவருடமைப்பசித் திங்களிற் சேரு மெட் டாந்தேதியிற், பேரானசோமவாரந்திரயோதசியுடன் பெரியவுத்ரட்

டாதியும், பெற்றநாள் செங்கோட்டிலர்த்தநாரீசர்முன் பெருவிஷ்ணு தீர்த்த குணபால், ஏரானகாசிவிசுவேசுரர் விசாலாட்சி யியல் நந்தி பலி பீடமும், இன்பமொடு பிரதிட்டை யாகவேசெய்தன னெழில்பெற்ற மோரூரில்வாழ், தாரார்தடப்புயன் வேலபூபதிபுதவு சந்ததிகுமார நல்லான், தனதுதுணைவெற்றிக் குமாரச்சுவாமியின் சந்ததி தழைத்தேறவே. (282)

வெண்பா.

நாககிரி நாகீச நாதருக்கு வாருணமே
யாகவிசு வேசரையுண் டாக்கினான்—மேகமெனுங்
கையகவுண் டன்மோரூர்க் காங்கயர்கோன் வேலனருள்
* ஐயனெனு மாகவரா மன். (283)

ஆகமஞ்சேர் மோரூ ரதிபனையக் காங்கயன்சொல்
பேகன் குமாரநல தம்பியன்பாய்—வாகனந்தான்
றந்தா னுமைபாகர் தன்பவனிக் கோர்குதிரை
சந்தோட மாய்த்தழைத்தான் றன். (284)

நாகமுகன் கோவி னடுநா யகக்குறடு
மாகமுறு மண்டபமும் ¶ வைத்தானே—மேகமெனுங்
கையான் மதுரை நல்லான் கண்டாய் நளவருட
மெய்யா மரவகிரி மேல். (285)

கன்னல்செறி கோதைக் கயிலாயர் கூபமலைப்
பன்னுதமிழ் மூவர் படர் கோயில்—முன்னமுறு
நாட்டுவே லன்புரிந்தா னன்மையுடன் கண்ணர்குல
மேட்டிமைமாய்த் தான்வாழ்க வே. (286)

பூமகிழு மோரூர் பொன்னம் பலராயன்
பாமகிழுங் கோதைப் பதிவேலர்—தாமகிழக்
கார்த்திகையி னெய்ததீபங் கல்லோட்டி லேயிரண்டும்
ஏற்றியினி தாயிருந்தா னே. (287)

---

* ஐயகவுண் டன்மீன வன். என்றும் பிரதிபேதம்.

¶ இளைப்பாற்று மண்டபம்.

பேருலகெண் மோரூர்ப் பெரியவகை யாரரிசி
பாருலவு மாறு யடிநாளும்—நேருலவு
மண்டபமும் நெய்விளக்கு மாலைமட மாருமற்
கண்டுநடப் பித்துவந்தார் காண். (288)

தேங்குபுகழ் மோரூர்ச் சின்னவகை யாரரிசி
பாங்குட னேரண்டு படிமாலை—யோங்குலகும்
எப்போதுங் கோதை யிறைவர்தமக் கேநியமந்
தப்பாம லேநடப்பித் தார். (289)

முளசை, அன்னத்தியாகி.

ஆசிரியவிருத்தம்.

புயல்மேவு நாககிரி வருவேலர் திருமேனிபோந்த சருவாப ரணமும்,பூடணப்பெட்டியு மநேகபரிவட்டமும்பொன்காப்புவெண் கவரியும், நயபானபட்டு மபிடேக மகபூசையும் நல்லசம்பாவடிசி லும் நறைமேவு கறியமுது மதிகநைவேத்தியமும் நல்லசந்தன மாலையும்,இயலான பசுவுநெ யலங்கார தீபமு மெழிஞாிநாயகர்தமக் கேற்றகாவிரி யாடுதைப்பூச தீர்த்தமு மிலங்கியவசந்த விரிவுந், தயவாகவே திருத்தேர் தொழுதபரிசனந் தன்மதானங்கள்மிகவுஞ் சந்தத நடத்தினன் முளசைவேலன்றனது சந்ததி தழைத்தேற வே. (290)

வெண்பா.

தோகை யொரு பாலிலகு சோதிகன விற்றேன்றி
யோகையுறக் கூறு முரைப்படியே—நாககிரி
பண்டிதர் தீக்கை பரிந்துசெயப் பெற்றுய்ந்தான்
பண்டைவினை தீர்வேலப் பன். (291)

ஊமைதனைப் பேசுவித்தா *னும்பரிடு புட்பமழை
யாமெனவே பெய்யவகை † யாக்கினன்—தேமருவு
வேலன் முளசைவரு வேந்தன் பணிகிரிவாழ்
வேலன்மிசை யன்பாக வே. (292)

---

* திருச்செங்கோட்டு மான்மியம். ஷை குறவஞ்சி முதலியவற்றுட் சரித்திரம் அறியலாம்.

† ஒவ்வொரு புட்பமாக விமானத்துள்ளிருந்து கீழேதள்ளும் ஓர் சூத்திரம்.

நாகமலைக்கவுண்டன்.

ஆசிரியவிருத்தம்.

திருமருவு கலியுக சகாத்த நாலாயிரத்தெண்ணூற்றின்மேலாகவே, செல்வருஷபிரமாதி சித்திரைத்திங்களிற் றேதியொன்பதில் வெள்ளியிற், றருமருவு கைத்தலன் சிக்கரா சேந்திரன் றானுமப்பணைகள் செய்யச், சந்தோஷமாகவே ஏழுரில்வைகியே தான் றிருத்தேர் கொணர்ந்தே, குருமருவு செங்கோட்டி லர்த்தநாரீசருங் குமரரும்மகிழ் வெய்தவே, கொற்றவர்கள் மெச்சவே வைகாசியுச்சவங் கோலாகலஞ்செய்தனன், மருமருவு குவளையணி மார்ப னேவை யின்மேவு மன்னனன்னத்தியாகி மந்தரபுயாசலன் கந்தபூபதி கற்பவரசுதன் நாகமலையே. (293)

கட்டளைக்கலித்துறை.

படிக்கின்ப மன்னன் மரிராசபூபதி பட்சஞ்செய்ய
குடிக்கின்ப மான சுபை சொயுங்காலைசெங் கோட்டிலன்பாய்
நடிக்கும் பதத்தர்த்த நாரீசர் வேலர்க்கு நன்மணஞ்செய்
கொடிக்கம்பம் நாக மலைராயன் ரண்டுங் கொடுத்தனனே. (294)

விருத்தம்.

விந்தைபெறுஞ் செங்கோட்டிற்கைலாயர் சந்நதியின் மேலைவாய்தன்
அந்தமிகு கதவுதனைக்கம்பை முதலாணிகளு மன்பாய்ச்செய்தான்
செந்தமிழோர் கலிதீர்த்த நாகமலை பூபனருள் செல்வனான
மந்தரமென்புயனேவைக்கந்தமன்னனுலகின்மிகவாழ்கத்தானே295

கோக்கிளாய் வேலன்.

அரவகிரி யாலயத்து வடச்குவாச லழகுபெறு கோபுரமுன் வலமதாகப், பரிவுடனே யேவைவரு வேலனீன்றபாலகனுங் கோக்கிளாய்வேலபூபன், மருவளரு மிருகுறுந்தாளைந்து பாணி வாரணத்தைதமலையெனவுண்டாக்கிவைத்துத், திருவளரு மானை முகனருளினாலே தியாகரிடகுலத்தை யெல்லாஞ் சிறப்பித்தானே. (296)

கறைசைமறையோர் காத்திற் செங்கோட்டுத்தானிகர்தங் கவ்வைக்காக, முறைதனிலு ணுலெழுதிப்பொன்வாங்கி யொப்பமிடு முன்பதாகக், கிருபையுடனேவை யன்னத்தியாகியந்த முறிதனையே கிழித்துப்போட்டு, நிறைவுறப்பொன்னொரு நூறு தந்து தலத் தார்காணி நிறுத்தினனே. (297)

இன்சொல் சேருந்திருச் செங்கோட்டிலர்த்தநா ரீசர் மேற் பத்தியுடனே, யெழில்பரவு பெரியரதமுண்டாக்க வேண்டியே யின் பமாய் மனதிலெண்ணி, மஞ்சுலவு சங்ககிரிதனில் வாழுமுல்லள்ளி வருசிக்கராசேந்திரன், மனமேவவுரைசெய்து மப்பணைகள் வாங்கி. யே மன்னுசுபைசெயு நாடனில், மிஞ்சுதருமங்களிது வெனவுரை த்தவரவர்கள் மேவநிதி வருவகைசெய்தே, மேன்மைபெறு பெரி யரத முண்டாக்கிவைத்தனன் மேதினியுளோர் புகழவே, கஞ்சமலர் வாவிதிகழ்தென்னேவை யாதிபன் கருணைசேர் நாகமலைசொல், கந்தமகிபாலகன் மைந்தரொடு சற்றமுங் கர்சினியின் மிகவாழ்கவே

கட்டளைக்கலித்துறை.

நத்துப் பரவும் வயல் சூழ்தென்னேவை நகர்படைத்தோன்
சத்திய வாசக ஞகமலை மன்னன் றந்தமைந்தன்
புத்திக்கப்பாச்சி யெனுநாட்டு வேலப்ப பூபனன்பாய்
முத்துச்சிவிகை கொடுத்தான் செங்கோட்டு முதல்வருக்கே.(299)

விருத்தம்

மாசிவிழாப் பூசவிழா வைகாசித்திருநாண் மண் டபங்கடா மும், பூசைபடி தினமாறு படிமாலைதிருவிளக்கும் புரிந்தெந்நாளுந், தேசமது புகழ்ந்திடவே யேவைவளம் பதியன்னத்தியாக ராசர், நேசமுடன் பணிமலைவா ழுமைபாகர் தமைவணங்கி நிலைநின்று ரே. (300)

வெண்பா.

தென்முளைசைக் கண்ணர் தினமரிசி யைந்துபடி
தொன்மடமா மண்டபமுந் தோண்மாலைத்—தன்மம்
நடத்தினர் கோதையர்த்த நாரீச ரன்பா
மிடத்தின ராயிருந்தா ரே. (301)

ஆடரவகிரியர்த்த நாரீசர் பூசனைசெய் யாலம்பர் காசிபர்களும், அடைவான கொடுமுடித்தானீகருக்கு விலையாக முறைநாலு நாளும், ஏடெழுதி யொப்பமிட்டுப் பின்பு தியாகருறை யேவைவள நகரெய்தவே, யிதிலொருவர்வரலாகுமோ வென்றுசொல்லாமலே னெழுதினீரென்றுதன், வீடதனினூறுபொன் னுங்கொடுத்தேக றைசைவேதியரை விடைசெய்தனன், மென்முறிகிழித்தனன் சிறை தனையகற்றினன்மெய்காணி நிலையிட்டனன்,நாடரிய "விங்கன்றி செய்தநும்மரபினரை நண்ணுமெங்குல மக்களும், நன்மையுற வெண்ணுவ"ரெனக் குரவர்வாழிசொல நம்பு புகழெய்தினனே. 302

இராசிபுர நாட்டார்.

வெண்பா.

மாலை மடமு மலைவாய் மலைத்தேனும்
வேலனிட பள்ளியிவை மேவியே—சீலமுடன்
நந்துலவி ராசிபுர நாட்டார் * பணிமலைக்குத்
தந்தபரி சித்தனையே தான். (303)

துலுக்கண கவுண்டன்.

ஆசிரியவிருத்தம்

சீருலவு மடதருமம் நாலுபேருக் கமுது திருமாலை பொன்னியுதகந், திருவிளக்கரிசிபடி ஏழரைப்படிபயறு சிலகறிகள் நெய்வெல்லமும், ஏருலவு தளிகை மரகதக்கபாய் துகிலாடை யெழில்புனை பதக்கமுடனே யினியகுன்றீசரிடதூபி கோவிலு மகிமை யெய்து கயிலாயர்திருமுன், வாருலவு நிர்த்தமண்டபமழகு சேரேம மருவியதுவார பாலர், வடகோபுரக்கதவு தவமிகு துவாதசி மன்னுமறையவர் போசனம், பாருலவு நாககிரி யீசருளமேவவே பத்தியுடனே செய்தனன், பன்னுதமிழ் ரா்சிபுர நாடுளதுலுக்கணன் பலகாலு மிக வாழ்கவே. (304)

---

* வேளாளருள் அரசர் என்பதை, 1852-ஞ் த்திய மிராசு ரைட். 57-வது பக்கத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. இந்நூல் 270-வது செய்யுள் "வேளாளகுலதீபமான கண்ணர் தங்களரசு" என்பதனுனுமறிக.

மூணுசாவடிச் சின்னவேலகவுண்டன்.

அரவகிரி யர்த்த நாரீச ராலயமேலை வாசலுக்கருகாகவே அதிசயந்தருவிஷ்ணு தீர்த்தவடபால் மதில்க ளாலசியமுற்றதோர்ந்து, வருணதிசை முதல்வாயு மூலைபரியந்தமும் மதில் பிரித்தே கட்டினன், வாசல்முன் றிருநிலைக்கால் கோபுரத்தருகு மண்டபச் சிதைவகற்றி, தருணமுழுருத்திரோற் காரிவையாசியிற் றயங்கு மொளி விசுவேசருந், தனதுமை விசாலாட்சியுட னஷ்டபந்தனத் தருமமது நிறைவேற்றினன், வரிசையுளவன்ராசை வளர்சோம சுந்தரன் மகிழ் சின்ன வேல மகிபன் மைந்தர் பதினறுடன்பிறை யாயிரந்தொழுது மகிமீது மிகவாழ்கவே. (305)

பருத்திப்பள்ளி நாட்டார்.

தென்பருத்திபள்ளி நிலம் பாலை மேட்டிற் சிலநிலமும் மல்ல சமுத்திரத்திற்செய்யும், மன்பரித்தவளந்திகழுங் கொன்றையாற் றின்மாவடையுந் துத்திநத்த வரிகடானும், மின்பொருததமான கொழுங்கொண்டைதாளி வெல்லமுமீழுவர்வரி வைவகைப்பொன்றேனும், அன்புடனே பருத்தி நாட்டார்கள்கோதை யர்த்தநாரீசருக் கேயளித்ததாமே. (306)

தினமமுதுபடியாறு கறிகளோடு திருமாலை திருவிளக்குஞ் சுகந்தக்காப்பும், அனமருவு மடதருமந் திருவிழாவி னழகியமண்டபச்சிறப்புமமஞ்சிவேலை, கனமருவு பலருபய மார்க்கரேகை காவிரி மஞ்சனம் புழுகு காப்புமேற்றி, மனமருவுகோதையரனருளினலே வாழ்பருத்தி நாட்டவர்கள் வரம்பெற்றரே. (307)

வெண்பா.

அர்த்த பா கத்திருநா ளம்மண்டபச் சிறப்பும்
மெத்தவே தானடத்தி மேவினன்—பத்திபுனை
ஞாலம் புகழ்பருத்தி நாடுடையோன் காராளன்
வேலன் கனமாக வே. (308)

சர்க்கரை மன்றாடியார்.

அநுதினமு மபிடேக சந்தனம் பலமிரண்டான காவிரிமஞ்சன மளிசீதமானவிள நீரிரண்டொடுசுருதி யத்தியானத்தருமமுந், தின மமுது படியைந்து பயறுபடிகறியோடு சேரநெய்வெல்லமுடனே செங்கோடருக்கிவை படித்தர நடத்தினன் சித்திரத்தேர் மீதினில், மனமகிழ மஞ்சனச் சங்கிலி கொடுத்தனன் மலைமேலை வாய்க்கவாடம் வைத்தனனநேக பரிவட்டமாலிகைதீப மடதருமமுஞ் செய்தனன், கனமிகுதி யீதல் சவுரிய மகிமைபெற்றனன் காரையானூருடையவன் கந்தனெனவந்த சர்க் கரை பயறனுத்தமக் காமிண்ட * மன்றாடியே. (3,9)

மசக்காளி மன்றாடியார்.

வேலை சூழ்பணி மாமலைவேலரு விமலருமகிழ் வெய்தச்
சீலமாகியோரைம்படி யரிசியுஞ் சிலகறிபருப்போடே
மாலைகாவிரி மஞ்சனந்தீபமு மனமிகு தயவாகிப்
பாலை சேர்மசக்காளி செங்கோடரைப் பணிந்திவையளித்தானே.

காங்கேய மன்றாடியார்.

பானுலாவிய பணிமலை வேலரும் பரமருமுளமேவத்
தேனுலாவிய காடை மன்றாடியார் திருந்தவிழ் மரக்காலுங்
கானுலாவிய கறிகளும் பருப்புடன் கவினுறுதிருமாலை
யானுலாவுநெய்த்தீபமுந் தினந்தின மளித்தனன் பிழைத்தானே.

பல்லவராயன்

மன்னுகாங்கயப் பல்லவராயமால் வளர்பணி மலையார்க்குத்
தன்னுதாகநந்தாவனஞ் சரப்பணி தயவுடன் றுகிலாடை
செந்நெலா மவிழ்குறுணி நெய் பருப்புடன் றீபநற்றிருமாலை
யின்னதாகவே நடத்தினன் றாணியினினிதுபெற்றிருந்தானே. 312

---

* பாண்டியனுக்குப் பகைவனான உத்தமக்காச்சோழனை வென்றவன். "ஆறெல்லாஞ் செந்நீரவனி யெல்லாம் பல்பிணங்கள், தூறெல்லாஞ் சோழன் சரி குஞ்சி—தேறுதமிழ்க், கன்னிக்கோ னேவலினாற் காரைக் கோன் பின்றொடரப், பொன்னிக்கோ னோடும் பொழுது."

மாலதானரா தாபுரத்துடனெழின் மருவியவிருபத்து
நாலு நாட்டவருபய முஞ்சிறப்புட னல்விளக்கலர்மாலே
சாலமாமட தருமமும் பரிவுடன் றடபணி மலேயார்க்கு
வேலேயீதெனப்புரிந்தன ரவரவர் வேண்டியதடைந்தாரே. (313)

நகரத்தார்.

அர்த்தநாரி செட்டி.

பலமேவு கலியுக சகாத்தமாயிரமிசை பயின்ற முந்நூற்றைம் பதிற், படர்காளயுத்தி வருடந்தனிற் கோதையுமை பாகருக்கற்பித மெனத், தலமேவு பரமேசர் கயிலாய நாதர்தஞ் சந்நிதிமகாமண்ட பந் தனதர்த்தமண்டபங் கற்பக்ரகந்தூபி தங்குசோபானகுறடு, நல மேவு சந்திரசேகரர்குறடு பலிபீட நல்ல கற்கம்பமுடனே, நன்றெனி வமைத்தனன் கற்பதருவாமர்த்தநாரிகாரண வணிகமால், குலமேவு சந்ததி தழைத்தேறவுந்தனது கோத்திர மிகுந்தேறவுங் கொற்றநவ கோடி நாராயணனெனும் பெருமைகொண்டுபுவிதனில் வாழ்கவே.

திருமடப்பள்ளி மலே மீதுமட மண்டபஞ் செப்புக்கிடாரமணி யுந் திருமுலேத்தளமோலே யொட்டியாணங்காறை செம்பொனின் வயிரமணியும், ஒருமட மிரக்கத்திலானேமுகவன்கோவி லோங்கு சங்கிரமபூசையும் உற்றதிருநாளுபய வபிடேககட்டளேக ளொடு சாந்து சாத்துபயமும், மருமுடி யுமைக்கிடது பாகங்கொடுத்தபணி மலே யீசருளமகிழவே மங்கைவரு சீயாலகட்டி புண்ணியமாக வத் திரமனேகங்களுந், துரமுடைய வமரகுன்றியிலாயிரத்தலேவர் சோ லேசெறி குன்றைநகரார், துங்கவெழுகரை நாட்டின் மேவுவணி கேசுரர்கள் சுபமுற வியற்றினரே. (315)

வேலாயுதன்.

வெண்பா.

அத்திமுகன் கோவி லழகான சோபனமுஞ்
சித்திமட புண்ணியமுஞ் செய்தானே—புத்தியுடன்
நந்துலவுங் குன்றைவரு நல்லணபூ பன்பரிவாய்த்
தந்தமகன் வேலாயு தன். (316)

திருவேங்கடநாதன்.

கட்டிரதக் கீழ்பாற் கணபதியு மண்டபமு
மட்டதிக்கெண் கோதையிலுண் டாக்கினான்—இட்டமுடன்
சிந்தைதய வாகிச் சிவசூரிய வணிகன்
றந்ததிரு வேங்கடநா தன். (317)

நல்லகட்டி செங்கோடன்.

விருத்தம்.

தென்னிலங்கிய பணிமலை வேலர்தன் சிறந்தசந்நிதிவாசன்
முன்னிலங்கிய துவாரபாலகர்களை முறையுடன் புரிந்தாரால்
கன்னிலஞ்சிலை வேணல்ல கட்டியுங் காரணவணிகேசன்
இன்னிலம்புகழ் மேவுசெங்கோடனு மிருவருமிகவாழ்க. (318)

சுக்குட்டி செட்டி.

தென்மகிழ் கோதை மேவுந் திருக்கயிலாய நாதர்
முன்மகிழ் நந்திகேசர் முழுமணிக்குற டுண்டாக்கி
மன்மகிழ் குன்றை நோட்டம் வைசியகுலன் சுக்குட்டி
தன்மமா யிடபதேவர் தாபனஞ் செய்வித்தானே. (319)

சிவந்தபாதம்.

அணிமலைத்தருமமேவு மாயிரத்த வருதாகப்
பணிமலைகாவலர்க்குப் பழயமண்டபத்து முன்னே
துணிமலைக்கருணைவாரி சுரந்திடு சிவந்தபாதம்
மணிமலைக் கனகமீந்து மண்டபங்கட்டினானே. (320)

குமரவேலப்ப செட்டி.

நன்றிசேர் கோதையர்த்த நாரியீசருக்கு முன்னே
வென்றியா யிரவரன்பு மேவிய மடத்தின்பாங்கே
குன்றைவாழ் வணிக னோட்டக்குமார வேலப்பசெட்டி
மன்றுள்போல் வடக்கு வாய்தல் மண்டபங்கட்டினானே. 321

அர்த்தநாரி செட்டி.

நந்துலா வாவி சூழும் நாகமாமலையின்மீது
கொந்திய வடக்குவாய்தற் கோபுரத்தங்கி மூலே
தந்திமாமுகனுங் கோவிருனுமே குன்றைநோட்டஞ்
செந்தமிழர்த்தநாரி செட்டி யாருபயந்தானே. (322)

வெண்பா.

நாககிரி வீரன்மலே நந்தீ சுரர்தமக்கு
மாகமொரு மண்டமும் வைத்தானே—மேகமெனும்
நாரா யண வசிய னல்குமர்த்த நாரிமன்னன்
தாராள மாய்க்கொடுத்துத் தான். (323)

செங்கோட்டு நல்லதம்பி.

விருத்தம்.

தென்னுலவு காராளன் செங்கோட்டு நல்லதம்பி திருச்செங்கோட்டி
மன்னுபுகழ் நல்லீசர் தாபனையு மண்டபமும் வளமாச்செய்தே [ல்
பன்னுதமிழீரோட்டி னஞ்சையிருமாவுமவர் படிக்கேயீந்து
நன்னிலமெண்டெய் வசிகா மணிக்குருவுக் கபிடேகம் நடத்தினனே

முத்தியப்பன்.

வெண்பா.

காரணிகர் கோதைக் கணபதியார் சப்பரமும்
பாரணியு மூடிகமும் பண்ணினன்—ஏரணியுந்
தொண்டைவள நாடன் றுரைநயினன் முத்தியப்பன்
தண்டமிழ்சேர் கங்கைகுலத் தான். (325)

இருப்புலி—இளையாக் கவுண்டன்.

வெண்பா.

தென்னுலவு நாககிரி சித்திர மண்டபத்தை
மன்னுவடி வேலவர்முன் வைத்தானே—பன்னுதமிழ்ச்
சொல்லி லிளையான் சுமுகன் விகாரிதனிற்
பல்லுலகும் போற்றும் படி. (326)

நாகமலைக் கோவிலுக்கு நாயகமென் றேழுருகர்க்
காகவொரு மண்டபமுண் டாக்கினுன்—பேகன்
இளையா னிழலி லிமையவரு மாருங்
களையாற வேபணிவார் கள். (327)

செல்லனிளை யானிரும்பைச் செம்மலிரு பாணிகொண்டு
பல்லுலகெண் கோதைப் பதியார்க்கு— நல்ல
திருப்பணியும் பூசனையுஞ் செய்துசெய்து சன்மக்
கருப்பிணியை மாற்றிவைத்தான் காண். (328)

ஆசிரியவிருத்தம்.

மங்கைவரு கட்டிரத வடகீழ் விடாயாற்றி மண்டப மகா பூசைபு மலைமீது காலசந்தியினறு படியரிசி மடமாலை நந்தவனமும், துங்கரவகிரிவேல னிர்த்த மண்டபவணிகள் சூழ் சித்திரகண்ட முடனே தூயகுமரீசர் சந்நிதிமண்டபங்கிரி துலங்குமட மனதான முந், திங்களணி யர்த்த நாரீசபண்டிதருடைய திருமாளிகைக்கூட முஞ், செழுமறைசொலுஞ் சதா சிவபண்டிதர்க்கினிய தேசிகப்பிரதிட்டையும், பொங்குபுகழ்சேர்குலோத்துங்க பட்டன் றுணைவர் பூணுநூலொடு வதுவையும் புண்ணியகுமாரனிளை யானிரும்பையையுடைய பூமிபாலக னுபயமே. (329)

பொன்னய்யன்.

சீரணியுஞ் செங்கோட்டி லர்த்தநாரீசரிட சித்தமேவ, காரணிகவயிரவனூர் சிகரந்தன் புண்ணியமாய்க் கட்டிவைத்தான், தாரணியெண்குமரமங்கைக் கவுண்டனியன் குழந்தையப்பன்றந்தைமந்தன், வாரணிமுன்னூன்மார்பன் பொன்னய்யனிப்புவியின் வாழ்க மாதோ. (330)

அர்த்தநாரி அய்யன், முத்தய்யன்.

அரவகிரி யடிவாரத் தறுமுகவர் தூபிசெய்தானலம்பாயன் குரிசிலெனுஞ் சுப்பிரமணிய பண்டிதன்பாற் சேர்க்கையுள்ளோன் கோதைவாழ்வோன், அருமறையோனர்த்த நாரீசுரையன் முத்தயன் காணன்பாய்த்தானே, துரிதமாய்த்தன்மமிதைச்செய்து மனத் துன்பமறச் சுகம்பெற்றானே. (331)

சுங்கம், திருவேங்கடம், அர்த்தநாரியப்பன்.

கட்டளைக்கலித்துறை.

மாலோ னுமையை யரனுருக் கீந்த வகையெனவே
பாலான மேனியர் நாகேச லிங்கர்க்குப் பாணிவட்டஞ்
சேலார் பழைசையில் வாழ்திரு வேங்கடந் தென்றெழுவூர்க்
கோலா கலனர்த்த நாரியுங் கூடிக் கொடுத்தனரே. (332)

தானத்துக் கணக்கு, ராமபத்திரன்.

ஆசிரிய விருத்தம்.

மங்கள சகாத்தத்திலாயிரத் தைஞ்ஞூறு மருவுமுப்பத்தெட்டினின், மன்மதமெனும் வருடமேட மாதந்தன்னின் மன்னுசூரப் பள்ளியிற், பொங்கமுடனொருகுளந் தன்னையுண்டாக்கினன் புகழாவகிரியார்க்கெனப் போஜன் மரிராசேந்த்ர னுடையபுண்ணியமதாய்ப் புனிதன் முத்தய்யன் மகிழக், கொங்கினுயர் செங்கோடையர்த்தநாரீசருங் குமரரும் வேதியர்களுங், கோவிலின்பரிசனர் கண்முதலான பேர்க்கமுது குறையாத வகைசெய்தனன், கங்கைகுலனுனவேள் கோதைநகராதிபன் கந்தச்சுவாமிபாலன், கருணைமிகுராமபத்திரமகீபாலகன் காசினியின்மிகவாழ்கவே. (333)

வேறு.

முன்னமொரு பகீரதென்றன் கங்கைதனைக்கொண்டு வந்த முறைமை போல, மன்னர் மன்னன் மரியேந்திரன் மந்திரிமுத்தையனிட மனதுமேவ, அன்னதருவளரகரந் தன்னிலர்த்தநாரீசர்க்காகவேண்டிக், கன்னன் மதன்கந்தனருள் ராமபத்திர னொருகுளத்தைக்கட்டினனே. (334)

இருகாலூர், அத்தப்ப கவுண்டன்.

நானிலமதித்தபணி மலைவேலருங்கருணை நாரியுமை யொருபாகரும், நரராசரமரர்முனிவோர்கள் புடைசூழவே நகரிவலமானபவனி, தானுலவிவந்தபின் கற்பூரதீபமும்தட்டிபல பரிமாறவுஞ்,சகலரையனுப்பவுந் தங்கமகமேருவிது தானென்னவொருமண்டபம்,

பானுலவு கால்களிருபத்து நாலுத்திரம் பாவுதளவிசைபோதிகை, பலவோடமைத்துநம் மலைமீதிரவிகோவில் பண்ணி நற்றவமெய்தி னன், தேனுலவு மங்கைவரு கட்டிமனமகிழவே தேசதேசம்புகழ வே செஞ்சொலிரு காலூரிலத்தப்பபூபதி சிறந்தசுக்கில வருடமே.

கட்டளைக்கலிப்பா.

ஆரணந்திகழ் செங்கோடர் சந்நிதி யனுப்பு மண்டப நாலாறு கானிறை, பாரணிந்த தளம்போதியுத்திரம் பாவுகல்லுடன் றட் டோடு மேல்புரஞ், சீரணிந்தநற் சீயாலகட்டிதன் சித்தமேவிரு காலூர்ப் பெரியவன், காரணம்புக ழத்தப்பூபதி கட்டினன்பிரமாதூ தந்தன்னிலே. (336)

சேட்டியாக் கவுண்டன்.

ஆசிரியவிருத்தம்.

ஆடரவகிரியினடி வாரமுறை கயிலாய ராலய மகாமண்டபத் தழகுதாண்டவகுறடு மலைவிநாயகர் குறடு மசல நடராசர்குறடுஞ், சேடகிரியேறுபடி சிவதீர்த்த தட்சிணத் திசைநூறுபெரியபடியுஞ் செஞ்சொனூறும்படி தனைப்பெரியதாகவே செய்வித்த தொருதரும மும், நீடுவயிரவதீர்த்த நிருதிதிசையாகவும் நிலைமைதரு நலநாயக, னிறைமண்டபத்திடையுமாமிளைப் பாற்றியும் நித்தியமனதான நிபு ணன், நாடுபுகழ் குமரமங்கல மேவுதூரனுயர் நதிவமிசகுலசேகரன் நன்மைபெறு குமரபூபதி செட்டி யன்புடனடத்தின திருப்பணி களே. (337)

வேறு.

கோதைக்கிரியிற் சிவதீர்த்தக் குணபாற் சித்ரகூடமென
மாதர்க்கரசி மசவேலன் வள்ளிதொடுத்த மண்டபத்திற்
பாதிக்குறடு சுவர்பிடைசெம்பாதிக்குறடு மேல்வேலை
நீதிக்குமர புரித்தூரன் நேயன் செட்டிபுண்ணியமே. (338)

எல்லப்ப நாயக்கன். *

வெண்பா.

சீறும் பணிமலையைச் சேவிக்க வேயடியா
ரேறும் படிபதினு றீராணை—சீருடனே
செய்தான் மடமுஞ் சிறந்தகுன்றைக் கொல்ல*வெல்ல
னுய்ந்தா னிருந்தா னுகம். (339)

---

* தெலுங்கு பேசும் இடையர், பொக்கிஷகொல்லர் எனவும் படுவர்.

இரணபுரம், நல்லயன்.

சைவசேகரன் ருரமங்கையில் வருதலத்தான்
தெய்வவேதியனல்லயன் சிவத்துசர் திலகன்
மைவரும்பணி மலையடி வாரமே சிறக்க
மெய்வரும்பத மண்டபமன்புடன் விதித்தான் (340)

திருமுடித்தாசி, சேனபதி வேலாள்.

வெண்பா.

பன்னுதமிழ்ச் சேன பதிவேலா ளுகவரை
மன்னுபடி வாசல் வழிமீது—மின்னுமணி
மண்ட பத்தைக் கண்டாள் வணங்கினுண் மாயையெனும்
பண்டவத்தைத் தீரும் படி. (341)

தயிலி.

வானந்த மென்னுமொரு மண்டபத்தை யேதயிலி
தானந்த மென்னச் சமைத்தாளே—ஆநந்த
வச்சரத்தே கோதை வருவீர பத்திரன்முன்
றச்சுரத்த னல்லழகாய்த் தான். (342)

அணை அர்த்தநாரிக் கவுண்டன்.

சற்ப சயிலத் தடவரைத்தோ ணிக்கருகே
அற்புதவீ ரேச னம்ர்கோயில்—சற்பதரு
ஆனேனம் மாந்தையணை யர்த்தநா ரிக்கவுண்டன்
ருனேயுண் டாக்கிவைத்தான் ருன். (343)

செங்குந்தச் சின்னன்.

பாருலகெண் கோதைப் படிப்பேழைக் கல்லருகே
சீருலவு மண்டபமுஞ் செய்தானே— ஏருலவு
சின்னன் குகனடியான் செங்குந்தன் ராசைவரு
மன்னும் புகழபிரா மன். (344)

குருவம்ம மாணிக்கி.

அன்புநெடுஞ் சேடகிரி யாதிசிவ தீர்த்தமிசைத்
தென்புரமோர் மண்டபமுஞ் செய்தாளே—யின்பநெறி
யாருமெதி ராதகுரு வம்மமா ணிக்கிவட
மேருகிரி யைப்போல வே. (345)

செவ்வந்தி செட்டி.

வெண்பா.

அவ்வந் தியம்போ லயன்றீர்த்த வுத்தரத்தே
செவ்வந்தி செட்டிதிருச் செங்கோட்டிற்—பவ்வந்
தொலையவொரு மண்டபமுஞ் சோபனமுஞ் செய்தான்
நிலைமைபெற வாழ்ந்திருந்தா னே. (346)

அகரத்துச் செட்டி, வேலப்பன்.

சேடகிரி யாலயத்துத் தென்மேலை மண்டபத்தை
நீடுமுகி லென்ன நிறுத்தினன்—நாடுபுக
ழானகுசச் செட்டி *யகரத்துச் செட்டிகளிற்
பானுவெனும் வேலப்ப பன். (347)

ஆண்டி செட்டி.

விருத்தம்.

உத்தமர் பரவு கேதா ருடையர்க்கு மடமுங்கட்டி
கொற்றவர்க்கினிய கோதைக் கடவுள் மண்டபமுண்டாக்கி
நற்றவம் படைத்துவாழு நற்குசச் செட்டிமாருள்
கொற்றவ னாண்டிசெட்டி குலந்தழைத் தேறத்தானே (348)

நல்லான் செட்டி.

வெண்பா.

வில்வ விநாயகர்முன் மேவ வொரு சாவடிசெங்
கல்விளங்கச் செய்து களித்தானே—பல்கும்
அகரங் கறுப்ப னருந்தவத்தி லுற்ற
மகனல்லான் செட்டியெனு மால். (349)

* வேளாண் செட்டிகள் என்ப.

பெரியாள்.

விருத்தம்.

உத்தம வீரவாகி னுயர்குலப் பெரியா ளாண்டாங்
கொத்தரி னிருதி மூலைக் குள * மிளங்கோயில் * வேலர்க்
கர்த்த மிண்டபமுங் கர்ப்பவகமகா மண்டபங்கள்
பத்தியின் புரிந்து தானம் பல பணிமலையிற் செய்தாள். (350)

விருமக் கோல்லன்.

படிபுகழ் விசய வாண்டிற் பரிவுள கோதை வீதி
யடைவுடை யக்கசாலை யாதிபருபயமாகத்
தடமிகு குறடுந்தூணுஞ் சகலமு முடித்து நன்றாய்
வடிவுற விருமக் கொல்லன் மண்டபங் கட்டினனே. (351)

சிதம்பரம்.

வெண்பா

சத்தமா தாவுந் தடவரைநா ரும்படியும்
பத்தியுடன் கோதையிலே பண்ணினான்—புத்திதரு
தெய்வ மதுரைவரு சீயாலக் கட்டிமடஞ்
சைவன் சிதம்பரநா தன். (352)

இடைய, சேல்லன்.

கோதை யழகியம்மை குறடுபலி மண்டபமும்
மாதயவா கச்சமைத்து வைத்தானே—நீதிபுனை
கோபால கிருஷ்ண குலதீப மானசெல்ல
பூபாலன் பெற்றான் புகழ். (353)

கோபாலன்.

கட்டளைக்கலித்துறை.

மாபத்தரேத்திட வைகாசி வீதி வடசிறகிற்
கூபத்தருகி லழகாக வேயொரு கோவில்கட்டித்

---

* இப்பொழுது ஒங்காளியம்மன் கோவிற்குட்டை. * அங்கு ஒரு சுப்பிர மணியராலயம் என்ப.

தாபத்தை மாற்றிடு மாயன்கோ பாலன் றருவணையான்
ஆபத்துக் காத்தவி நாயக ஞரையுண் டாக்கினனே (354)

கோழுங்கோண்டை, கணக்கன், சுப்பிரமணிய பிள்ளை.

ஆசிரிய விருத்தம்.

ஆதிகாலத்திலே காமதேனுச்சிவனை யன்புடன் போற்றிசெய்தே, அம்பொன்மா மேருதனிலேந்து நன்னுடியெற் கருள்கவென வவை தந்ததுஞ், சூதமுனிதல புராணந்தனிற் சொன்னதுந் தூலமாய் நாகமலையாய்த்,தோன்றவேயதனிட சொரூப மிஃதென்னவே தொல்லுலகமறியும் வகையாய்ச், சேதிபெறுமல்லைத்திருக்கை வேலப்பனருள் செல்வனுஞ் சுப்பிரமணியன் செங்கோடரைத் தொழுதுகங்கைக் கணேகீழ்புரஞ்செய்தனன் சற்பவுருவாய்ப், பாதலந் தன்னில்வாலண்ட முடியிற்சிரசுபடமைந்து மாகவேதான் பத்தியொடுசெய்தனன் கோதையரனருளினுற் பதினுறு மைந்தர்பெறவே. (355)

வெண்பா.

நாகமுகன் றன்னைவலம் நாகலிங்கந் தன்னையிடம்
வாகுவடி வேலவர்முன் வைத்தானே—வாகுடனே
சேகரனும் மல்லைத் திருக்கைவே லப்பன்மைந்தன்
ஆகமகிழ் சுப்பிரமணி யன். (356)

நாகபடந் கைலாய நாதருக்குத் தானீந்தான்
நாகமென்றோர் வாகனமு நல்கினுன்—நாகரிதன்
சேகரமா மல்லைத் திருக்கைவே லப்பன் மைந்தன்
மாகதரு சுப்ரமண்ய மால். (357)

தண்டாயுத பிள்ளை.

மங்கைபத்ர காளியம்மை மண்டபத்துக் கேறிவர
சிங்கமிரண் டும்படியுஞ் செய்தானே—பொங்குபுகழ்
ஞானபரன் கோதையர்த்த நாரி பரிவாகத்
தானபரன் றண்டாயு தன். (358)

காகமுப்பன், முனியன்.

விருத்தம்.

நாககிரிக்குகந்தபடி யறுபதுமேலேந்துதலை நாகஞ்செய்து, வாகுடனேமறையவர்க்கு மகேசுரர்க்கு மன்னசொன்னம் வழங்கியன்பாய், ஆகமுடன் பூசித்தா னர்த்தநாரீசர்தம தருளேபெற்றுக், காகமுப்பன் முனியன் மங்கையுள்ளோர் செல்வமதாற் கதிக்கின்றுரே. (359)

நாகசுர நல்லதம்பி.

வெண்பா.

நாகசுர கானனரு ணல்லதம்பி கட்டியன்பால்
மாகமுறு நாக மலையார்க்கு—மோகமுறு
வானுயருங் கைலாய வாகனமும் பண்ணுவித்துத்
தானுயருங் கீர்த்தியடைந் தான். (360)

திருவகம்படிமை.

திருமுடியார்.

ஆசிரியவிருத்தம்.

சீர்மருவு நாககிரி வடிவேலருமை பாகர் திருமேணிகாவனுடனே திருமாலை கருவூலவறை யுக்கராணங்க டிகழகம்படி யூழியம், பார்மருவுதளியிலாண் பெண்காணி கும்பார்த்தி பரிவுபெறு வெண்சாமரம் பாவாடை விசிர்நடனங்கடிரு வாலத்தி பதுமபுட் பாஞ்சலிகளும், ஏர்மருவு பலநாடகங்களொடு காவியமிராக நாலெட்டுவகையு, மேழுதாளங்களிய லிசைபரத விதமேவி யிற்றெழில் புரிந்துநிதமும், பேர்மருவுபூதிபஞ் சாக்ஷரமணிந்து நெறிபெற்ற குரவோரடிதனைப் பேணிவரமெய்தியே தானீகரேவு பணிபிரியா திருந்தனர்களே. (361)

செங்குந்தர்.

அன்புநெறிபெறு வீரவாகு மரபினிலுதித் தழகானநாககிரி வாழ், அர்த்தநாரீசர்வடி வேலரை வணங்கியே யவர்பணிவிடைக்

கினியராய்த், தென்பயிலுநட்டுவெம் மத்தளம்பேரிகை சிறந்தபதி னெண்மேளமுஞ், சீர்பாதசுமையினொடு மன்புமிகு மாண்மக்கள் செய்யடிமை பெண்காணியும், மன்புகழுநடனவித ராகவிசைதாள முமதித்த மங்களநிர்த்தமு, மாறுசத்திரகவுரி விருதுபலபாவாடை மன்னுமழகாலத்தியும், இன்பமுட னின்னவைகள் சந்ததமியற் றியே யிளையவன் வரமெய்தியே, யியலான குரவோர்களேவுதொழி லாளரெனு மினியகைக்கோளரிவரே. (362)

சில்லரைத் தருமங்கள்.

அரவகிரி யாலயந்தனில் நிருதிமூலைதனிலானை முகவன் கோ விலுண் டாக்கியது கைக்கோளநல்ல நயினுனுபய மழகுகணபதி* கோவிலுந், திருவழகுமடவடிமை யானதேவாள் பரிசு சீர்பாத மண் டபமுடன் சிகரமது விருமியுபயம் பெரியவசவனுஞ் செஞ்சொல் மல்லுடையருபயம், பரவரியநாகதீர்த்தத் தருகுசோபான பதி மேலைவாய்த தனிலே படியுநடமாளிகையு மிவைகுசச்செட்டிகள் பணிந்தது நெடுஞ்சுனையினன், மருவியகலிங்குகண பதிசுனைமதிற் கருணை வாலராசன் புண்ணியம், மன்னு சண்பகவிநாகர் செம்பகுல மதனில் வாய்த்த பொம்மணனுபயமே. (363)

படவரவ கிரிமீதிலட்ட கொற்றவைபஞ்ச பாண்டவர்கள்செய்த தருமம், பன்னுவட கோபுரப்படிவிநாயகர் கோவில் பரிவுராமாஞ்சி யுபயந், தடபிரமதீர்த்தத்தி னருகரிச்சனையருகு தயவுடைய சோழ னுபயந், தாவுவடகோபுரஞ் சூழெடுத்துக்கட்டி தண்டமிழ்க்கட்டி யுபயந், திடமுடைய வேலவன் சந்நிதியிலேங்கரன் செங்குந்தவெற் றியுபயந் திருநந்திகே சுரர்குறடு மயிலனபரிசு சிகிவானக் குறடு டன், அடைவுபெறு பலிகுறடுவாலராசன் றரும மழகுகோபுர வாசலி லருகணைக ளாறுறு படிவிசாலங்கருணை யாவினன் குடி யுபயமே. (364)

☞ இன்னுஞ் சில பாடல்கள் மிகச் சிதைந்து காணப்படு கின்றன வாதாலால், அவை யிங்கே பதிப்பிக்கப்படவில்லை.

---

* அழகு விநாயகன். கொங்குவேளாளர் விவாக காலத்தில் வாழி கூறுதல் முதலிய உரிமை யினரான புலவன், பட்டன், தக்கை கொட்டி, கூத்தாடி, பண்பாடி, முதலிய ஐவகை யினரும் கூடி, வயது வந்த தங்கள் தங்கள் மக்களில் அவ்வவ் உரிமைகளுக்கு அருகர் இவரென அங்கீகரித்தபின், முதன்மையோனால் தாம்பூலந் தரப்பெறுஞ் சந்நிதி.

இங்கிலீஷ் துரைத்தனம்.

ஈஸ்டிந்தியாக் கம்பெனியார்.

கட்டளைக்கலித்துறை.

வளமுற்ற வீஸ்டிந்தி யாக்கம் பெனியார் வலியவெம்போர்க்
களநட்ட மின்றிப் படிபெற்றுப் பூநா கமலைநின்ற
தளவுற்ற மூர லுமைபாகர் பூசை தனைநடத்தி
யளவற்ற நாடுஞ் சயமும் புகழு மடைந்தனரே. (365)

விக்டோரியா சக்கரவர்த்தினி. VICTORIA.

உரைசாலி யோரா யிரத்தெழு நூற்றெண்பத் தொன்றினிற்
றுரைசானி விக்டோரி யாப்பெரு மாட்டி துகளறவித்
தரைசால வாளத் தொடங்கின ளிங்க்லண்டு தன்னினின்று
பரைசீ கலைமகண் மூவரும் சேர்ந்த படிவமென்றே. (366)

எக்கிர மங்களுங் கோணும மித்திய மேமுதலா
அக்கிர மான விழாக்களு மாக வமைத்ததனல்
அக்கர ரூபரெனுநாரி பாக னருள் சுரந்து
சக்கர வர்த்தினி யாகவிக் டோர்யா தழைத்தனளே. (367)

நீராவிக் கப்பலும் வண்டியு நூற்பு நெசுவு மற்றும்
நேரான தந்தியுஞ் சைகிலுங் காற்று* நெருப்புகுச்சி
சீரான சர்வ கலாசாலை மேன்மைச் சிகிச்சையெல்லாம்
பேரான விக்டோரி யாகாலத் துற்ற பிரபலமே. (368)

மைசூர் மஹாராஜா கிருஷ்ணராஜேந்திர உடையார்.

அரவா சலத்தெழு நாரீசர் பொன்னடி யன்புகொடோவ்
வொருநாளும் பூசைநை வேதன மாதிபு மோங்கு விடைத்
திருநாளுஞ் செய்தனன் சர்னுடசந் தடல் சேர்ந்தமைசூர்
அரியா தனன்கிருஷ்ண ராஜேந் திரவுடை யார்மகிழ்ந்தே. 369

* காற்று—Gas.

சேலம் ஜில்லா கலெக்டர் டேவிஸ் துரை. W. D. DAVIS.

தாண்டவ பத்ரை விலாசத்திற் பாக்கற் சரியுமென
ஆண்டுறக் கண்டுகற் றூணென்று நாட்டின ஊரவர்கள்*
வேண்டிடு சேலங் கலெக்டருத் யோகத்தின் மேவிவந்த
ஆண்டகை டேவிஸ் துரையிசை யோங்க வவனியிலே. (370)

நாககிரி பண்டிதர்.

முன்னு லமர்கட வுட்கரு கேமுத்த மூரானுமை
மின்னால முண்ட சிவக்குறி சேர விதியின்வைத்தான்
சன்னுலம் பாயன நாக கிரிபண்டி தப்பெரியோன்
பொன்னுல மேந்திய மங்கையோர் பங்கன் பொருப் பிடத்தே. 371

நாககிரி பண்டிதர் மனைவி-வள்ளியம்மை.

நல்லா ளிடத்தர் கிரிவலத் தேயிடை நன்குறச்செங்
கல்லா லொருமண் டப மிசைத் தாளிக் கவினுலகிற்
பல்லா கமத்துறை தேர்நா ககிரிமா பண்டிதன்றன்
இல்லா ளெனும்வள்ளி யம்மையுள் ளன்பி னெழின்மிகுத்தே.(372)

சேனுபதிகுருக்கள்.

வானோர் மகிழுந் தமிழ்க்கோதை மாநகர் வாழ்வுபெற
மானோர் கரத்துக் கயிலாயநாதர் மகாலயத்தே
பானுனு சைவாக் கினியா னவக்கோட் பதிட்டைசெய்தான்
சேனு பதிக்குரு காசிப கோத்ரஞ் செழித்திடவே. (373)

கோக்கராயன் பேட்டை மிட்டாஜமீன்தார், பெரிய ரங்கய கவுண்டர்.

மலைவல்லி பங்கர்க்கு மாலுக்கு மானை வதனனுக்குங்
கலைவல்லவர்புகழ் தேர்களையுள்ளங் கசிந்தளித்தான்
அலைகின்ற தானிகராதியர்க் கட்சய வாண்டைப்பஞ்ச
மலைவறக் கூல § முதவிய ரங்கய வண்மையனே. (374)

---

* ஊரவர்கள்—ஐரோப்பியர்கள்.

§ கூலம்—நெல் முதலிய தானியங்கள்.

வேலவர் நின்றவி மானஞ் சுதைப்பணி த்தகராற்
கோவி நகுகன கந்தோய் கலசமுங் கூட்டியஃதும்
மாலவ னுக்கட்ட பந்தனமுஞ் செய்து மாட்சியுற்றான்
சீலன் பெரிய விரங்கய னேவைச் சிரோன்மணியே. (375)

பெருமா னடிதொழ மலையேறு மன்பரைப் பேணவன்னங்
குருமார் தரக்கட் டளையிசைத் தான்முனங் கோரைகுட்டைப்
பெருமா னுருவமுந் தோவிழா பூசை பிறவுமெல்லா
வருமான முஞ்செ யிரங்கய வித்வ மணிவிளக்கே. (376)

சித்திர வேலர் சிவாம்பிகை யாருட் டிருக்கதவம்
பித்தளை மேற்றகட் டாலமைத் தானப் பிரமலிங்கர்
கொத்தளவேலை யரனுமை காரணன் கோயின்முற்றுஞ்
சுத்தி கரம்புரி ரங்கய னான சுபாகரனே. (377)

இன்ன சகம்பதி னெண்ணூ றுடன்பதி னேழுசய
மன்னுகை லாய ரிடமார் பரிமள வல்லியம்மை
துன்னு சிகரியிற் றங்கக் கலசந் துலங்கவைத்தான்
நன்னயன் றண்டிகை வேலவன் மைந்தனி ரங்கயனே. (378)

சேகர வேதநன் னுபகர்க் கில்லமுந் தீட்சைபுரி
நாக கிரிபண் டிதருக்கு முன்மனை நல்கினனால்
நாக மலையின் வடகோ புரத்தடி நாட்டுசிவ
யோகசித் தாந்தி யிரங்கய னுமதி யூகியன்றே. (379)

கொஞ்சிட வீதி வருகுகன் கோயிலுங் கூபநந்தி
மிஞ்சு சுதைப்பணி சாயமுந் தீட்டி விளங்கவைத்தான்
செஞ்சொறில் லைப்பொன்னு சாமிநற் றீட்சிதர் செய்பணிக்கு
நஞ்சை நிலமொன்றுப் புக்கோம்பை யிற்றரு ரங்கயனே. (380)

வேங்கடேசன் செட்டி.

இல்லா னுழைத்துண்ப ளிவ்வள வுள்ள திதனைமலை
நல்லா ளிடத்தற் குதவுக வென்ன விரங்கயன்பாற்
சொல்லாட வெள்ளி விடையிசைத் தீசன்மேற் றோன்றநல
மல்லாளி பாளயத் தார்வேங்க டேச னடைந்தனனே. (381)

குமரமங்கலம் மிட்டா ஜமீன்தார், கைலாச கவுண்டர்.

வேயாருந் தோளி யுமைபாகர் மேவி விளங்கமங்கைச்
சீயால கட்டி முதலிமுன் செய்த சிகரமதிற்
காயாட கத்தக டேற்றிய நல்ல கலசம் வைத்தான்
சேயார் குமா புரிவாழ்கை லாச சிகாமணியே. (382)

அர்த்தநாரி அய்யன்.

தவக்குறை முற்று தலமாஞ்செங்கோட்டுத் தடவரைமேல்
நவக்கிர கந்தனை யன்பாய்ப் பதிட்டை நயந்துசெய்தான்
சிவத்துசச் செல்லய னுமர்த்த நாரி செழும்பணிப்பூண்
செவிக்கணி நாக கிரிபண் டிதன்றனைச் சேர்ந்தவனே. (383)

கருப்பண முதலி.

பணிகிரி மேவிடு பாண்டீசர் கோவிலைப் பாங்குறக்சற்
பணியுஞ் சுதைப்பணிச் சிகரமு மாக்கிப் பதிட்டைசெய்தான்
அணிமே விடுமுஞ் சினைக்கவுண் டன்பா ளயத்தில்வரு
கணிசநற் செங்குந்த நல்லய னீன்ற கருப்பணனே. (384)

தம்பா செட்டி.

வீட்டினை விற்றெழில் வெள்ளி மயில்செய்து வேலவருக்
கீட்டின னாறுமுகப்பெரு மாளுக் கிரதவிழா
நாட்டிலெப் போது நடக்கவென் றுள்ளமேவார் நற்கடையைத்
தீட்டினன் சாசனங் கோதை நகர்தம்பா செட்டியன்றே. (385)

VII. எட்வர்ட் சக்கரவர்த்தி. EDWARD.

பத்தொன்பதுநூற் றிரண்டுகிரிஸ் தாண்டிற் பகருமெழா
மத்தமனெட் வர்டுயர் சக்கிர வர்த்தியா யன்பர்பணி
சத்தி யிடத்தனுக் குப்பூசை யுற்சவந் தானடக்க
வித்தக வன்னையைப் போலளித் தோங்கி விளங்கினனே. (386)

தேலுங்கு சங்கமர்கள்.

மடமு மலையடி மண்டபங் கோதை மகேசனுக்கு
இடபந் தனில்வரு கல்யாண முஞ்செய் திறைஞ்சினரால்

இடவங் கையிலிங்க மேந்தியா ராதன மேத்தவல
சடலம் பொருந்தி யவராந் தெலுங்கிசை சங்கமரே (387)

விவேகாதிவாகரன் பத்திராதிபர்,
முத்துசாமிக் கோனர்.

தபதிய ரைக்கொடு கண்டசண் டேசனற் றுபனையு
முபநிட தப்பொரு ளாமுமை பாகரோ டுற்சவமுஞ்
சுபமிகு சைவ சமாஜமிக் கோதையிற் றேற்றுவித்த
விபவ னெழின் முத்துசாமி செய்தானுள் விருப்பமுற்றே. (388)

சாற்றிய வேதப் பொருளா முமைபங்கர் சந்நதியில்
நாற்றிய லஸ்தர் குலோப்புடன் லாந்தர்க ளுட்டிவைத்தான்
ஆற்றிய லாநதிருச் செங்கோட்டு மான்பிய மாக்கியன்பிற்
போற்றிய கோன்முத்து சாமி யுயரிசை பூண்டவனே. (389)

கோக்கராயன்பேட்டை,
மிட்டா ஜமீன்தார் தண்டிகைவேல கவுண்டர்.

பொன்னித் துறைமுள சைத்தண்டி கைவேற் புரவலன்கோ
வன்னத் திடத்தர் திருத்தேர் விழாவினி லையிருநாள்
பன்னித் துதிவே தியர்களுக் கன்னம் பரிந்தளித்தான்
அன்னத் தியாகி யெனத்தண் டிகைவே லகமகிழ்ந்தே. (390)

சகலா கமப்பொரு ளுண்மைய தான சதீச னிவர்ந்
திகலா மதிவரு தேர்பொல் லரைக்கொண் டெவருமெச்சச்
சகலாத்தி னுப்சித் திரித்தணிந் தான்கண்ணர் தங்கள்குலஞ்
சுகலாப மெய்துறத் தண்டிகை வேலன்பு தூண்டிடவே. (391)

கண்டிகை நான்முனி வோரறி யுண்மைக் கருத்துவிரித்
தண்டிகை நோயடு சைவ சமாஜ மனவரதஞ்
சண்டிகை போற்றிடு செங்கோட்டின் மேவித் தழைக்கவெங்கள்
தண்டிகை வேல மகிபனுஞ் ஞூறுபொன் றந்தனனே. (392)

குமாரசாமிப்பரதேசி.

ஆறு முகப்பெரு மாள்சந் நதியினி லப்புகுன்று
தூறுங் கிணறொன்று தோண்டி யிருநான் குருவாயிட்டு
நாறும் பனிமல ரீட்டுநந் தாவன நன்கமைத்தான்
கூறுந் துறவி குமாரச் சுவாமி குணமடைந்தே. (393)

V-ம் ஜார்ஜ் சக்ரவர்த்தி. GEORGE.

முன்னோ ரளித்த முறைவழுவாமன் முழுத்தொகையும்
பொன்னா ருமையொரு பாகருக் கீந்து புகழ்படைத்தான்
கன்னாவ தாரன் முடிசூட்டு வைபவக் காட்சிதரத்
தன்னேரி லாடில்லி மேவிய ஜார்ஜூ தயாபரனே. (394)

விருத்தம்.

“ இருபத்தை யாயிரஞ்சுற் றளவைமயிற் கோளத்து ளெக்கண்டத்தும், இரவிப்பே ரொளிமறையா திணையில்சயக் கொடிவிளங்க விங்கி லாந்தின், மருவிப்பல் வேறுலக மாந்தர்களும் பாராட்ட மன்னுயிர்க்கெப், பருவத்துந் துயரணுகா திருக்கவிசை விக்டோரி யாப் பனுவலாட்டி. (395)

அட்டவிலக் குமியுமொன்றா யமைந்தவத ரித்தவம்மை யரசாங் கத்துட், பட்டவுட னிவிந்த்யா புதியனவாய் விம்பிதங்கள் பலகண் டொன்றார், துட்டமகன் றவ்வவர்சிந் தனைபோல வுடுக்கவுண்ணச் சுகிக்கச் சொல்லப், பட்டவருந் தனராகப் பயமின்றிச் செல்ல நல லபாக்கிய முற்ற. (396)

அன்னாளி லரசனுக்கு மரிதான பொருளைமலை யடவி வாழ்வோர், இன்னாளி லடையவுந்தா முயருமுயற் சியிற்புகவு மேற்ற மீந்த, தன்னேரி லாதவொரு தனியரசி விக்டோரியாத் தவத்தால் வந்த, மன்னேறே ழாவதெட்வர்ட் மன்னாமன்ன னீன்றஜார்ஜ் மகியன் மாதோ. (397)

ஆயிரத்தோர் தொள்ளாயி ரம்பதினொன் றாமாண்டை யடைடிசம்பர், மேபபனி ரண்டாம்நாள் மங்களவா ரத்துமுடிவிளங்கப் பூண்டான், சியமொத்த முடியரசர் திகழுமறி வான்மிகுந்த திறலோர் மற்றைத், தேயகர்த்தர் வர்த்தமா னம்புகல்வோர் கவிவாணர் செறிந்து சூழ. (398)

ஐந்தாம்ஜார்ஜ் ஜரசன்முடி யாங்குதரித் தாலுமென்ன வரன் போற் * காட்சி, தந்தாள்வோ மாங்கென்னச் சாற்றியவாக் குறுதி

---

* கைலாயத்தில் நடந்த திருமணக்காட்சியை, ஆங்கிருக்க வியலாத அகத்தியருக்குப் பொதிகையிற் காட்டுவோமென்ற சிவபிரான் போல.

செப்பத் தலைபகூர்ந் தையன், ஐந்தாயிரத் துமயி லளவையிலே கடற் கடந்தே யரிதி னெய்திச், சந்தோட மாகவிந்த்ர ப்ரஸ்தமெனும் டில்லிநகர் தன்னை யண்மி (399)

ஆங்குநிகழ்ந் ததுபெரிதன் றவனியிலெவ் வோரிடத்து மரியமாந்தர், தேங்குசபை கூடியுல கம்புரப்போ னைக்காத்தற் றெய்வமாக, ஓங்குகலை யாதிமறை யோதுவதா லவனைப்போ லுருவையேனும், ஈங்குவைத்திந் நாளைக்கொண் டாடுவமென் றகமகிழ்ந்தே யினிதினைத்த. (400)

மங்களமா யிந்தவகை மகுடதா ரணக்காட்சி வழங்கினோர்கள், எங்குளரிம் மன்னவனே யிந்த்யாவின் மணிமகுட மேற்கவந்தோன், திங்களினுந் தண்ணியனேழ் சிந்துவினும் பெரு[illegible]யன் சிறந்த தேவர், தங்களுடை மந்திரியினு மதியூகி வாசகத்திற் சதுர தீரன். (401)

இன்னபல மேன்மையெல்லா மொருங்கெய்தப் பெற்றதிற லேந்தல் செங்கோல்,இன்னிலமு மந்நிலமு மெந்நிலமு மினிதோங்கி யேத்தத் தூய, அன்னையெனு மேரியம்மா ளகமகிழ வரியமக்களறி விலோங்க, முன்னவனும் மூவாத முதல்வனருள் நிரம்பாசி மொழிக மாதோ. (402)

சீர்விளங்கு சபைசிறக்கச் செறிந்தமருஞ் சீமான்காள் ! திகழ் பல்வேறு, பேர்விளங்கு மதத்தினருந் தரத்தினரு மழுக்காறு பேணுதொன்றி, ஏர்விளங்கு பிரியசகோ தரர்மானக் குழுமியெந்த வேந்தன் மேன்மை, பார்விளங்கு வாய்மையினாற் பேசுதுமோ வவனோங்கப் பரனை யுள்வாம்.” (403)

சேலம் ஜில்லா கலெக்டர் பெட்போர்ட். G. BEDFORD.
சங்ககிரி டிப்டி–கலெக்டர், சிவஞானம் பிள்ளை,
ஸ்டேஷனரி சப்-மாஜிஸ்திரேட்டு, ஆறுமுக முதலியார்.

கட்டளைக்கலித்துறை.

தவநா கமலை வலமுறப் பாதை தருகவெனச்
சிவஞானம் பிள்ளை சொலப்பொரு டேடிச் சிறக்கவமைத்
தவனா றுமுக முதலியெட் வர்ட்ரோட் டானெனமன்
னவனும மிட்டவன் பெட்போர்ட் மேலா கயமுறவே. (404)

சித்தளந்தூர், சுப்பராய கவுண்டர்.

மருவூருங் கோதைக் கயிலாய நாதர் மகாலயத்தின்
கருவூலத் துக்கு ளுயர்பூட் டிசைத்திறற் சாப்பமைத்தான்
தருவூருஞ் சித்தளந் தூர்க்குச்ச மீன்முத்து சாமிசுதன்
திருவூருந் தூரன் புகழ்சுப்ப ராய சுபாகரனே. (405)

மோழைக்கவுண்டன்பாளயம் வேட்டுவர்கள்.

பேறுறு கோதைநன் ஞகேசர் தூபி பெருமையொடன்
றுறை யிளையா னமைத்தன னம்மர பாளர்களிற்
றேறிடு மோழை நகரா ரரும்பொரு டேடிச்சுதைக்
கூறு பணியும் பதிட்டையுஞ் செய்து கொழுத்தனரே.(406)

தெலுங்கு செட்டிகள்.

களரொளிக் கோதையின் வைகாசி வீதிதென் கீழ்முனையில்
வளமுறக் கன்மண்டப மரர்க்காக்கி மகிழ்ச்சியுற்றார்
வளரிசைக் காஞ்சிபொற் காமாட்சி யம்மை வரத்திலுற்றுப்
தெளிவுறத் தேசா திபரெனச் சொல்லுந் தெலுங்கர்களே.

மலை வடகோபுரம்.

ஆசிரிய விருத்தம்.

தருவுலவு குமரபுரி வாழ் சுப்பராயன் சபாபதியும் ராஜப்ப
னுஞ், ஜமீன்தார்கள் தருநிதியு நாகமலை மாப்பிள்ளை தங்குசுப்பராய
னுடனே, திருவுலவு நாககிரி பண்டிதன் மீனாட்சி செங்கோட்டை
யன் நாரணன், சேரர்த்த நாரிநெய்க்கார பட்டியில்வந்த சிரத்தை
காட்டுஞ் சடையனும், பரிவுபெறு பலரிடத்துந் தேடியோடிப்
பணங்கொண்டு கற்பணிசுதைப், பணிமுடித்தனர் முத்துகிருஷ்ண
வேங்கடவணிகர் பகர்தாம்ர கலசமைந்தும், அரிதி னுதவினர்
ஜமீன் சுப்பராயன் றங்கமது பூசியவைதந்தன, ளுகவிவ் வாறுபணி
மலையின் வடகோபுர மமைந்விதமெனு முலகமே. (408)

இப்புத்தகத்தைப் பெற்றவுடன் குறித்தவாறு திருத்தஞ்செய்து வாசிக்கவேண்டும்.

பிழை திருத்தம்.

பாட்டு.	வரி.	பிழை.		திருத்தம்.
4	3	பாடகி ...	...	பாடக்
26	1	மகிழி ...	...	மகழி
29	2	மேன ...	...	மோன
30	5	நமப ...	...	நம்ப
31	2	மனேயே ...	...	மனேயே
34	2	யெய்யு ...	...	செய்யு
...	4	துகொக்...	...	துக்கொக்
35	1	பேர்கரு	...	பேர்பெரு
38	7	செயவோ	...	செய்வோ
42	1	யவன் ...	...	யன்
43	7	மாததி ...	...	மாத்தி
45	1	சப்ர ...	...	சுப்ர
46	1	பூமெவு ...	...	பூமேவு
47	6	உருபிணி	...	உறுபிணி
53	2	பரகு ...	...	பரவைகு
55	1	போகர்...	...	பாகர்
57	5	மனட ...	...	மண்ட
59	1	முப்பத் ...	...	முபத்து
65	2	பந்து ...	...	வந்து
89	4	பனுன் ...	...	பானுன்
127	2	வில்லே ...	...	வில்லே
138	7	ளுருருளே	...	ளுருளே
149	1	மைஞ்ஞாற்	...	மைஞ்ஞூற்
150	5	வடக்கோ	...	வடகோ
152	3	னியிற் ...	...	ளியிற்

பாட்டு.	வரி.	பிழை.		திருத்தம்.
...	6	றயவுவட	...	றயவுடைய
157	6	கொடிகம்	...	கொடிக்கம்
165	4	பதியோ	...	பதியே
166	1	தாயிப	...	தாபிய
170	1	வருக்குக்	...	வருக்கக்
181	2	கூறவே	...	கூரவே
183	7	திவ்ய	...	திவ்விய
...	8	மகா...	...	மகர
189	8	பலனுந்	...	பாலனுந்
213	8	டத்திநனன	...	நடத்தினன்
233	4	சுபலக்	...	சுலக்
248	6	மொருநெய்	...	மொருபடி நெய்
250	1	யீசரர் ...	...	யீசுரர்
258	5	ஞளிஞல்	...	ஞளினில்
263	8	லாலாள	...	லாள
266	5	யீகை	...	ஷீகை
269	7	வாங்கிய	...	வாங்கியே
270	1	மருமி	...	மருவுமி
275	3	பிரிவு ...	...	பரிவு
277	5	ஈல்லஸ்	...	நல்வஸ்
309	7	யாணரு	...	யாணரு
341	4	தைத்தீ	...	தைதீ
364	6	மயிலன	...	மயிலன்
373	3	பாஞலு	...	பாஞறு
375	1	பணித்த	...	பணிவித்த
407	3	றப்...	...	றத